# புதிய சமூகக்கல்வி பயிற்சிகள்

## (வினா - விடைகள்)

# 10

ஆக்கம்:
கமலா குணராசா B. A. (Cey.)
மீள்பார்வை:
க. குணராசா, B. A. Hons. (Cey.) M. A., S. L. A. S.

விற்பனையாளர்:
ஸ்ரீ லங்கா புத்தகசாலை,
காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.

விலை: ரூ. 16-50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதிரி வினாத்தாள்: 1 தரம்: 10

# சமூகக்கல்வி

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர)ப் பரீட்சை, டிசம்பர் (புதிய பாடத்திட்டம்)

## சமூகக்கல்வி 1

நேரம்: 1 மணி

(எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக)

1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4) என்று இலக்கமிடப்பட்டிருக்கும் விடைகளுள் சரியானது அல்லது மிகவும் பொருத்தமானது என நீர் கருதுவதனைத் தெரிவு செய்க. விடைத்தாளில், உமது விடையை ஒத்திருக்கும் கூட்டினுள் புள்ளடியை (X) பென்சிலால் இடுக.

1. நெடுங்கோடுகளும், அகலக்கோடுகளும் சம்பந்தமாக இலங்கையின் அமைவு நிலையம் பற்றி சரியான கூற்று எது?
   (1) மேற்கு நெடுங்கோடுகள் 79°-82° இடையிலும், வட அகலக் கோடுகள் 5°-10° இடையிலும் அமைந்துள்ளது.
   (2) கிழக்கு நெடுங்கோடுகள் 80°-82° இடையிலும், தென் அகலக் கோடுகள் 5°-10° இடையிலும் அமைந்துள்ளது.
   (3) கிழக்கு நெடுங்கோடுகள் 79°-82° இடையிலும், வட அகலக் கோடுகள் 5°-10° இடையிலும் அமைந்துள்ளன.
   (4) கிழக்கு நெடுங்கோடுகள் 80°-81° இடையிலும், வட அகலக் கோடுகள் 6°-9° இடையிலும் அமைந்துள்ளன.

2. மத்திய மலைநாட்டின் வடபகுதியில் அமைந்துள்ள மேட்டுநிலம்:
   (1) கற்றன் மேட்டுநிலம்
   (2) கண்டி மேட்டுநிலம்
   (3) வெலிமடை மேட்டுநிலம்
   (4) கொஸ்லாந்தை மேட்டுநிலம்

3. இலங்கையில் ஆண்டு வெப்பநிலை வீச்சு குறைவாக இருப்பதற்கும் பிரதான காரணம்:
   (1) கடலுக்கு அண்மையில் அமைந்துள்ளமை
   (2) குத்துயரம்
   (3) பருவக் காற்றுக்கள்
   (4) அகலக் கோட்டு நிலையம்



படம்: A

4. படம் A-யில் அ என்ற பிரதேசம்:
   (1) தென்மேல் பருவக் காற்றினால் மழையைப் பெறுகின்றது.
   (2) வருடம் முழுவதும் மழை வீழ்ச்சியைப் பெறுகின்றது.
   (3) பருவ மழையைப் பெறுகின்றது.
   (4) மேற்காவுகை மழையைப் பெறுகின்றது.

5. நீண்டுயர்ந்த மரங்களைக் கொண்ட ஒரு காடு உள்ளது. இம் மரங்களின் உச்சியில் ஒன்று சேர்ந்து ஒரு விதானமாக அமைந்துள்ளன. இக் காடு அடர்ந்த கீழ்நிலை வளரிகளைக் கொண்டிருக்காது. இக் காடு 75 அங்குலத்திற்கு மேற்பட்ட ஆண்டு மழைவீழ்ச்சியும் 80 ப°. சராசரி வெப்ப நிலையுமுள்ள ஒரு பிரதேசத்தில் உள்ளது. இது ஒரு:
   (1) உலர்வலயக் காடாகும்.
   (2) புதர்க் காடாகும்
   (3) மத்திய கோட்டுக் காடாகும்
   (4) இலையுதிர் காடாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. சேனைப் பயிர்ச் செய்கை என்பது ஒரு:

(1) நிலையான பயிர்ச் செய்கை முறை (2) வருவாய் கூடிய செய்கை முறை
(3) நிரந்தரமற்ற பயிர்ச் செய்கை முறை (4) முன்னேற்றமான பயிர்ச் செய்கை முறை

7. தேயிலை, இறப்பர், தென்னை என்பன நன்கு செய்கை பண்ணப்படும் பிரதேசங்கள் சரியான ஒழுங்கில்:

(1) இரத்தினபுரி, காலி, புத்தளம் (2) கற்றன், கேகாலை, குருநாகல்
(3) களுத்துறை, நுவரெலியா, நீர்கொழும்பு (4) பதுளை, மட்டக்களப்பு, சிலாபம்

8. இலங்கையிலே பெரும்பாலான மீனவர்களின் வாழ்க்கைத் தரம் தாழ்ந்ததாயிருப்பதற்குக் காரணம்:

(1) சூழவுள்ள கடல்களில் மீன்கள் அருகியிருத்தலாகும்.
(2) பாரம்பரியமான மீன்பிடிக்கும் முறைகளைக் கையாளுதலாகும்;
(3) அவர்களுடைய தொழில் பருவகாலத்தை ஒட்டியதாய் இருத்தலாகும்;
(4) காலநிலை அநுகூலமற்றதாய் இருத்தலாகும்.

9. இல்மனைற், படிகமணல், வெண்களி என்பன காணப்படும் இட ஒழுங்கு:

(1) புல்மோட்டை, மன்னார், காலி (2) புல்மோட்டை, மட்டக்களப்பு, கொழும்பு
(3) புல்மோட்டை, புத்தளம், திக்கவரெட்டியா (4) புல்மோட்டை, பருத்தித்துறை, நீர்கொழும்பு

10. இலங்கையில் கைத்தொழில் வளர்ச்சியின்மைக்கு ஒரு காரணமாக அமையாதது:

(1) மூலதனமின்மை (2) எரிபொருளின்மை
(3) உழைப்பு இன்மை (4) தொழில்நுட்ப அறிவின்மை

11. 13-ம் நூற்றுண்டிலே சிங்கள அரசர்கள் தமது தலைநகரைத் தம்பதெனியாவில் நிறுவியதற்கான காரணம் என்னவென்றால் அது:

(1) அந்நியநாட்டுப் படையெடுப்புக் காலங்களில் பாதுகாப்புக்கு ஏற்ற இடமாக இருந்தமையாகும்
(2) வியாபாரத்திற்கு ஏற்ற இடமாக இருந்தமையாகும்.
(3) நீர்ப்பாசன வசதிகள் கொண்ட இடமாக இருந்தமையாகும்;
(4) மலேரியா நோய் இல்லாத இடமாக இருந்தமையாகும்.

12. இலங்கையின் வியாபாரத் துறைமுகங்களாக அநுராதபுரக் காலத்தில் விளங்கியவை:

(1) மகாதீர்த்தம், நாகபட்டினம், கொழும்பு
(2) மகாதீர்த்தம், கல்யாணி, காங்கேசன்துறை
( ) மகாதீர்த்தம், கோகர்ண, காலி
(4) மகாதீர்த்தம், ஜம்புகோள, கோகர்ண

13. மக்களைக் கொண்டு இலவசமாக சகல தொழில்களையும் செய்வதை:

(1) நிலமானிய முறை என அழைத்தனர். (2) இராஜகாரிய முறை என அழைத்தனர்;
(3) கன்சபா முறை என அழைத்தனர். (4) அடிமை முறை என அழைத்தனர்.

14. 17-ம் நூற்றுண்டில் இலங்கையின் பிரதான இயற்கைப் பயிராகவும், வர்த்தகப் பயிராகவும் விளங்கியது:

(1) தென்னை (2) இறப்பர் (3) கறுவா (4) தேயிலை

15. பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்காக ஆங்கிலேயர்:

(1) இராஜகாரிய முறையை நடைமுறைப்படுத்தினர்.
(2) நெடுஞ்சாலைகள், புகையிரத வீதிகள், துறைமுகங்கள், வங்கிகள் என்பனவற்றை நிறுவினர்;
(3) பாடசாலைகள், வைத்தியசாலைகள், கிறிஸ்தவ ஆலயங்களைக் கட்டினர்;
(4) இந்திய மக்களைப் பெருமளவு இலங்கையில் குடியேற்றினர்;

16. இலங்கையில் மரணவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்குக் காரணம்:

(1) நோய்களைத் தடுத்தமையாகும் (2) நோய்களைக் குணப்படுத்தியதாகும்
(3) குடும்பத்திட்டமிடலாகும் (4) சிறந்த ஊட்டமாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. இலங்கையின் புதிய அரசியல் அமைப்பின் கீழ் நியமிக்கப்பட்டிருக்கும் (ஓம்புட்ஸ்மன்) எனப்படும் பாராளுமன்ற ஆணையாளரின் கடமை:

(1) பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டமூலங்களை நடுநிலை திறம்பாமற் செயற்படுத்துவதற்குப் பொறுப்பாயிருத்தலாகும்.

(2) நிருவாகச் செயற்பாடுகள் மூலம் தனியாளரின் உரிமைகள் மீறப்படுவதைப் பற்றிய முறைப்பாடுகளை விசாரிப்பதாகும்.

(3) பாராளுமன்றத் தலைவராக இருத்தலாகும்.

(4) அரசாங்க ஊழியரின் நியமனம், இடமாற்றம், அகற்றல், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பவை சம்பந்தமான விடயங்களில் நடவடிக்கை மேற்கொள்ளுதல் ஆகும்.


18. அண்மையில் நிகழ்ந்த தேர்தலில் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்ட முறை:

(1) அவரவர் தொகுதியில் அவர் பெற்ற பெரும்பான்மை வாக்குகளின் மூலம் ஆகும்.

(2) தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளின் விகிதாசாரப்படி மூலம் ஆகும்.

(3) தேர்தல் ஆணையாளரின் விருப்பப்படி நியமிக்கப்பட்டார்கள்.

(4) நாடு முழுவதும் அளிக்கப்படும் வாக்குகளின் எண்ணிக்கைப்படியாகும்.




(அ) (ஆ) (இ) (ஈ)

19. அ, ஆ, இ, ஈ என்ற படங்கள் குறிப்பனவற்றைப் பின்வருவனவற்றுள் எது சரியான ஒழுங்கில் எடுத்துக் காட்டுகின்றது:

(1) ஏரிகள், கடல்நீரேரி, குடா, தீவு. (2) கடல்நீரேரி, கழிமுகம், முனை, தீவு

(3) கடல்நீரேரி, முனை, குடா, தீவு (4) ஏரிகள், கழிமுகம், குடா, தீவு

20. அபிவிருத்தியடைந்து வரும் எல்லா நாடுகளுக்கும் பொதுவான ஒரு அம்சம்:

(1) சனத்தொகை வெவ்வேறு கூட்டத்தினரைக் கொண்டமைந்ததாய் இருத்தலாகும்.

(2) நகர அபிவிருத்தி விரைந்து நடைபெறுதலாகும்.

(3) அந்நியநாட்டு வியாபாரத்திலிருந்து ஏராளமான வருமானம் பெறப்படுதலாகும்.

(4) வருமானத்தின் பெரும்பகுதி உணவை இறக்குமதி செய்வதில் செலவிடப்படுவதாகும்.

21. பின்வரும் அட்டவணையில் நான்கு நாடுகளின் இறக்குமதிச் செலவினமும், ஏற்றுமதி வருமானமும் தரப்பட்டுள்ளன. இந்நாடுகளில் எந்த நாட்டின் வெளிநாட்டு நாணயமாற்று நிலை பலம் வாய்ந்ததாக அமைந்துள்ளது?

| நாடு | இறக்குமதிச் செலவு (கோடி ரூபா) | ஏற்றுமதி வருமானம் (கோடி ரூபா) |
|---|---|---|
| A | 4 | 3 |
| B | 2 | 3 |
| C | 3 | 3 |
| D | 3 | 5 |

(1) நாடு - A (2) நாடு - B (3) நாடு - C (4) நாடு - D

22. நம் நாட்டில் 15 - 65 வயதுத் தொகுதியினர் சனத்தொகையில் 56·3%. இதில் அரைப்பங்கினர் முழு நேரத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். பயன்படுத்தப்படாத வளங்கள் நம் நாட்டில் உண்டென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுக் கொள்ளப்பட்டதொரு உண்மையாகும்; இச் சூழ்நிலையில் நம் நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு நாம்;

(1) வெளிநாடுகளிலிருந்து மூலதனத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்;
(2) அபிவிருத்தியடைந்த நாடுகள் பின்பற்றும் உத்திமுறைகளை மேற்கொள்ள வேண்டும்;
(3) உள்ளூர்ச் சந்தையை மேலும் விரிவுபடுத்த வேண்டும்.
(4) எமது உற்பத்தியில் மனித உழைப்பை இன்னும் அதிகமாகப் பயன்படுத்த வேண்டும்;

23: எல்லா அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் காணப்படும் ஒரு பொதுத்தன்மை;

(1) வேலைவாய்ப்புகள் குறைவாக உள்ளமை.
(2) ஆள்வீத வருமானம் குறைவாக உள்ளமை;
(3) அந்நியச் செலாவணிப் பிரச்சனைகள் காணப்படல்
(4) வருமான இடைவெளிகள் மிகவும் அகன்று காணப்படுகின்றமை;

24: இன்று சர்வதேச வியாபாரத்தின் கோலம், அபிவிருத்தியடையும் நாடுகளுக்குப் பிரதிகூலமானது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது; இதனை இன்னும் கூடுதலாக நீதியானதாக்குவதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய மிக முக்கியமான நடவடிக்கைகள் என்னவெனில்;

(1) அபிவிருத்தியடைந்த நாடுகள் அபிவிருத்தியடையும் நாடுகளுக்கு இன்னும் அதிகமான உதவி அளித்தலாகும்.
(2) அபிவிருத்தியடைந்த நாடுகள் தமது உற்பத்திப் பொருள்களை விற்பதற்கு 'ஒபெக்' போன்ற வியாபார அமைப்புகளை உருவாக்குதலாகும்;
(3) அபிவிருத்தியடையும் நாடுகள் கைத்தொழில் அபிவிருத்திக்கு முதலிடம் கொடுத்தலாகும்.
(4) அபிவிருத்தியடையும் நாடுகளின் உற்பத்திப் பொருட்களுக்கு அபிவிருத்தியடைந்த நாடுகள் நியாயமாக விலை கொடுத்தலாகும்.

25: சூழல் மாசடைதலுக்கு இன்றைய உலகில் ஒரு பிரதான காரணியாக விளங்குவது;

(1) மலசலகூடங்களின் அதிகரிப்பு.
(2) குப்பை கூளங்களை உரமாகப் பாவித்தல்;
(3) தொழிற்சாலைகளின் புகையும் கழிவுப் பொருட்களும்;
(4) பயிர்ச் செய்கையின் விஸ்தரிப்பு;

26: ஒரு காலகட்டத்தில் பிரித்தானிய குடியேற்ற நாடுகளாயிருந்து, பின்னர் சுதந்திரம் பெற்றுள்ள நாடுகள் தொடர்பாகப் பிரித்தானியா பின்பற்றிய கொள்கையின் விசேட அம்சங்களில் ஒன்று; சம்பந்தப்பட்ட நாடுகள்;

(1) ஒரே சீரான ஆட்சிமுறை பின்பற்றப்பட வேண்டும் என்று நிர்ப்பந்தித்தமை.
(2) சர்வதேச தாபனங்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதைத் தடுத்தமை;
(3) இராணியைத் தம் தலைவியாக ஏற்றுக்கொள்ள வேண்டுமெனக் கட்டாயப்படுத்தியமை;
(4) ஒரு தனித் தாபனத்தின் கீழ் இருக்குமாறு ஊக்குவித்தமை.

27: கி. பி. 1945-இற்கும் 1930-ற்கும் இடைப்பட்ட காலத்தில் உலக நிலைமைகள் பற்றிய உண்மையல்லாத கூற்று எது?

(1) ஐக்கிய நாடுகள் சபையின் வெற்றி காரணமாக உலகப்போர் ஒன்று நிகழவில்லை;
(2) ஐக்கிய நாடுகள் சபையின் இணக்க முயற்சியால் ஒரு சில சர்வதேசப் பிணக்குகள் தீர்த்து வைக்கப்பட்டன.
(3) இக்காலப் பகுதியில் நிலவிய அமைதி காரணமாக யுத்த ஆயுதங்களின் உற்பத்தி குறைக்கப்பட்டது.
(4) பிணக்குகளும் ஆயுதமேந்திய சண்டைகளும் அடிக்கடி நிகழ்ந்துள்ள போதும் உலகப் போர் ஒன்று மூளவில்லை;

28: நாடுகளிடையே போர்கள் நடைபெறுது தடுப்பதற்காக எடுக்க வேண்டிய அடிப்படை நடவடிக்கை;

(1) சமாதான உடன்படிக்கைகளைச் செய்தல்;
(2) போர்க் கருவிகளின் உற்பத்திகளைக் கட்டுப்படுத்தல்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) அணுசக்திகளின் கண்டு பிடிப்புக்களைத் தடுத்தல்;

(4) சமாதானத்தில் பெறுமானத்தை மக்களிடையே பதியவைத்தல்;

29. ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம் அமைக்கப்பட்டதன் நோக்கம்:

(1) அங்கத்துவ நாடுகளிடையே பொருளாதார ஒருமைப்பாட்டின் மூலம் அரசியல் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்காக;

(2) அங்கத்துவ நாடுகள் தமது உற்பத்தியின் பொருட்களை விற்பதன் மூலம் பொருளாதாரத்தில் முன்னேற்றம் காண்பதற்காக.

(3) அங்கத்துவ நாடுகளிடையே ஒரே மாதிரியான சுங்கத் தீர்வைகளை ஏற்படுத்துவதற்காக;

(4) அங்கத்துவ நாடுகளின் பொருளாதாரத் திட்டங்களை மற்றைய நாடுகளும் பின்பற்ற வேண்டும் என்பதற்காக.

30. ஜனநாயக ஆட்சி முறையில் அடிப்படை அம்சம் என்னவெனில்:

(1) மத்திய அரசாங்கத்தினால் உள்ளூர் அதிகார சபைகள் கட்டுப்படுத்தப்படுவதாகும்;

(2) மக்கள் பங்குபற்றுதலாகும்;

(3) சிறுபான்மையினரின் சிறப்புரிமைகளாகும்,

(4) பெரும்பான்மையினருக்குக் கொடுக்கப்படும் சிறப்பிடம்.

31. பின்வருவனவற்றில் சனநாயக ஆட்சி ஒன்றில் மாத்திரம் அனுபவிக்கக் கூடிய உரிமை எது?

(1) வாக்குரிமை (2) அரசியல், பேச்சு, எழுத்துரிமை.

(3) மத உரிமை. (4) கல்வி கற்கும் உரிமை;

32. சனநாயக ஆட்சி முறையில் மக்களது உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமாயின் ஒவ்வொரு பிரஜையும்;

(1) கட்சியொன்றில் அங்கத்தவனாக இருத்தல் வேண்டும்;

(2) பொதுத்தேர்தலின் போது தவறாது வாக்களிக்க வேண்டும்,

(3) அரசாங்க உத்தியோகத்தனாக இருத்தல் வேண்டும்;

(4) சிறந்த அரசாங்கத்தை அமைத்ததுடன் நின்றுவிடாது அரசியல் கருமங்களில் அக்கறை கொண்டு ஈடுபட்டுத் தனது உரிமைகளைப் பயன்படுத்தல் வேண்டும்.

33. சனநாயகம் நிலவும் நாட்டில் அரசாங்கம் மக்களை;

(1) தான் விரும்பிய தொழிலைச் செய்யும்படி கட்டுப்படுத்தலாம்;

(2) தாம் விரும்பியவர்களுக்கு அரசாங்க உத்தியோகங்களை அளிக்கலாம்.

(3) குலத் தொழிலைச் செய்யும்படி கட்டளையிடலாம்;

(4) ஒருவனது கல்வித் தகைமைக்கேற்றதும், அவன் விரும்பியதுமான தொழிலைச் செய்ய உரிமையளிக்கலாம்;

தரப்பட்ட இலங்கைப் படத்தை (படம் : B) அவதானித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக;

34. படத்தில் 1, 2, 3 என இலக்கமிடப்பட்டிருப்பனவற்றின் சரியான பெயர் ஒழுங்கு:

(1) மகாவலிகங்கை, சிவனொளிபாதமலை, கல்லோயா;

(2) வளவைகங்கை, தோட்டப்பாலை, கட்டுக்கரைக்குளம்;

(3) மகாவலிகங்கை, பேதுருதாலகால, சேனநாயக்க சமுத்திரம்.

(4) வளவைகங்கை, பேதுருதாலகால, பராக்கிரமசமுத்திரம்.

35. படத்தில் 6, 7, 8, 10 என இலக்கமிடப்பட்டிருக்கும் நகரங்கள் முறையே

(1) முல்லைத்தீவு, மட்டக்களப்பு, நீர்கொழும்பு, காங்கேசன்துறை


(2) திருகோணமலை, கொழும்பு, மட்டக்களப்பு, காங்கேசன்துறை

(3) தம்பலகாமம், கொழும்பு, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம்

(4) திருகோணமலை, நீர்கொழும்பு, மட்டக்களப்பு, பருத்தித்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம்: B

36. படத்தில் கட்டுக்கரைக்குளம் (இராச்சதக்குளம்) என்பது:

(1) — 4  (2) — 8  (3) — 3  (4) — 5


37. படத்தில் 5 என்பது:

(1) நெடுந்தீவு  (2) கச்சதீவு  (3) புங்குடுதீவு  (4) காரைதீவு

38. இங்கே கொடுக்கப்பட்டுள்ள ஆசியாப் படத்தில் (படம்: C) 1 என்ற இலக்கம் காட்டுவது:

(1) வங்காளவிரிகுடா  (2) அரபிக்கடல்
(3) கல்கத்தாத் துறைமுகம்  (4) பாரசீகக்குடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம்: C

39: அதே படத்தில் 3, 4 என இலக்கமிடப்பட்டவை முறையே:

(1) இந்துக்குஸ் மலை, யாங்கிசிக்கியாங்நதி (2) சுலைமான்மலை, குவாங்கோநதி

(3) இமயமலை, யாங்கிசிக்கியாங்நதி (4) திபெத் மேட்டுநிலம், குவாங்கோநதி

40: அதே படத்தில் 4, E, 2, D என்பன முறையே:

(1) ஈரான், பாகிஸ்தான், தைவான், கம்சட்கா

(2) அராபியா, இந்தியா, ஜப்பான், கம்சட்கா

(3) ஈராக், வங்காளதேசம், பிலிப்பைன், கம்சட்கா

(4) குவைத், இந்தியா, தைவான், கம்சட்கா

## சமூகக்கல்வி: 2 நேரம்: 3 மணி

(முதலாம் வினாவுக்கும் வேறு ஐந்து வினாக்களுக்கும் விடை எழுதுக)

1: உங்களுக்குக் கொடுக்கப்பட்ட தேசப்படத்தை உற்றுநோக்கி, இந்த வினாவின் பகுதிகளுக்கு விடை எழுதுக. ஒன்று முதல் ஐந்து வரையிலான வினாக்களுக்குத் தேசப்படத்திலேயே விடையளித்து இப்படத்தை உங்கள் விடைத்தாள்களுடன் இணைத்துக் கொடுத்தல் வேண்டும். ஆறு முதல் பத்து வரையிலான வினாக்களுக்கு விடையளிப்பதற்கு உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள எழுதுந் தாளைப் பயன்படுத்துக.

(1) தேசப்படத்திற் கொடுக்கப்பட்டுள்ள நேர் கோட்டளவுத் திட்டத்திற்குரிய வகைக்குறிப் பின்னத்தை எழுதுக.

(2) இப்படப் பிரதேசத்தின் கடல் பரப்பை உரிய நிறத்தால் நிறந்தீட்டுக.


(3) 800 அடிகளுக்கு மேற்பட்ட பரப்புகளை நிழற்றிக் காட்டுக.

(4) பின்வருவனவற்றை உரிய இடங்களில் எழுதுக: கூர்புக்குன்று, சிறுகுன்று, பாலம், மணற் றடை, நெடுக்குப் பள்ளத்தாக்கு, சேற்றுநிலம், பாறைத்தொடர்.

(5) படத்தில் A என்பது ஒரு குடியிருப்பு. அதில் ஒரு மருத்துவ நிலையம், அஞ்சல் அலுவலகம், பொலிசு நிலையம் என்பனவுள்ளன. ஒரு கிறிஸ்தவ தேவாலயமும் உள்ளது; குறித்துக் காட்டுக.

(6) இப் பிரதேசத்தில் நீர் அவதானிக்கும் பிரதான வடிகால் அமைப்புகள் இரண்டைக் கூறுக; அவற்றிற்கும் தரைத்தோற்றத்திற்குமுரிய தொடர்பினை விபரிக்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




(7) பிரதான நதி கடலோடு கலக்குமிடத்தில் ஒரு சேற்றுநிலமுள்ளது: இச் சேற்றுநிலம் இங்கு காணப்படுவதற்கு காரணங்களைக் கூறுக.

(8) இப்பிரதேசத்தில் ஒரு குடியிருப்புக் காட்டப்பட்டுள்ளது; (A) அதன் வளர்ச்சிக்கு உதவிய ஒரு காரணம் தருக;

(9) B என்ற இடத்தில் ஒரு குடியிருப்பு வளர்ச்சியுற்றமைக்குரிய ஒரு காரணம் கூறுக;

(10) இப்பிரதேசத்தின் கரையோரத்தில் செய்கை பண்ணப்படும் பிரதான பயிர் யாது?

2. (i) இலங்கையின் தரைத்தோற்றப் பிரிவுகளை ஒரு புறவுருவப்படத்தில் குறித்துப் பெயரிடுக;

(ii) மலைநாட்டின் தரைத்தோற்ற இயல்புகளைச் சுருக்கமாக விபரிக்க:

(iii) தரைத்தோற்ற இயல்பு இலங்கையின் மழைவீழ்ச்சிப் பரம்பலை எவ்வகையில் நிர்ணயிக்கின்றது என்பதை விளக்குக.

3. குடிப்பெருக்கத்தின் விளைவாகத் தற்காலச் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சனை உணவுப் பற்றுக் குறையாகும்.

(i) உணவுப் பற்றுக்குறையைத் தீர்ப்பதற்கு இன்று மேற்கொள்ளப்பட வேண்டிய மூன்று முக்கிய வழிவகைகளைக் கூறுக;

(ii) ஏதாவது ஒரு வழிவகையை உதாரணமாக எடுத்து, அதனைச் சரிவர நிறைவேற்றுவதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் மூன்றினைக் கூறுக;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. (அ) புராதன காலத்தில் நிலவிய தன்னிறைவான பொருளாதாரத்தின் சீர்குலைவுக்குக் காரணங்கள் யாவை?

(ஆ) அதற்குப் பதிலாயமைந்த புதிய பொருளாதார முறைமையின் பிரதான அம்சங்களை விளக்குக.

(இ) பொருளாதாரத்தில் ஏற்பட்ட இம் மாற்றங்களோடு உண்டான சமூக மாற்றங்கள் யாவை?

5. 1972-ஆம் ஆண்டின் குடியரசின் அமைப்பின் கீழும், 1978-ஆம் ஆண்டின் சனநாயகச் சோஷலிசக் குடியரசின் கீழும், ஜனாதிபதியின்: (1) நியமனம் (2) அதிகாரங்களும் கடமைகளும் (3) நிலை ஆகியவற்றை ஒப்பிடுக.

6. இரண்டாம் உலகமகா யுத்தத்தின் பின்னர் முன்னைய சர்வதேச சங்கத்தைக் காட்டிலும் பரந்த நோக்கம் கொண்ட புதியதொரு சர்வதேச அமைப்பு வெற்றியடைந்த நாடுகளின் ஆதரவுடன் நிறுவப்பட்டது:

(i) இச் சர்வதேச அமைப்பு யாது? (ii) இச் சங்கம் எந்த ஆண்டில் நிறுவப்பட்டது?

(iii) இதன் ஆறு உறுப்புக்களின் பெயர்களை எழுதுக? (iv) பாதுகாப்புச்சபை குறித்து விளக்குக.

7. இருபதாம் நூற்றாண்டின் தொழில்நுட்ப அபிவிருத்தியின் காரணமாக, தற்கால சமுதாயம் எதிர்நோக்கும் பிரச்சினை 'சூழல் மாசடைதல்' ஆகும்,

(i) 'சூழல் மாசடைதல்' என்றால் என்ன?

(ii) சூழல் மாசடைதலுக்குக் காரணமாகவுள்ள மூன்று காரணிகளைத் தருக.

(iii) சூழல் மாசடைதலினால் எழக்கூடிய பிரதிகூலமான விளைவுகளைத் தடுப்பதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகளைத் தருக.

8. (i) ஒரு சனநாயக ஆட்சியின் பிரதான அம்சங்கள் என்ன?

(ii) அதற்காய ஒரு ஆட்சியின் வெற்றிக்கு அவசியமான நிபந்தனைகள் யாவை?

9. (i) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் எவை?

(ii) அவற்றின் பண்புகள் நான்கினைக் கூறுக.

(iii) அவை துரித அபிவிருத்தியடைவதற்குரிய வழிவகைகள் மூன்றினைக் கூறுக.

10. (i) இருபக்க வியாபாரம் என்றால் என்ன?

(ii) பலபக்க வியாபாரம் என்றால் என்ன?

(iii) வியாபார நிலுவை என்பதிலிருந்து விளங்கிக் கொள்வது யாது?

(iv) வியாபார நியதி என்பது யாது?

11. (i) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு வெளிநாட்டுதவி வழங்கும் சர்வதேச நிறுவனங்கள் யாவை?

(ii) அவற்றில் மூன்றினைப்பற்றி விளக்கம் தருக.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதிரி வினாத்தாள்: 2 தரம்: 10

# சமூகக்கல்வி

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதராதர)ப் பரீட்சை, டிசம்பர் (புதிய பாடத்திட்டம்)

சமூகக்கல்வி: 1 நேரம்: 1 மணி

(எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக)

1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4) என்று இலக்கமிடப்பட்டிருக்கும் விடைகளுள் சரியானது அல்லது மிகவும் பொருத்தமானது என நீர் கருதுவதினைத் தெரிவு செய்க. விடைத்தாளில், உமது விடையை ஒத்திருக்கும் கூட்டினுள் புள்ளடியை (X) பென்சிலால் இடுக.

1. இலங்கையின் நிலையத்தை விளக்கும் கூற்று :
   (1) இந்துசமுத்திரத்தின் மத்தியில் இந்தியாவிற்குத் தென் கிழக்கே அமைந்துள்ளது.
   (2) இந்து சமுத்திரத்தில் இந்தியாவிற்குத் தெற்கே அமைந்துள்ளது.
   (3) இந்து சமுத்திரத்தில் மத்திய கோட்டிற்குத் தெற்கே அமைந்துள்ளது.
   (4) இந்து சமுத்திரத்தில் மத்திய கோட்டிற்கு வடக்கே இந்தியாவிற்குத் தென்கிழக்கே அமைந்துள்ளது.

2. இலங்கையின் தாழ்நிலக் குன்றுகள் ;
   (1) பேதுருதாலகால, சிவனொளிபாதம், தோட்டப்பாலே, நமுனகுல
   (2) சிகிரியா, இங்கினியகல, கதிர்காமம், யாப்பகுவ
   (3) தோட்டப்பாலே, கதிர்காமம், வெஸ்மினிஸ்ரர் அபே, திம்புலாகலே
   (4) குருநாகலை, பதவேகலை, பேதுருதாலகால, ரிடிகல

3. இலங்கையின் ஆண்டிற்குரிய சராசரி வெப்பநிலை 80°ப. ஆகும். இதற்குக் காரணம்:
   (1) தரைத்தோற்ற வேறுபாடுகள் ஆகும்.
   (2) மத்திய கோட்டுப் பிரதேசத்தில் அமைந்திருப்பது ஆகும்.
   (3) இலங்கையின் சிறிய பரப்பு ஆகும்.
   (4) கடற்காற்றுக்கள் வீசுவதாகும்.

4. இலங்கை தமது அமைவு நிலையம் காரணமாகச் சூரியனின் விளைவைப் பூரணமாகப் பெறுகிறது. நிலத்திலும் நீர்ப்பரப்பிலும் சூரிய ஒளியின் விளைவுகள் வித்தியாசமானவை. இதனால் தரைக் காற்றுகளும் கடற்காற்றுகளும் உண்டாக்கி இலங்கைக்கு மழையைக் கொடுக்கின்றன. இவ்வகையான மழைக்கு வழங்கும் பெயர்.
   (1) மேலைக் காற்றுக்களாற் பெறப்படும் மழை. (2) பருவக்காற்று மழை.
   (3) உகைப்பு (மேற்காவுகை) மழை. (4) சூறாவளியாற் பெறப்படும் மழை.

5. இக் காடுகளில் உயரம் குறைந்த மரங்களும், முட்செடிகளும் புதர்களும் காணப்படுகின்றன. மரங்கள் உயரம் குறைந்தனவாக இருந்தாலும் கிளைகள் நிறைந்தனவாயும், அடிமரம் முறுக்கப்பட்டதாயும், சில மரங்கள் முட்களையுடையனவாயும் மெழுகுத் தன்மை வாய்ந்த இலைகளையுடையனவாயும் காணப்படும் இயற்கைத் தாவரம் :
   (1) முட்காடுகள் (வறள் நிலவளரிகள்) (2) உலர் பருவக் காற்றுக் காடுகள்
   (3) ஈரப் பருவக் காற்றுக் காடுகள் (4) மலைப் பிரதேசக் காடுகள்

6. இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் தேயிலைக்கு உயர்ந்த விலைகள் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பங்களும் உள. இத்தகைய சந்தர்ப்பங்கள் உண்டாவது ஏனெனில் :
   (1) வேறு நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை ஏற்படுத்தும் போட்டி
   (2) இலங்கைத் தேயிலையின் தன்மை காலத்திற்குக் காலம் வேறுபடுவதாலாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) வேறுபான வகைகளின் போட்டி ஏற்படுவதால்
(4) சில மேலை நாடுகளில் தேநீர் பருகுவது பருவகாலங்களை ஒட்டி அதிகரித்தும் குறைந்தும் வருவதனாலாகும்.

7. மனிதனுக்குத் தீங்கு விளையாத வகையிலே விவசாயப் பீடைப் பிராணிகளை அழிப்பதற்கு மிகச் சிறந்த முறை :
(1) பீடை எதிர்ப்பு விதைகளை விதைத்தலாகும்.
(2) விதைகளையும் பயிர்களையும் சரியான பருவகாலத்தில் நடுதலாகும்.
(3) இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்தலாகும்.
(4) ஒட்டுண்ணிகளைப் புகுத்தலாகும்.

8. நீர்ப்பாசன வசதிகளை அபிவிருத்தி செய்வதால் நன்கு பயனடையும் பிரதேசம் :
(1) உயர் வலயத்தாழ் நிலம் (2) தென்மேற்குப் பகுதி
(3) ஈரவலயத் தாழ்நிலம் (4) மலைநாடு

9. இப்பிரதேசம் சராசரி வெப்பநிலையாக 82° ப: ஐயும், 50"-க்கும் 75"-க்கும் இடைப்பட்ட குறைவான மழை வீழ்ச்சியையும் கொண்டது. ஏறத்தாழ இப் பிரதேசம் முழுவதையும் சுண்ணக் கற்படை ஒன்று மூடுகின்றது. சுண்ணக்கல் நீரைத் தேக்கி வைப்பதில்லை. நீர் கசிந்து செல்ல அனுமதிக்கும். இக் கூற்று இலங்கையின் ஒரு பிரதேசம் பற்றிய விபரமாகும். இது இலங்கையின்
(1) மலைப்பிரதேசமாகும் (2) தென்மேற்குத் தாழ்நிலமாகும்
(3) வரண்ட பிரதேசமாகும் (4) யாழ்ப்பாணக் குடாநாடாகும்

10. பின்வரும் இடத் தொகுதிகளுள் இரத்தினக்கற்கள் காணப்படும் தொகுதி எது?
(1) இரத்தினபுரி, எலஹர, ஒக்கம்பிட்டிய
(2) இரத்தினபுரி, பொறலஸ்கமுவ, தெக்கம்பிட்டிய
(3) இரத்தினபுரி, புல்மோட்டை, எலஹர
(4) இரத்தினபுரி, மாரவிலை, எலஹர

11. கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுவதில் போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் தோல்வியுற்றமைக்குரிய பிரதான காரணம் :
(1) கண்டி அரசர்களின் படையானது படையெடுத்து வந்தோரின் படைகளிலும் பார்க்க வலிமை மிக்கதாயிருந்தமையாகும்.
(2) போர்த்துக்கேய ஒல்லாந்தப் படைத் தலைவர்கள் போர்க் கலையில் திறமையற்றவர்களாக இருந்தமையாகும்.
(3) அந்நியர்கள் சேவையில் அமர்த்திய உள்ளூர்ப் போர்வீரர்கள் அவர்களைக் கைவிட்டுக் கண்டியர் பக்கம் சேர்ந்தமையாகும்.
(4) நாட்டின் பௌதிக உறுப்புக்களை நனிசிறந்த வகையிற் பயன்படுத்திப் போர் முறைகளைக் கண்டி அரசர் கையாண்டமையாகும்.

12. 13-ம் நூற்றுண்டளவில் இராசதானியும், மக்களும் தென்மேற்காகப் புலம் பெயர்ந்தமைக்கான முக்கிய காரணம்.
(1) சோழர் ஆட்சி (2) கலிங்கமாகனின் ஆட்சி
(3) சிங்கள அரசர்களிடையே ஏற்பட்ட குழப்பங்கள் (4) பாண்டியரின் படையெடுப்பு

13. பிரித்தானியர் காலத்தில் இலங்கையின் பொருளாதார முறை மாற்றமுற்றதற்கான பிரதான காரணம்.
(1) பணப் புழக்கமும் வங்கித் தொழிலும் பரவியமையாகும்.
(2) பணப்பயிர் செய்கைக்கு முன்னுரிமை கொடுக்கப் பட்டமையாகும்.
(3) பிரித்தானியாவில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டமையாகும்.
(4) உணவுப் பயிர்ச் செய்கை பற்றிய அறிவு இல்லாமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. பொலநறுவைக் காலத்தில் இலங்கையுடன் வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்த நாடுகள்:
 (1) இந்தியா, யப்பான், பிரித்தானியா, அமெரிக்கா
 (2) இந்தியா, எகிப்து, பிரித்தானியா, பிரான்ஸ்
 (3) பர்மா, தாய்லாந்து, அவுஸ்திரேலியா, சீனு
 (4) பர்மா, இந்தியா, சீனு, அராபியா

15. இலங்கை வெளிநாட்டினரின் உணவுப் பொருட்களில் தங்கியிருக்கும் நிலைமை ஏற்பட்ட காலம்:
 (1) ஜனநாயக ஆட்சி நடைமுறைப் படுத்தப்பட்டபோது
 (2) குடியேற்ற நாடாக இருந்தபோது
 (3) பயிர்ச் செய்கைக்கு வேண்டிய மழை கிடைக்காத காலத்தில்
 (4) அந்நிய நாட்டவர் இலங்கையை கைப்பற்றுவதற்கு முன்னர்

16. இலங்கையின் மொத்த விளைநிலமான 16.2 கோடி ஏக்கரை 1 கோடியே 40 இலட்சம் மக்களுக்குப் பகிர்ந்து அளிக்கும்போது ஒவ்வொருவருக்கும் 1.1 ஏக்கரே கிட்டுகின்றது; 2001-ஆம் ஆண்டில் 0.7 ஏக்கரே ஒருவருக்குக் கிடைக்கும்; இதன் அர்த்தம்:
 (1) இலங்கையில் செய்கை பண்ணக்கூடிய விளைநிலத்தின் பரப்பை அதிகரிக்கவேண்டும்;
 (2) இலங்கையின் குடித்தொகை அதிகரித்து வருவதால் நிலப்பிரச்சினை உருவாகிறது.
 (3) இலங்கையில் விவசாயிகளின் எண்ணிக்கை 2001-ம் ஆண்டு அதிகரிக்கப் போகிறது;
 (4) இலங்கை கைத்தொழிலாக்கங்களில் ஈடுபடவேண்டியது அவசியமாகும்;

17. எதிர்காலத்தில் செயற்படவிருக்கும் புதிய பாராளுமன்றத் தேர்தல் முறைப்படி:
 (1) ஒரு தொகுதியில் வெற்றி பெறும் அபேட்சகர் அத்தேர்தல் தொகுதியில் அளிக்கப்பட்ட வாக்குகளில் ஐம்பது சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெறுதல் வேண்டும்;
 (2) சுயேச்சை அபேட்சகர்கள் போட்டியிடுவதிலிருந்து தடுக்கப்பட்டுள்ளனர்;
 (3) நாடு முழுவதும் அளிக்கப்படும் விகிதாசாரப்படி ஆசனங்கள் ஒதுக்கப்படும்;
 (4) ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் அளிக்கப்படும் வாக்குகளின் விகிதாசாரப்படி ஆசனங்கள் ஒதுக்கப்படும்;

18. அரசாங்க உத்தியோகத்தர்கள், பகிரங்கக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்கள் இவை போன்ற வேறு நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் தங்களது செயல்கள் மூலம் தனி மனிதனுக்கு அநீதி இழைக்கப்படும் போது, அவற்றை விசாரிக்கும் அதிகாரம் படைத்தவர்:
 (1) ஜனாதிபதி (2) பிரதம மந்திரி (3) ஒம்புட்ஸ்மன் (4) தவிசாளர்

19. நாம் அரசியல் சுதந்திரம் பெறும் வரை உள்ள காலப்பகுதியில் நமது பாராளுமன்ற உறுப்பினர்களில் காணப்பட்ட பொதுவான அம்சம் என்னவெனில், சகல அங்கத்தவர்களும்:
 (1) சமயத்தில் பௌத்தர்கள் (2) இலங்கைத் தேசிய பிரசைகள்
 (3) ஆங்கிலக் கல்வி பயின்றவர்கள் (4) சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்தவர்கள்

20. ஒரு நாட்டின் அபிவிருத்தியை மிகத்திறம்பட எடுத்துக் காட்டும் அம்சம்:
 (1) அங்கே மொத்தத் தேசிய வருமானம் அதிகரித்து வருவதேயாகும்;
 (2) அங்கே மக்களின் வாழ்க்கைத்தரம் சீர்திருந்தி வருவதேயாகும்;
 (3) மாடிக் கட்டிடங்களின் நிருமாணம் விரைவாக அதிகரித்து வருவதாகும்;
 (4) தொழிற்சாலைகளின் எண்ணிக்கை விரைவாக அதிகரித்து வருவதாகும்;

21. ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்கச் சமக்காரரின் மிகக் கடுமையான வறுமைக்குப் பிரதான காரணம்:
 (1) அவர்கள் பயிர் செய்யும் நிலம் பெரும்பாலும் வளமற்றதாயிருத்தலாகும்;
 (2) மத்திய கோட்டிற்கு அண்மையிலுள்ள பிரதேசங்களில் வறட்சிக் காலங்கள் அடிக்கடி ஏற்படுதலாகும்;
 (3) அவர்கள் விவசாயத்திற்குப் பாரம்பரியமான முறைகளைத் தொடர்ந்து கையாளுதலாகும்;
 (4) அவர்கள் தமது ஏற்றுமதிப் பொருள்களுக்கு நியாயமான விலையைப் பெறுவமையாகும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. கி. பி. 2000-ஆம் ஆண்டில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் சனத்தொகைக்கும் வருமானத்துக்குமுள்ள விகிதம் 5 : 1 ஆகும். அபிவிருத்தியடைந்த நாடுகளின் சனத் தொகைக்கும் வருமானத்திற்குமுள்ள விகிதம் 1 : 20 ஆகும். இதிலிருந்து புரிந்து கொள்வது :

(1) அபிவிருத்தியடைந்த நாடுகளினதும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளினதும் சனத் தொகை அதிகரிக்கின்றது.

(2) அபிவிருத்தியடைந்த நாடுகளினதும், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளினதும் தனி ஆள் வருமானம் எதிர் காலத்தில் சமமாக இருக்கும்;

(3) அபிவிருத்தியடைந்த நாடுகளின் சனத் தொகை அதிகரிக்கும் வேளையில் அவற்றின் வருமானம் அதே விகிதத்திற் குறைந்து கொண்டே செல்லும்;

(4) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் சனத் தொகை அதிகரிக்க அதே விகிதத்தில் தனி ஆள் வருமானம் அதிகரிக்கமாட்டாது.

23. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளைக் குறிக்கும் சரியான தொகுதி :

(1) பிரித்தானியா, பிரான்ஸ், சுவீடன், டென்மார்க்

(2) சவுதி அரேபியா, ஈரான், குவைத், இத்தாலி

(3) இந்தியா, இலங்கை, நைஜீரியா, உகண்டா

(4) ஈராக், ஈரான், ஜப்பான், நியூசிலாந்து

24. அபிவிருத்தி என்பது :

(1) பொருளாதார வளர்ச்சியின் நிறைவைக் குறிக்கும்;

(2) மனித சுதந்திரத்தின் நிறைவைக் குறிக்கும்;

(3) மனித ஆளுமை வளத்தின் நிறைவைக் குறிக்கும்;

(4) உணவூட்டத்தின் நிறைவைக் குறிக்கும்.

25. விவசாயத்தில் சூழலை நீண்டகால நோக்கில் மாசுபடுத்தும் காரணியாக அமைவது :

(1) வளமாக்கிகளை மிகையாகப் பயன்படுத்துதல்

(2) கலப்பு இன விதைகளைப் பயன்படுத்துதல்

(3) இயந்திரமயமான உழுதல் முறையைக் கைக்கொள்ளுதல்

(4) சுழற்சிப் பயிர்ச் செய்கை முறைகளைப் பின்பற்றுதல்

26. சில நாடுகளில் கறுத்தவருக்கும் வெள்ளையருக்குமிடையேயுள்ள பிணக்குகளுக்குப் பிரதான காரணம் :

(1) கறுத்தவர்களைத் தாழ்ந்த மட்டத்தில் வைத்திருப்பதற்கு வெள்ளையர் செய்யும் முயற்சிகளாகும்;

(2) கறுத்தவர்களின் நிறமும் சோம்பல் குணமும் பற்றி வெள்ளையர் கொண்டுள்ள வெறுப்பாகும்;

(3) வெள்ளையரின் மேம்பட்ட இயற்கை நுண்மதி பற்றிக் கறுத்தவர் கொண்டுள்ள பொறாமையாகும்;

(4) வெள்ளையரின் உடைகளைச் சட்ட விரோதமாகக் கறுத்தவர் பெறுவதற்குச் செய்யும் முயற்சியாகும்;

27. ஐரோப்பிய நாடுகள் நமது குடியேற்ற நாடுகளில் பின்பற்றிய அடிப்படைப் பொருளாதாரக் கொள்கை :

(1) குடியேற்ற நாடுகளிலுள்ள கைத்தொழில் மூலப் பொருட்களின் உற்பத்தியை விருத்தி செய்தல்;

(2) குடியேற்ற நாடுகளில் புடைவை, உணவு உற்பத்தியை விருத்தி செய்தல்;

(3) குடியேற்ற நாடுகளில் பிரதியீடுகளின் உற்பத்தியை விருத்தி செய்தல்;

(4) குடியேற்ற நாடுகளில் கைத் தொழிற் பொருள்களின் உற்பத்தியை விருத்தி செய்தல்;

28. இரண்டாம் உலகப் போருக்கான பிரதான காரணம் :

(1) நட்பு நாடுகளிடையே ஒற்றுமையில்லாமையாகும்.

(2) ஜேர்மனியில் நாற்சிசம் (நாசிவாதம்) பரவியமையாகும்;

(3) படைக் குறைப்பு முயற்சி தோல்வியுற்றமையாகும்.

(4) வேர்செயில்ஸ் உடன்படிக்கையிலிருந்து தோன்றிய மனக்குறையாகும்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. 'உடீடாட்' நிறுவனத்தின் செயல்திட்டம் யாதெனில்:

(1) குறைவிருத்தி நாடுகளுக்கு அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளை உதவச் செய்வது;
(2) நாடுகளிடையே அமைதியையும் ஒற்றுமையையும் ஏற்படுத்துவது;
(3) வெவ்வேறு பொருளாதார அமைப்பினையுடைய நாடுகளிடையே பேச்சுவார்த்தைகளினுல் வர்த்தக ஒருமைப்பாடு, வர்த்தகக் கொள்கை என்பனவற்றை ஏற்படுத்தல்.
(4) 'மார்ஷல்' திட்டமூலம் நிதியுதவியை அங்கத்துவ நாடுகளுக்கு அளித்தல்;

30. ஒரு சனநாயக சமூகத்தில் எதிர்க்கட்சியின் கடமை யாது?

(1) அரசாங்கக் கட்சியைக் கண்டிக்கும் அதே வேளையில் அவசியமானபோது அதனுடன் ஒத்துழைத்தலாகும்;
(2) அரசாங்கக் கட்சியின் மும்மொழிவு ஒவ்வொன்றையும் வன்மையாகக் கண்டிப்பதாகும்;
(3) அரசாங்கத்திற் கெதிராகக் கிளர்ந்தெழுமாறு மக்களைத் தூண்டுவதாகும்;
(4) அரசாங்கக் கட்சி நெறி விலகிப் போகும் போதெல்லாம் அதனைச் சரியான வழியில் நெறிப் படுத்துவதாகும்;

31. சனநாயக உரிமைகளைப் பாதுகாத்தற் பொருட்டுக் கட்டாயமாக நிறைவேற்றப்பட வேண்டிய நிபந்தனை எதுவெனில்:

(1) நீதித்துறையானது தகவில்லா ஆதிக்கத்திற்குட்படாது சுதந்திரமாக இருத்தல் வேண்டும் என்பதாகும்;
(2) பாதுகாப்புச் சேவைகள் வல்லமையுள்ளவையாக இருத்தல் வேண்டும் என்பதாகும்;
(3) நிருவாகம் திறமையுள்ளதாக இருத்தல் வேண்டும் என்பதாகும்;
(4) வாக்களித்தல் கட்டாயமாக்கப்படுதல் வேண்டும் என்பதாகும்;

32. ஒரு சனநாயக ஆட்சியில் எதிர்க்கட்சிக்குப் பணிமுறைப் பதவிநிலை (உத்தியோக அந்தஸ்து) அளிக்கப்படுவது ஏனெனில்:

(1) அது நிர்வாக செயன் முறையின் இன்றியமையாத ஓர் உறுப்பாக இருக்கின்றமையால்;
(2) அது தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளைக் கொண்டிருப்பதால்;
(3) எதிராளிகளின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கு அது உதவுகின்றமையால்;
(4) தீர்மானஞ் செய்வதில் தாமதம் உண்டாவதை அது தவிர்க்கக் கூடுமாகையால்;


33. நான்கு வித்தியாசமான சமூகங்களிற் காணப்படும் சில அம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது; சனநாயகம் மிகவும் வெற்றிகரமாக நிலைக்கக் கூடிய சமூகத்தைக் காட்டும் அம்சங்களின் தொகுதி எது?


(1) கல்வி விருத்தி ஓங்கியுள்ளது; சிறு தொகையினரே பணக்காரர்; பெரும்பாலோர் வறியவர்; அரசியற் கட்சிகள் பல உள்ளன.
(2) அரசியல் விழிப்புணர்ச்சி ஓங்கியுள்ளது; வருமானங்களினது வித்தியாசம் பெரிதன்று; அரசியற் கட்சிகள் பல உள்ளன.
(3) சிறு தொகையினரே கல்வி கற்றவர்; வருமானங்கள் சமமானவை; ஒரே ஒரு அரசியற் கட்சியே உண்டு.
(4) எல்லாரும் கல்வி கற்றுள்ளனர்; பெருந் தொகையினர் தமது அடிப்படைத் தேவைகளைப் பெறமுடியாதவராய் இருக்கின்றனர்; ஒரே ஒரு அரசியற் கட்சியேயுண்டு;

34. ஒரு பொதுத் தேர்தலின் போது மதியூகம் உள்ள ஒரு வாக்காளன்:

(1) எந்த அபேட்சகருக்காயினும் வாக்களித்தல் தனது கடமை என்ற நம்பிக்கையில் செயலாற்றுவான்;
(2) அபேட்சகரின் தனிப்பட்ட குணதிசயங்களை அடிப்படையாகக் கொண்டு வாக்களிப்பான்;
(3) கட்சிக் கொள்கைகளை நன்கு விளங்கிக் கொண்டு வாக்களிப்பான்;
(4) தனது சொந்த நன்மையை மனதிற்கொண்டு வாக்களிப்பான்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




35. இங்கே கொடுக்கப்பட்டுள்ள இலங்கைப் படத்தில் D என்ற நதி :
(1) தெதுறுஓயா, (2) களனி கங்கை; (3) மகாவலி கங்கை; (4) வளவை கங்கை;

36. பண்டுகாபய மன்னன் அமைத்துக் கொண்ட தலைநகரம் :
(1) C (2) B (3) A (4) E

37. அதே படத்தில் E என்பது :
(1) பாக்குநீரிணை (2) காங்கேசன்துறை
(3) யாழ்ப்பாணம் (4) பருத்தித்துறை

38. இங்கே கொடுக்கப்பட்டுள்ள உலகப்படத்தில் ஈ என்பது :
(1) வங்காளவிரிகுடா (2) பாரசீகக்குடா
(3) அராபிக்கடல் (4) செங்கடல்

39. அதே படத்தில் B என்ற கோடு :
(1) மத்தியகோடு (2) கிரீன்விச்கோடு
(3) கடகக்கோடு (4) மகரக்கோடு


40. அதே படத்தில் C, D என்பன முறையே :
(1) பிரித்தானியா, பபின்தீவு (2) ஐஸ்லாந்து, பிரித்தானியா
(3) கிரீன்லாந்து, ஐஸ்லாந்து (4) கிரீன்லாந்து, பிரித்தானியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமூகக்கல்வி: 2** **நேரம்: 3 மணி**

(முதலாம் வினாவுக்கும் வேறு ஐந்து வினாக்களுக்கும் விடை எழுதுக)

1. கொடுக்கப்பட்ட படம் இலங்கை ஓரங்குல நிலவளவைப் படத்தின் ஒரு பகுதியாகும். படத்தில் காட்டக்கூடிய விடைகளை படத்தில் குறிக்க; மற்றவற்றை எழுதுந்தாளில் விபரிக்க.




(1) படத்தில் காட்டப்பட்டுள்ள அளவுத் திட்டத்தைச் (i) சொல்லிலும் (ii) வகைக்குறிப் பின்னத்திலும் எழுதுக.

(2) 500 அடிகளுக்கு மேற்பட்ட பகுதிகளை நிழற்றிக் காட்டுக.

(3) சிறு குன்று, மாகாண எல்லை, பாழடைந்த குளம், பாலம், சமவெளி என்பனவற்றை உரிய இடங்களில் எழுதுக.

(4) நெல் செய்கை பண்ணக்கூடிய ஒரு பகுதியை வழக்கக் குறியீட்டால் நிழற்றிக் காட்டுக.

(5) படத்தில் காட்டப்பட்டுள்ள நதி பாய்கின்ற திசையை விபரிக்க.

(6) படத்தில் ஒரு குடியிருப்புக் காணப்படுகிறது.
(i) இது என்ன குடியிருப்பு? (ii) இங்கு காணப்படுவன யாவை?

(7) இப்பிரதேசத்தில் செய்கை பண்ணப்படும் பிரதான பயிர்கள் யாவை?

(8) இப்பிரதேசத்தின் மொத்தப் பரப்பளவு எத்தனை சதுரமைல்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. (i) இலங்கைக்கு மழைவீழ்ச்சி எவ்வெவ்வகையில் கிடைக்கின்றது?
(ii) அவற்றில் ஒன்றினைச் சுருக்கமாக விபரிக்க.
(iii) மன்னார்ப் பகுதி இலங்கையில் மிகக் குறைவாக மழையைப் பெறுவதற்குரிய காரணங்களைக் கூறுக.

3. (அ) இலங்கை, உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை எனச் சுருக்கமாக விபரிக்க.
(ஆ) தற்போது இலங்கை எதிர்நோக்கும் நெருக்கடியான ஒரு பிரச்சினை, வேலையின்மைப் பிரச்சினையாகும். இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை எனச் சுருக்கமாக விபரிக்க.

4. இலங்கையில் ஒரு சுதந்திர வர்த்தகவலயத்தை நிறுவியதனால் உண்டாகும் நன்மைகளையும் பிரதி கூலங்களையும் பின்வரும் தலையங்கங்களின் கீழ் கூறுக.
(1) மூலதனமும் முதலீடும் (2) உழைப்பும் தொழிற்பேறும் (3) மூலப்பொருள்களும் வழங்கலும்

5. (i) எமது நாட்டில் வாக்குரிமையுடையவனாக இருப்பதற்கு வேண்டிய தகைமைகள் எவை?
(ii) வாக்குரிமையுடைய ஒவ்வொருவனதும் மூன்று கடமைகளையும் உரிமைகளையும் எழுதுக.
(iii) பொதுத்தேர்தலில் அபேட்சகராகப் போட்டியிடுவதற்கு ஒருவனுக்கிருக்க வேண்டிய தகைமைகள் எவை?

6. (i) உலக உணவு - விவசாய நிறுவனம் (*FAO*) எந்த ஆண்டு நிறுவப்பட்டது?
(ii) இந் நிறுவனம் எதன் கீழ் செயலாற்றுகின்றது?
(iii) இந் நிறுவனத்தின் பிரதான குறிக்கோள்களைக் கூறுக.
(iv) இந் நிறுவனத்தின் செயற்றிட்டத்தை விபரிக்க.

7. (i) பெரும்பான்மை மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தையுடைய சனநாயக ஆட்சி யொன்றில் எதிர்க் கட்சி இருப்பது அவசியமா? விளக்கம் தருக.
(ii) இதனை ஏன் மாற்று அரசு என்றழைப்பர்?
(iii) எதிர்க் கட்சியின் கடமைகள் எவை?

8. (i) 'பொருளாதார அபிவிருத்தி' என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
(ii) சில நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கு அந்நிய நாட்டு உதவி ஏன் அவசியமாகின்றது?

9. (i) வியாபாரக் கூட்டுகள் இரண்டினைக் கூறுக.
(ii) அவற்றைச் சுருக்கமாக விபரிக்க.

10. (i) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு வெளிநாட்டு உதவிகள் எவ்வகையில் கிடைக்கின்றன?
(ii) இலங்கை பெறும் வெளிநாட்டு உதவிகளை விளக்குக.

11. உலக உணவுப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதற்கு உணவு உற்பத்தியைப் பெருக்கிக் கொள்வது ஒரு வழியாகும். உணவு உற்பத்தியை எவ்வித நடவடிக்கைகள் மூலம் பெருக்க முடியும் எனச் சுருக்கமாகக் கூறுக.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாதிரி வினத்தாள்: 3 தரம்: 10

# சமூகக்கல்வி

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர)ப் பரீட்சை, டிசம்பர் (புதிய பாடத்திட்டம்)

**சமூகக்கல்வி 1** **நேரம்: 1 மணி**

*(எல்லா வினக்களுக்கும் விடை எழுதுக)*


**1 தொடக்கம் 40 வரையுள்ள வினக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4) என்று இலக்கமிடப்பட்டிருக்கும் விடைகளுள் சரியானது அல்லது மிகவும் பொருத்தமானது என நீர் கருதுவதனைத் தெரிவு செய்க; விடைத்தாளில், உமது விடையை ஒத்திருக்கும் கூட்டினுள் புள்ளடியை (X) பென்சிலால் இடுக:**

1. வாழ்க்கைப் பயிர்ச்செய்கை மூலம் தமது சுய தேவையைப் பூர்த்தி செய்துவந்த இலங்கை மக்களின் பொருளாதார வாழ்க்கை, வர்த்தகப் பயிர்ச் செய்கையாக மாற்றமடைந்ததற்குக் காரணம்.
   - (1) இலங்கை இந்துசமுத்திரத்தின் மத்தியில் அமைந்திருக்கும் நிலைய முக்கியத்துவத்தினுல் ஆகும்;
   - (2) இலங்கை இந்தியாவிற்கு அருகே அமைந்திருப்பதனுல் ஆகும்;
   - (3) இலங்கையில் போர்த்துக்கேயர் ஆதிக்கம் செலுத்தியதால் ஆகும்;
   - (4) இலங்கையின் மத்தியில் மலைநாடு அமைந்து இருப்பதனுல் ஆகும்;

2. இலங்கையின் ஆறுதின்ற சமவெளி।
   - (1) மலைநாட்டினைச் சுற்றிக் காணப்படுகின்றது;
   - (2) மலைநாட்டின் தெற்கில் உள்ளது;
   - (3) மலைநாட்டின் வடக்கில் உள்ளது;
   - (4) மலைநாட்டின் மேற்கில் உள்ளது;

3. கொழும்பு நகரத்தின் பகல் வெப்பநிலை சுமார் 80°F (27°C) ஆகும்; ஆனுல் நுவரெலியாவின் பகல் வெப்பநிலை 60°F (16°C) ஆகும்; இதற்குப் பிரதான காரணமாக இருப்பது பின்வருவனவற்றுள் எது தொடர்பாக வித்தியாசமாகும்.
   - (1) காற்றுக்களின் செல்வாக்கு
   - (2) அகலக்கோடு
   - (3) கடலிலிருந்து அமைந்துள்ள தூரம்
   - (4) கடல் மட்டத்திற்கு மேலான உயரம்;

4. படம் A யில் இலங்கையில் கிடைக்கப்பெறும் ஒருவகை மழை வீழ்ச்சி ஏற்படுவதற்கான ஒரு முறையைத் தரப்பட்டுள்ள படம் காட்டுகின்றது. அது।
   - (1) பருவக்காற்று முறை;
   - (2) மேற்காவுகை முறை;
   - (3) சூருவளி முறை;
   - (4) வியாபாரக் காற்று முறை;



படம்: A

5. இலங்கையைப் பொறுத்தவரை இயற்கைத் தாவரத்தை நிர்ணயிக்கின்ற மிக முக்கிய காரணிகள்।
   - (1) மழைவீழ்ச்சியின் அளவும் பரம்பலும்;
   - (2) மண், மழைவீழ்ச்சி, வெப்பநிலை;
   - (3) மழைவீழ்ச்சி, வெப்பநிலை, சூரிய ஒளியின் அளவு;
   - (4) மண், மழைவீழ்ச்சி, சூரிய ஒளியின் அளவும் பரம்பலும்।

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. சராசரி 80 அங்குல மழைவீழ்ச்சியும் 75° ப வெப்ப நிலையுமுள்ள பருவ வரட்சியும், பருவ மழையும் உள்ள சமவெளியில் செய்கை பண்ணக்கூடிய பயிர்கள்;

(1) நெல், தென்னை, குரக்கன், (2) நெல், றப்பர், கொக்கோ;
(3) நெல், தேயிலை, றப்பர் (4) நெல், கொக்கோ, றப்பர்;

7. இலங்கையில் அண்மைக் காலங்களில் உப உணவுச் செய்கை அதிகரித்து வந்துள்ளதற்கு முக்கிய காரணம்:

(1) காலநிலை வாய்ப்பாக இருப்பது;
(2) இறக்குமதிக் கட்டுப்பாடு;
(3) ஏழை விவசாயிகளின் வருமானம் அதிகரித்தது;
(4) சுலபமாகப் பயிரிடக்கூடியதாக இருப்பது.

8. இலங்கையில் மீன்பிடித் தொழில் பெரும்பாலும் கடற்கரையை அடுத்துள்ள ஆழமில்லா நீரிலேயே நடைபெறுகிறது: இதற்குக் காரணம்:

(1) ஆழமில்லா நீரிற் பிடிக்கப்படும் மீன்கள் ஆழ்கடல் மீன்களைக் காட்டிலும் சுவையானவை யென்றும் கருதப்படுகின்றமையாகும்;
(2) மீன் பிடிக்கும் உரிமை இலங்கையைச் சுற்றியுள்ள கடலின் கரையிலிருந்து 3 மைல் தூரம் வரைக்குமே என்றுடன வரையறுக்கப்பட்டிருக்கின்றமையாகும்;
(3) ஆழமற்ற நீரில் போதிய மீன் கிடைப்பதால் ஆழ்கடலில் மீன் பிடித்தல் அவசியமில்லாமையாகும்;
(4) ஆழ்கடல் மீன் பிடித்தலுக்கு அவசியமாகத் தொழில் நுட்ப உபகரணங்களை வாங்குவதற்குப் போதிய நிதி மீன்பிடிகாரரிடம் இல்லாமையாகும்;

9. உணவுப் பிரச்சனையோடு சேர்த்து, காணியின்மை, வேலையின்மை ஆகிய பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு:

(1) விவசாய விருத்திச் சேவைகள் மேலும் பயனுறுதியாக்கப்பட வேண்டும்;
(3) விவசாயத்திற்கான உள்ளீடுகைகளும், விவசாயிகளது பாதுகாப்பும் உறுதிப்பட வேண்டும்;
(3) காணி இல்லாதவருக்குக் காணி வழங்க வேண்டும்;
(4) இயந்திரங்களை மேலும் கூடிய அளவில் பயன்படுத்த வேண்டும்;

10. சீமெந்து, காகிதம், சீனி, ஒட்டுப்பலகை, இரசாயனப் பொருட்கள் என்பனவற்றை உற்பத்தி செய்துவரும் தொழிற்சாலைகள் இட ஒழுங்கில்:

(1) காங்கேசன்துறை, வாழைச்சேனை, கல்லோயா, ஜின்தோட்டை, பரந்தன்;
(2) காங்கேசன்துறை, பரந்தன், கல்லோயா, நீர்கொழும்பு, வாழைச்சேனை;
(3) காங்கேசன்துறை, வாழைச்சேனை, ஜின்தோட்டை, கந்தளாய், உடவளவை;
(4) காங்கேசன்துறை, புத்தளம், காலி, கல்லோயா, ஜின்தோட்டை;

11. அநுராதபுரக் காலத்திற் குளங்களைக் கட்டியதற்காகப் பிரசித்திபெற்ற நான்கு அரசர்களும் யார்?

(1) பண்டுகாபய, வசபன், மகாசேனன், தாதுசேனன்
(2) மகாசேனன், கஜபாகு, முகலன், காசியப்பன்
(3) கஜபாகு, வசபன், காசியப்பன், கோடாபய
(4) முகலன், தாதுசேனன், வவகம்பா, மகிந்தன்

12. நமது நாட்டின் சனத்தொகை 1 கோடியே 40 இலட்சங்களாகும். நாட்டின் மத்திய மலைப் பிரதேசத்திலிருந்து 103 நதிகள் நாற்புறமும் பரந்து பாய்கின்றன; இவற்றுள் 36 நதிகள் முக்கியமானவையாகும்; இப்புள்ளி விபரத்தில் இருந்து பெறக்கூடிய முடிபு:

(1) நம் நாட்டின் நீர்வளம், ஒரு பிரதேசத்திற்கு மட்டும் அமைந்துள்ளது.
(2) பயிர்ச் செய்கைக்குப் போதுமான அளவு நீர் இல்லை.
(3) உணவில் தன்னிறைவு எய்துவதற்கு வேண்டிய வளம் போதிய அளவில் உண்டு;
(4) பயிர் செய்யக் கூடிய நிலம் முழுவதும் பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. ஆங்கிலேயர் காலத்தில் விவசாயத்தின் வளர்ச்சி குன்றக் காரணம் :
   (1) வளமான நிலங்கள் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்தப்பட்டமை;
   (2) உழவுயந்திரம், பசளை, கிருமிநாசினி என்பன பயன்படுத்தப்படாமை;
   (3) புதிதாகக் குளங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள் ஏற்படுத்தாமை;
   (4) ஆங்கிலேயரின் முக்கிய உணவு நெல்லரிசிச் சோறாக இல்லாமை;

14. புராதன காலத்தில் இலங்கை மக்களுக்குத் தேவையான உணவுப் பொருட்கள் :
   (1) இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டது;
   (2) இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது;
   (3) வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது;
   (4) தாய்லாந்து, பர்மா ஆகிய நாடுகள் இலவசமாகக் கொடுத்துதவின;

15. ஆங்கிலேயர் காலத்தில் உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டமைக்கான முக்கிய காரணம் :
   (1) சனத்தொகை அதிகரித்தளவு உணவுற்பத்தி பெருகாமையால்;
   (2) பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையை ஆங்கிலேயர் ஆதரித்தமையால்;
   (3) வெளிநாட்டு உணவுப் பொருட்களின் விலை மலிவாக இருந்தமையால்;
   (4) அந்நிய நாட்டு உணவுப் பொருட்களை மக்கள் விரும்பி உண்டமையால்.

16. 1972 முதல் 1978 வரை நடைமுறையிலிருந்த இலங்கைக் குடியரசு அரசியல் அமைப்பின் கீழ் ஜனாதிபதி :
   (1) நிர்வாக அதிகாரமுள்ள அமைச்சரவைத் தலைவராக இருந்தார்;
   (2) தேர்வு செய்யப்பட்ட பிரதான நிர்வாகியாக இருந்தார்;
   (3) நாம (பெயருக்கு) நிருவாக அதிகாரமுள்ள அரசுத் தலைவராய் இருந்தார்;
   (4) நிருவாக அதிகாரத்தைப் பிரயோகிக்கும் அரசுத் தலைவராக இருந்தார்;

17. இன்று மாவட்ட நிர்வாகத்தை நடைமுறைப் படுத்த நியமிக்கப்பட்டிருப்பவர் :
   (1) அரசியல் அதிகாரி  (2) மாவட்ட மந்திரி
   (3) அரசாங்க அதிபர்  (4) மாவட்ட அபிவிருத்திச் சபை

18. இன்றைய இலங்கையின் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பிற்குப் பொருத்தமற்றது;
   (1) தேசிய அரசுப் பேரவைக்கு நியமன அங்கத்தவர்களை நியமித்தல்;
   (2) தேர்தல்மூலம் ஜனாதிபதியைத் தெரிவு செய்தல்;
   (3) பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் பாதுகாக்கப்படல்;
   (4) குடியரசின் ஒவ்வொரு பிரஜையும் தான் விரும்பிய சமயத்தைப் பின்பற்றல்;

19. சிறைத் தண்டனை அனுபவித்த குற்றவாளி மீண்டும் சமூக விரோதச் செயல்களிலே ஈடுபடாத வண்ணம் தடுத்து நல்வழிப்படுத்த :
   (1) அடிக்கடி பொலிசார் அவனைக் கண்காணித்துத் திருத்த வேண்டும்;
   (2) சிறையில் இருக்கும்போது சிறந்த நல்லொழுக்கங்களைப் போதிக்க வேண்டும்;
   (3) பதவிகளைக் கொடுத்துப் பொதுமக்களுக்குச் சேவை செய்வதில் ஈடுபடுத்த வேண்டும்;
   (4) மறுசீரமைப்புச் சேவையில் ஈடுபடுத்த வேண்டும்.

20. இலங்கையில் அதன் வித வருமானம் தாழ்வாகவுள்ளது; ஆனால் அதன் வாழ்க்கைத் தன்மையின் சுட்டியானது வளர்ச்சியடைந்த சில நாடுகளில் காணப்படுமளவிற்கு உயர்வானது; அதற்குரிய காரணம் :
   (1) போக நுகர்ச்சிப் பொருட்கள் கட்டில்லாமல் கிடைக்கக் கூடியனவாய் இருப்பதாகும்;
   (2) நலன்புரிச் சேவைகள் அதிகரித்துள்ளமையாகும்;
   (3) கைத்தொழிற் பொருட்களின் இறக்குமதி அதிகரித்துள்ளமையாகும்;
   (4) தொழில்நுட்ப முறையின் உபயோகம் பரவியுள்ளமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. வளர்முக நாடொன்றில் பொதுவாகக் காணப்படும் சிறப்பியல்பு பின்வருவனவற்றுள் எது?
   (1) உழைப்போர் தொகுதியிற் பெரும்பாலானோர் விவசாயத்தில் ஈடுபட்டிருத்தல்.
   (2) பிரதான உற்பத்திப் பொருள்களுக்கு உயர்ந்த ஏற்றுமதி விலைகள் கிடைத்தல்.
   (3) முதலீட்டுக்குத் தேவையான பணம் நாட்டினுள்ளே பெறப்படுதல்.
   (4) சனத்தொகை வளர்ச்சி வீதம் தாழ்ந்ததாயிருத்தல்.

22. " அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள், தாம் பெறும் வெளிநாட்டுக் கடன்களுக்காகச் செலுத்தும் வட்டி வருடாந்தம் 17% ஆல், அதிகரிக்க, அந்நாடுகளின் ஏற்றுமதி வருமானம் 6% ஆலேயே அதிகரித்துள்ளது '' — ரொபேட் மக்னமாரா. (உலகவங்கித் தலைவர்) இக்கூற்றிலிருந்து அபிவிருத்தியடையும் நாடுகள் பற்றி நாம் செய்யக்கூடிய ஒரு முடிவு:
   (1) ஏற்றுமதி வருமானம் அதிகரித்துவருகின்றது.
   (2) வாழ்க்கைத்தரம் முன்னேறி வருகிறது.
   (3) அபிவிருத்தியடைந்த நாடுகளிலிருந்து கிடைக்கப்பெறும் உதவி போதுமானதாகும்.
   (4) உதவி வழங்குதல் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு அனுகூலமாயுள்ளது.

23. இலங்கையின் ஆள்வீத வருமானம் ஏறக்குறைய :
   (1) $ 200 (2) $ 180 (3) $ 2700 (4) $ 720

24. அபிவிருத்தியடைந்த நாடுகளில் காணப்படும் சனத் தொகைப் பெருக்கத்திற்குப் பிரதான காரணம்:
   (1) பிறப்பு வீதம் கணிசமாக அதிகரித்தல். (2) இறப்பு வீதம் கணிசமாகக் குறைதல்.
   (3) குடிவருகை கணிசமாக அதிகரித்தல். (4) குடியகல்வு கணிசமாகக் குறைதல்.

25. அபிவிருத்தியடைந்த நாடுகளில் சூழல் அழுக்கடைதல் ஒரு பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இதற்கு முக்கிய காரணம்:
   (1) சனத்தொகையதிகரிப்பு (2) போர்கள்
   (3) தொழில்முறையியல் வளர்ச்சி (4) பொருளாதார வளர்ச்சி

26. ஐரோப்பியர் குடியேற்ற நாடுகளை நிலைநாட்ட விரும்பியது:
   (1) தம்முடைய ஆக்கப் பொருட்களுக்குத் தேவையான மூலப் பொருட்களையும், சந்தைகளையும் பெறுவதற்காக.
   (2) தமது படைகளைப் பலப்படுத்துவதற்குத் தேவையான மனித வலுவைப் பெறுவதற்காக.
   (3) அபிவிருத்தியடையாத நாடுகளில் ஐரோப்பிய நாகரிகத்தையும் பண்பாட்டையும் பரப்புவதற்காக.
   (4) கைத்தொழில் விருத்திக்குத் தேவையான மனித வலுவைப் பெறுவதற்காக.

27. உலகிற் போர்களைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய பிரதான நடவடிக்கை:-
   (1) ஐக்கிய நாடுகள் சபையினை வலுப்படுத்துதலாகும்.
   (2) வெவ்வேறு அரசுகளின் படைகளை வலுப்படுத்துதலாகும்.
   (3) அரசுகளுக்கிடையே வல்லரசுப் போட்டிகளை உருவாக்குதலாகும்.
   (4) பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் போர் ஒரு வழிவகை ஆகாது என்பதை மக்கள் நம்புமாறு செய்தலாகும்.

28. மூன்றும் உலகமென அழைக்கப்படும் நாடுகள்:
   (1) உலகின் தென்பாகத்தில் அமைந்துள்ள நாடுகள்.
   (2) உலகின் வடபாகத்தில் அமைந்துள்ள நாடுகள்.
   (3) ஆசியா, ஆபிரிக்காவில் அமைந்துள்ள நாடுகள்.
   (4) உலகின் பலபாகங்களிலும் அமைந்துள்ள நாடுகள்.

29. 'ஒபெக்' நிறுவனத்தின் பொருளாதார வெற்றி எதனைக் காட்டுகின்றது?
   (1) பெற்றோலியத்தை ஏற்றுமதி செய்யும் நாடுகளுக்கிடையேயுள்ள பொருளாதாரப் போட்டி அபிவிருத்திக்கு ஒரு முட்டுக்கட்டையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) அரசியல் முறையில் அராபிய நாடுகள் பல அரசுகளாகப் பிரிக்கப்பட்டிருப்பது முன்னேற்றத்திற்கு ஒரு தடை;
(3) அராபிய நாடுகளின் அரசியல் இறைமை முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாகும்;
(4) மத்திய கிழக்கில் வேறுபட்ட கலாச்சாரங்கள் இருப்பது முன்னேற்றத்திற்கு ஒரு முட்டுக்கட்டையாகும்;


30. ஒரு சனநாயக சமூகத்தில் தீர்மானங்கள் செய்வதிலும் அவற்றைச் செயற்படுத்துவதிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய முறை :
(1) தனியாள் ஒவ்வொருவரினதும் உடன்பாட்டைப் பெறக் கூடிய தீர்மானங்களை மாத்திரம் செயற்படுத்துவதாகும்;
(2) உடன்படாதோரைப் புறக்கணித்துவிட்டு, பெரும்பான்மையினரின் விருப்பத்தைச் செயற்படுத்துவதாகும்;
(3) பெரும்பான்மையோரின் விருப்பத்தைச் செயற்படுத்தும் அதே வேளையில் உடன்படாதோரின் விருப்பங்களைப் பொறுத்துக் கொள்வதாகும்;
(4) அரசாங்கம் மக்களால் நயக்கப்படுவதற்கேற்ற தீர்மானங்களைச் செயற்படுத்துவதாகும்;

31. சனநாயக ஆட்சி நிலவும் நாட்டில் அரசாங்கக் கட்சியைத் தேர்ந்தெடுப்பதற்குள்ள உரிமை போன்று :
(1) வாக்குரிமையையளிக்க முடியும்;
(2) பல கட்சிகளை ஏற்படுத்த முடியும்;
(3) எதிர்க்கட்சியொன்றைத் தேர்ந்தெடுக்க முடியும்;
(4) தொழிற் சங்கங்களை நிறுவமுடியும்;


32. சனநாயக ஆட்சிச் சமூகமொன்றில் அரசியல், பேச்சு, எழுத்துச் சுதந்திரம் கட்டுப்படுத்தப்படுவது :
(1) நடைமுறையிலுள்ள அரசாங்கத்திற்கெதிராக மக்கள் கிளர்ச்சி செய்யும்போது
(2) இராணுவச் சட்டம் அமுலிலிருக்கும்போது
(3) பொதுத் தேர்தற் காலங்களில்
(4) பொதுத் தேர்தல் நடந்து முடிந்தபின்

33. பாராளுமன்றப் பிரதிநிதிகள் பொதுமக்களுக்குத் திருப்தியளிக்காத கருமங்களைச் செய்ய முற்படும்போது பொதுமக்கள் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளுள் ஒன்று :
(1) புதினப் பத்திரிகை மூலம் கண்டனம் செய்தல்;
(2) அடுத்த தேர்தலின்போது அவர்களுக்கு வாக்களிக்காது விடுதல்;
(3) கட்சித் தலைவர்களிடம் முறையிட்டுத் தக்க நடவடிக்கை எடுத்தல்;
(4) அப்பிரதிநிதியின் நடவடிக்கையை பொதுமக்களிடையே அம்பலப்படுத்தி அவர்களது ஆதரவைக் குறைத்தல்.

இங்கே கொடுக்கப்பட்டுள்ள படங்களை அவதானிக்கவும். இலங்கையிலுள்ள சில பகுதிகள் (i), (ii), (iii), (iv) என்ற படங்களில் தரப்பட்டுள்ளன; பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.




(i) (ii) (iii) (iv)



34. படத்தில் (i) இல் A என்பது :
(1) மட்டக்களப்புக் கடனீரேரி;
(2) கல்பிட்டிக் கடனீரேரி;
(3) முல்லைத்தீவுக் கடனீரேரி;
(4) யாழ்ப்பாணக் கடனீரேரி;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. படம் (ii) - இல் B என்பது:

(1) கொக்கிளாய்க் குடா; (2) கொட்டியாரக் குடா;
(3) மன்னார்க் குடா; (4) காலிக் குடா;

36. அதே படத்தில் A, B, C, D என்பன முறையே:

(1) கடனீரேரி, குடா, முனை, குடாநாடு;
(2) கடனீரேரி, குடாநாடு, முனை, கடனீரேரி;
(3) குடா, கடனீரேரி, முனை, குடாநாடு;
(4) குடாநாடு, கடனீரேரி, முனை, குடாநாடு;




37. இங்கே கொடுக்கப்பட்டுள்ள ஐரோப்பாப் படத்தில், A, B, C, D எனப்பட்டுள்ள நான்கு நகரங்களும்:

(1) லண்டன், பாரிஸ், ஜெனிவா, பெர்லின் ஆகும்;
(2) லண்டன், பெர்லின், ஜெனிவா, ரோம் ஆகும்;
(3) லண்டன், மட்ரிட், பாரிஸ், ஒஸ்லோ ஆகும்;
(4) லண்டன், ஜெனிவா, பிரசெல்ஸ், வியன்னா ஆகும்;

38. அதேபடத்தில் (i), (ii) (iii), (iv) எனக் குறிக்கப்பட்டுள்ள நான்கு கடல்களும்:

(1) வடகடல், கஸ்பியன்கடல், கருங்கடல், ஏரல்கடல்.
(2) வடகடல், மத்தியதரைக்கடல், கருங்கடல், கஸ்பியன்கடல்;
(3) வடகடல், கருங்கடல், ஏரல்கடல், கஸ்பியன்கடல்;
(4) வடகடல், பால்டிக்கடல், ஏரல்கடல், கருங்கடல்.

39. அதேபடத்தில் X என்ற மலைத் தொடரும் Y என்ற நதியும்:

(1) அல்ப்ஸ் மலையும் றைன் நதியும்; (2) காப்பேதியன் மலையும் டினீஸ்ரர் நதியும்;
(3) யூறல் மலையும் வொல்கா நதியும்; (4) பிறனிஸ் மலையும் கரோன் நதியும்;

40. அதே படத்தில் 1 என்ற இலக்கம் குறிக்கும் நாடு:

(1) பிரான்ஸ் (2) போர்த்துக்கல் (3) பிரித்தானியா (4) ஸ்பெயின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூகக் கல்வி - 2

நேரம்: 3 மணி

(முதலாம் வினாவுக்கும் ஏனைய ஐந்து வினாக்களுக்கும் விடை எழுதுக.)

1. கொடுக்கப்பட்டுள்ள படம் இலங்கை ஓரங்குல இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதியாகும்.

(1) 2500 அடிகளுக்கு மேற்பட்ட பகுதிகளுக்கு நிறம் தீட்டுக.

(2) *A*-யிலிருந்து *F*-என்ற இடத்திற்கு *D*-ஊடாக ஒரு பிரதான வீதியை வரைக; நதியைக் கடக்கும் போது பாலம் இடுக.

(3) பிரதான ஆற்றின் நடுவழியே வடக்காகவும் தெற்காகவும் செல்லும் மாகாண எல்லைக் கோட்டை வரைக.

(4) *G*-என்ற இடத்தில் பிரதான நதியுடன் வந்து சேரும் மேற்குப்பக்கக் கிளையாற்றை வரைக.

(5) குளத்தின் அணையைக் கீறுக.

(6) *D*-என்ற இடத்தில் குடியிருப்பு காணப்படுகிறது.
பாடசாலை, தபாற்கந்தோர், வைத்தியசாலை

(7) இப் பிரதேசத்தின் தரைத்தோற்றம் குறித்து ஒரு குறிப்புரை தருக.

(8) இப் பிரதேசத்தின் மக்களின் தொழில் குறித்து ஒரு விளக்கம் தருக.




வகைகுறிப்பின்னம் = *1:63,360*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. இலங்கை நகரங்கள் நான்கின் வெப்பநிலை, மழைவீழ்ச்சி அளவுகள் தரப்பட்டுள்ளன. அவற்றை அவதானித்து, அதன் கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

| | வெப்பநிலை (°ப) | மழை வீழ்ச்சி (அங்) |
|---|---|---|
| 1. கொழும்பு | 80.5 | 92.2 |
| 2. மட்டக்களப்பு | 83.8 | 68.8 |
| 3. நுவரெலியா | 59.7 | 81.8 |
| 4. மன்னார் | 82.2 | 39.7 |

(i) மேலுள்ள நகரங்கள் ஒவ்வொன்றும் எக்கால நிலைப் பிரதேசங்களைச் சேர்ந்தவை என்பதைக் குறிப்பிடுக.

(ii) கொழும்பிலும் பார்க்க நுவரெலியாவின் வெப்பநிலை குறைவாக இருப்பதற்குரிய காரணத்தைக் கூறுக.

(iii) கொழும்பு அதிக மழையைப் பெற, மட்டக்களப்புக் குறைவாக மழையைப் பெறுகிறது. காரணங்களைக் கூறுக.

3. (i) இலங்கையின் சுயதேவைப் பயிர்கள் மூன்றினைக் கூறுக. வர்த்தகப் பயிர்கள் மூன்றினைக் கூறுக.
(ii) வர்த்தகப் பயிர்கள் எமது பொருளாதாரத்தில் கொண்டுள்ள பங்கினை விளக்குக.
(iii) சுயதேவைப் பயிரில் ஒன்றையும், வர்த்தகப் பயிரில் ஒன்றையும் தெரிவு செய்து, அவை ஒவ்வொன்றையும் செய்கை பண்ணுவதற்குக் கையாளப்படும் முறைகளைக் குறிப்பிடுக.

4. (i) இலங்கையில் ஆங்கிலேயர் நெடுஞ்சாலைகள், புகையிரத வீதிகள் அமைத்ததன் நோக்கங்கள் எவை?
(ii) அதிக பணச் செலவின்றி இப் பாதைகளையமைக்க ஆங்கிலேயர் கையாண்ட முறை யாது?
(iii) பெருந் தோட்டப் பயிர்ச் செய்கைக்கு இவ்வீதிகள் எவ்வாறு உதவி செய்தன?

5. (அ) சிங்கள அரசர்களினால் அனுராதபுரியில் ஓர் இராச்சியம் நிறுவப்பட்டதற்கு ஏதுவாயிருந்தவை யாவை?
(ஆ) உமது கருத்துப்படி அனுராதபுர ராச்சியத்தின் தலைசிறந்த அரசன் யார்? உமது விடைக்கு நியாயங்களைத் தருக.
(இ) பின்வருவனவற்றுள் இரண்டினிற்குச் சிறு குறிப்பெழுதுக:
(1) லோகமகாபாய (2) அபயகிரிவிகாரை (3) சிகிரியா (4) திசாவாவி

6. (i) செஞ்சிலுவைச் சங்கம் அமைக்கப்பட்டதன் நோக்கம் என்ன?
(ii) இது யாரால் அமைக்கப்பட்டது.
(iii) எத்தனையாம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது?
(iv) இன்று இதன் பணிகள் எவை?

7. (i) ஜனநாயக ஆட்சிமுறை நிலவும் நாட்டில் மக்களுக்கு அளிக்கப்பட்ட உரிமை யாது?
(ii) இலங்கை மக்களுக்கு இவ்வுரிமை எந்த ஆண்டில் யாரால் அளிக்கப்பட்டது?
(iii) சர்வாதிகார ஆட்சியில் ஏன் எதிர்க்கட்சி இடம் பெறுவதில்லை? விளக்கம் கூறுக.
(iv) தேர்தலின்போது மக்கள் ஏன் வாக்களிக்க வேண்டும்?
(v) பல கட்சிகள் நாட்டில் இருப்பது ஜனநாயக ஆட்சி முறை நன்கு செயல்படத் தடையா? அப்படியாயின் காரணம் கூறுக.

8. (i) சர்வதேச வியாபாரம் இன்றைய உலகில் ஏன் முக்கியம் பெறுகிறது?
(ii) சர்வதேச வியாபாரத்தினால் விளையும் நன்மைகள் சிலவற்றையும் தீமைகள் சிலவற்றையும் கூறுக.

9. (i) வெளிநாட்டு உதவி என்றால் என்ன?
(ii) வெளிநாட்டு உதவி ஏன் அவசியம் எனக் கருதுகிறீர்?

10. (i) சனத்தொகைப் பெருக்கத்தால் உலகில் ஏற்படும் பிரச்சினைகள் எவை?
(ii) சனத்தொகைப் பெருக்கம் சூழல்மீது செலுத்தும் பாதகமான தாக்கம் என்ன?

11. (i) சூழல் மாசடைவதை நாம் அவதானிக்கக்கூடிய மூன்று நிலைமைகளைக் கூறுக.
(ii) அவற்றில் ஒன்று மாசடைவதற்கான காரணங்களைச் சுருக்கமாக விபரிக்க.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகக்கல்வி

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர)ப் பரீட்சை, டிசம்பர் (புதிய பாடத்திட்டம்)

## சமூகக்கல்வி: 1

நேரம்: 1 மணி

(எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக)

1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4) என்று இலக்க மிடப்பட்டிருக்கும் விடைகளுள் சரியானது அல்லது மிகவும் பொருத்தமானது என நீர் கருதுவ தனைத் தெரிவு செய்க; விடைத்தாளில், உமது விடையை ஒத்திருக்கும் கூட்டினுள் புள்ளடியை (X) பென்சிலால் இடுக.

1. இலங்கை ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நாடு எனக் குறிப்பிடும்போது அது:
   (1) சிறியதொரு தீவு என்பதை,
   (2) இந்துசமுத்திரத்தின் முத்து என்பதை,
   (3) பலம் பொருந்திய நாடு என்பதை,
   (4) இந்துசமுத்திரத்தின் மத்தியில் உள்ளதென்பதைக் கருதுகின்றது.

2. இலங்கையில் தென்மேற்குப் பகுதியில் பல சமாந்தரப் பாறைத் தொடர்கள் சப்ரகமுவ மலைத் தொடர்களிலிருந்து விரிந்து செல்கின்றன; அவை விரிந்து செல்வது:
   (1) கிழக்கிலிருந்து மேற்காகவாகும்.
   (2) வடக்கிலிருந்து தெற்காகவாகும்.
   (3) வடமேற்கிலிருந்து தென்கிழக்காகவாகும்.
   (4) தென்கிழக்கிலிருந்து தென்மேற்காகவாகும்.

3. கொழும்பின் வருடச் சராசரி வெப்பநிலை 80·5°F ஆகும்; நுவரெலியாவின் வருடச் சராசரி வெப்ப நிலை 59·7°F. ஆகும்; இந்த வேறுபாட்டிற்குக் காரணம்:
   (1) கொழும்பு மத்திய கோட்டிற்கு அண்மையிலும், நுவரெலியா மத்திய கோட்டிற்குச் சேய்மை யிலும் அமைந்திருப்பதாகும்.
   (2) கொழும்பு கடற்கரையிலும், நுவரெலியா உண்ணாட்டிலும் அமைந்திருப்பதாகும்.
   (3) கொழும்பு கடல்மட்டச் சமவெளியிலும், நுவரெலியா 6060 அடி உயரத்திலும் அமைந் திருப்பதாகும்.
   (4) கொழும்பில் ஈரலிப்பான கடற் காற்றுக்கள் வீசுவதும், நுவரெலியாவில் வரண்ட காற்றுக்கள் வீசுவதுமாகும்.


4. இந்துசமுத்திரத்தில் தோற்றம் பெறுகின்ற தென்மேல் பருவக்காற்று அதிக ஈரலிப்போடு இலங் கையை நோக்கி வீசுகின்றது. அவ்வாறு வீசும்போது மலைநாட்டின் மேற்குப் பகுதியால் தடுக்கப் பட்டுக் குளிர்கிறது; அதனால் அதிக மழை கிடைக்கின்ற பகுதிகள்:
   (1) தென்மேல் தாழ்நிலமும் மலைநாட்டின் மேற்குப் பகுதியும்.
   (2) தென்மேல் தாழ்நிலமும் மலைநாட்டின் கிழக்குப் பகுதியும்.
   (3) தென்கீழ் தாழ்நிலமும் மலைநாட்டின் மேற்குப் பகுதியும்.
   (4) தென்கீழ் தாழ்நிலமும் மலைநாட்டின் கிழக்குப் பகுதியும்.

5. படம்: A இல் காட்டப்பட்டிருக்கும் வரைப்படம், இலங்கையின் ஒரு நிலையத்தின் மழைவீழ்ச்சி, வெப்பநிலை அளவுகளைக் குறிக்கின்றது. இந்த நிலையம் மே மாதம் தொட்டு செப்டெம்பர் மாதம் வரை அதிக மழையைப் பெறுவதற்குக் காரணம்: (27-ம் பக்கத்திலுள்ள படத்தைப் பார்க்கவும்)
   (1) மேற்காவுகை.
   (2) வடகீழ்ப் பருவக்காற்று.
   (3) தென்மேல் பருவக்காற்று.
   (4) சூறாவளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. இலங்கையின் மத்திய மலைநாட்டின் கிழக்குச் சாய்வுகளில் தேயிலை பயிராவதில்லை; இதற்குக் காரணம்:

(1) அங்கு மழைவீழ்ச்சி குறைவு;
(2) குளிர்காற்று வீசுகின்றது;
(3) மழைநீர் தேங்கி நிற்பதில்லை;
(4) தொழிலாளர் கிடைப்பதரிது;




படம்: A

7. நசம் நெல் உற்பத்தியில் தன்னிறைவு அடைவதற்குரிய வழிவகைகள்:
   (1) நீர்ப்பாசன வசதிகளை அமைப்பதும் நவீன பயிர்ச் செய்கை முறைகளைக் கையாள்வதும் ஆகும்;
   (2) சிறந்த ரக விதைகளைப் பயன்படுத்துவதும், கடன் வசதிகளை வழங்குவதும் ஆகும்.
   (3) பசளைகளையும், கிருமிநாசினிகளையும் அதிகம் உபயோகித்தல் வேண்டும்;
   (4) நெல்லிற்கு உத்தரவாத விலை வழங்குவதும், விவசாய ஆலோசனைகளை வழங்குவதும் ஆகும்;

8. இலங்கையில் மீன்பிடித் தொழிலை உறுதியான அடித்தளத்தில் நிறுவுவதற்கு மிக முக்கியமான தேவை:
   (1) நவீன மீன்பிடித்தல் முறைகளை மேற்கொள்வதாகும்.
   (2) உற்பத்தியாளனுக்கு ஒரு நியாயமான விலையை உத்தரவாதப்படுத்தலாகும்;
   (3) சிறப்பாகத் திட்டமிடப்பட்ட ஒரு ஏற்றுமதி நிகழ்ச்சித்திட்டமாகும்;
   (4) சந்தைப்படுத்தலுக்கென போக்குவரத்தை ஏற்பாடு செய்தலாகும்;

9. இலங்கையில் காரீயச் சுரங்கங்கள் காணப்படும் இடங்கள்:
   (1) பெரலஸ்கமுவ, வவுனியா, தம்புளை;
   (2) மாறவில்லா, கற்பிட்டி, சாவகச்சேரி;
   (3) போகலை, சுகத்தக்கா, தொடங்கஸ்லந்தை;
   (4) இரத்தினபுரி, எலஹர, ஒக்கம்பிட்டிய;

10. சுதந்திர வர்த்தக வலயம் என்பது:
   (1) ஒரு குறித்த பிரதேச எல்லைக்குள் வெளி நாட்டவர்களும் உள்நாட்டவர்களும் இணைந்து, உள்நாட்டு மூலதனத்தைப் பயன்படுத்தி, தீர்வைகளற்ற இறக்குமதிப் பொருட்களை உற்பத்தி செய்யும் அமைப்பு.
   (2) குறித்த ஒரு பிரதேச எல்லைக்குள் வெளிநாட்டவரும், உள்நாட்டவர்களும் இணைந்து பொருட்களை இறக்குமதி செய்து குறைந்த விலையில் விற்கும் அமைப்பு;
   (3) குறைந்த ஒரு பிரதேச எல்லைக்குள் வெளிநாட்டவரும் உள்நாட்டவர்களும் இணைந்து கைத்தொழிற்சாலைகளை நிறுவும் அமைப்பு.
   (4) குறித்த ஒரு பிரதேச எல்லைக்குள் வெளிநாட்டவர்கள் மட்டும் உள்நாட்டு மூலதனங்களைப் பயன்படுத்தி ஏற்றுமதிப் பொருட்களை உற்பத்தி செய்யும் அமைப்பாகும்.

11. பொலன்நறுவைக் காலத்தில் அரசர்களின் பிரதான வருமான மூலம்:
   (1) உள்நாட்டு வியாபாரத்தில் அறவிடப்பட்ட சுங்கத் தீர்வையாகும்.
   (2) நீர்ப்பாசன அடிப்படையில் நடைபெற்ற பயிர்ச் செய்கை மீதான வரியாகும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) வெளிநாட்டு வியாபாரத்தில் அறவிடப்பட்ட சுங்கத் தீர்வையாகும்;
(4) தொழில் செய்த முதிர்ந்த ஆட்களிடமிருந்து அறவிடப்பட்ட தலவரியாகும்;

12. பௌத்த சமயம் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னர் இலங்கையில் காணப்பட்ட சிறப்பம்சம்:
(1) நீர்ப்பாசன முறைகளை உபயோகித்தமை;
(2) சைவசமயம் பெரும்பான்மையினரின் மதம்;
(3) செங்கல் கட்டிடங்கள் கட்டப்பட்டமை;
(4) விகாரைகளிற் கல்வி போதிக்கப்பட்டமை;

13. 1505-ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தமைக்கான முக்கிய காரணம்:
(1) கத்தோலிக்க மதத்தைப் பரப்புவதற்காக;
(2) 1-ம் புவனேகபாகுமீது மாயாதுன்னே போர் செய்வதைத் தடுப்பதற்காக;
(3) அராபியர் வர்த்தகத்தில் பெற்றிருந்த இடத்தைத் தாம் பெறுவதற்காக;
(4) கோட்டை இராச்சியத்தைக் கைப்பற்றுதற்காக;

14. ஆங்கிலேயர் பெருந்தோட்டப் பயிர்களாகச் செய்கைபண்ணிய பயிர்கள்:
(1) ஏலக்காய், கராம்பு, கறுவா, மிளகு, (2) சாதிக்காய், கறுவா, புகையிலை, மிளகு;
(3) கோப்பி, தேயிலை, றப்பர், தென்னை; (4) திராட்சை, அப்பிள், அன்னாசி, பியர்ஸ்;

15. ஆங்கிலேயர் காலத்தில் தோட்டக் கூலிகளாக இலங்கைக்கு:
(1) முஸ்லீங்கள் வரவழைக்கப்பட்டார்கள்;
(2) தென்னிந்தியர்கள் வரவழைக்கப்பட்டார்கள்;
(3) ஆரியர் வரவழைக்கப்பட்டார்கள்;
(4) இலங்கைத் தமிழர் வரவழைக்கப்பட்டார்கள்;

16. இலங்கைச் சனநாயக சோசலிச (1978) அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள் பற்றியுள்ள நிபந்தனைகள்:
(1) சிறுபான்மையினருக்கு விசேட பாதுகாப்புக்களை அளித்துள்ளது;
(2) பெரும்பான்மை மக்களின் உரிமைகளை உறுதி செய்துள்ளது;
(3) எல்லாக் குடிகளினதும் உரிமைகளையும் பாதுகாத்துள்ளது;
(4) பெரும்பான்மையினருக்கு விசேட சிறப்புரிமை அளித்துள்ளது;

17. 1978-ஆம் ஆண்டு இலங்கை ஜனநாயகச் சோசலிசக் குடியரசானது, இதன்படி இன்றைய ஜனாதிபதியின் அதிகாரம்:
(1) இலங்கையின் தெரிவு செய்யப்பட்ட பிரதான நிர்வாகியாக இருக்கிறார்;
(2) பெயருக்கு நிர்வாக அதிகாரமுள்ள அரசுத் தலைவராக இருக்கிறார்;
(3) அமைச்சரவையில் தலைவராக இருக்கின்ற அதிகாரம் மட்டும் கொண்டுள்ளார்.
(4) குற்றவாளிகளுக்கு மன்னிப்பு அளிக்கும் உரிமையைக் கொண்டுள்ளார்;

18. இலங்கைக் குடியானவர் ஒருவர் மற்றவருக்குக் கடுங்காயம் ஏற்படுத்தினரென நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாகக் காணப்பட்டார். சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளார்; இந்தக் குற்றத் தீர்ப்புத் தண்டனை விதிப்புக்கு எதிராக அவர் மேன்முறையீடு செய்யக்கூடிய இறுதி நீதிமன்றம்;
(1) மேல் நீதிமன்றமாகும்; (2) மேல்முறையீட்டு நீதிமன்றமாகும்;
(3) உயர் நீதிமன்றமாகும்; (4) கோமறைக் கழகமாகும்;

19. தனியாள் நலனையும் சமூக நலனையும் பின்வருவனவற்றுள் எச்செயல்முறை வளர்க்கின்றது?:
(1) ஒரு முயற்சியை ஆரம்பிக்கையில் நல்ல சகுனம் பார்த்தல்;
(2) பெரியார்களுக்கு வெற்றிலைக் கற்றையைச் சமர்ப்பித்தல்;
(3) தீய ஆவிகளினால் நோய்கள் ஏற்படுகிறதென்று நம்பியிருத்தல்;
(4) ஓய்வு நேரத்தில் வீட்டுத் தோட்டம் செய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. பின்வரும் அட்டவணையை அவதானிக்க; தொழில் பகுப்பு விபரம் இலட்சத்தில் தரப்பட்டுள்ளது;

| நாடு | விவசாயம் | கைத்தொழில் | சேவைகள் |
|---|---|---|---|
| A | 30 | 10 | 15 |
| B | 15 | 40 | 15 |

இந்த அட்டவணையிலிருந்து தெரிய வருவது!

(1) அபிவிருத்தியடைந்த இரு நாடுகளுக்கு இடையிலுள்ள வித்தியாசம்;
(2) முதலாளித்துவ நாடொன்றிற்கும், சமதர்ம நாடொன்றிற்கும் இடையில் உள்ள வித்தியாசம்
(3) அபிவிருத்தியடைந்த நாடொன்றுக்கும், அபிவிருத்தியடைந்து வரும் நாடொன்றுக்கும் இடையேயுள்ள வித்தியாசம்.
(4) ஆசிய நாடொன்றுக்கும், ஆபிரிக்க நாடொன்றுக்கும் இடையிலான வித்தியாசம்,

21. பெருந் தொகையான மக்களைக் கொண்ட குறைவிருத்தி நாடொன்று விரைவாக அபிவிருத்தியடைவதற்கான வழி :

(1) பிறப்பு வீதத்தைக் குறைத்தலாகும்;
(2) தொழில் நுட்பத் திறமை வாய்ந்த தொழிலாளரை ஏற்றுமதி செய்தலாகும்.
(3) பொறிகளைக் கூடுதலாக உபயோகித்தலாகும்:
(4) தொழிலாளரை மிகுதியாகப் பயன்படுத்தும் உற்பத்தி முறைகளை மேற்கொள்ளலாகும்:

22. கீழே தரப்பட்டுள்ள நாடுகளின் தொகுதிகளுள் வெளி நாட்டுச் செலாவணிப் பிரச்சினையை எதிர்நோக்காத அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் தொகுதி எதுவாகும்?

(1) இந்தியா, வங்காளதேசம், உகண்டா;
(2) ஈரான், ஈராக், சவுதி அரேபியா.
(3) மேற்குஜேர்மனி, கனடா, ஐக்கிய இராச்சியம்;
(4) போர்த்துக்கல், ஸ்பெயின், கிரேக்கம்;

23. அபிவிருத்திக்கு அத்தியாவசியமானது :

(1) முதலீட்டுக்கான வழிவகைகளை மேற்கொள்ளல்.
(2) நுகர்ச்சிப் பொருட்களின் இறக்குமதிகளைத் தாராள மாக்கல்;
(3) நிறையுணவை மக்கள் பெறுவதற்கு அரசாங்கம் மானியம் அளித்தல்.
(4) ஏற்றுமதியை அதிகரிக்க முயலல்;

24. நாடுகளின் வாழ்க்கை நிலையை மதிப்பிடும் வகையில் அமைந்த ஒரு அளவுகோல்!

(1) மொத்தத் தேசிய உற்பத்தி; (2) ஆள்வீத வருமானம்;
(3) வாழ்க்கைச் செலவுச் சுட்டி. (4) வர்த்தக நிலுவை;

25. ஒரு நாட்டின் நவீன தொழில்நுட்ப முறையில் அதிகரித்த உபயோகத்தினால் உண்டாகும் விரும்பத்தகாத விளைவுகளினுல் மிகவும் மோசமானது!

(1) அந்த நாட்டின் இயற்கை வளங்கள் ஒழிந்துபோவதனால் ஏற்படும் திடீர்ப் பொருளாதார மந்தமாகும்;
(2) மக்களின் உடல் நலத்திற்குத் திங்கு பயக்கும் விளைவுகளாற் சூழல் மாசுபடுவதாகும்;
(3) பொறிகளுக்கு அடிமையாகவிருக்கும் சார்பு நிலை காரணமாக அந்நாட்டின் கலாச்சாரத்தில் ஏற்படும் வீழ்ச்சியாகும்.
(4) மனித உழைப்பின் மதிப்பு வீழ்ச்சியடைவது காரணமாகச் சம்பளங்களின் வீச்சுத் தாழ்ச்சியடைவதாகும்;

26. மனிதவர்க்கம் இன அடிப்படையில் பிரிக்கப்படுவதற்குக் காரணம் :

(1) ஒவ்வொரு இனத்தவரும் வெவ்வேறு மூலங்களிலிருந்து தோன்றியமையாகும்;
(2) வெவ்வேறு மதிநுட்ப மட்டத்தில் அமைந்துள்ளமை யாகும்.
(3) கலாச்சார அடிப்படையில் வேறுபட்டுள்ளமையாகும்;
(4) வாழும் சூழலுக்கு ஏற்ப வேறுபட்டுள்ளமையாகும்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. படைக் குறைப்பைச் செயற்படுத்துவதில் தோல்வி எய்தியதற்கான பிரதான காரணம்?

(1) படைவலிமைக் குறைப்பிற்கு விஞ்ஞானிகள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றமை;
(2) உலகப் பேரரசுகள் ஆயுத விற்பனையிலிருந்து பெருந் தொகைச் செல்வத்தைப் பெறுகின்றமை;
(3) பயங்கர ஆயுதங்களின்றி எதிரிகளின் தாக்குதல்களை எதிர்நோக்க முடியாமை.
(4) விருத்தியடைந்துவரும் நாடுகளில் ஆயுதங்களுக்கான கேள்வியில் பெருக்கம் ஏற்பட்டுள்ளமை.

28. உலகத்தில் அடிக்கடி நிகழும் சர்வதேசப் பிணக்குகள்:

(1) எல்லாவித எத்தனங்கள் செய்யப்பட்டாலும் ஒரு போதும் தடுக்கக்கூடியனவல்ல.
(2) சகல நாடுகளினதும் படைப்பலத்தை மிகுவிப்பதன் மூலம் தடுக்கப்படக்கூடும்;
(3) உலக அபிவிருத்தியுடன் தன்னியல்பாகவே தீர்க்கப்பட்டுவிடும்;
(4) எல்லா நாடுகளும் நேர்மையுடன் முயற்சி செய்தால் தடுக்கப்படக்கூடும்;

29. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் முக்கிய நோக்கங்கள்,

(1) தனக்கென படைபலத்தை நிறுவி அதன்மூலம் உலகின் சமாதானத்தைப் பாதுகாத்தல்;
(2) சமாதானம், பொருளாதார அபிவிருத்தி, மனித உரிமை என்பனவற்றை உலக நாடுகளிடையே ஏற்படுத்துவது.
(3) போர்த்தணிக்கை மகாநாடுகள் மூலம் போர்க்கருவிகள் அணு ஆயுத உற்பத்திகளைக் குறைத்தல்;
(4) உலக நாடுகளில் தோன்றும் பண நெருக்கடிக்கு நிதியுதவியளித்தல்;

30. பின்வருவனவற்றுள், அரசியற் கட்சி முறைமை பற்றிய சரியான கூற்று எது?:

(1) உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டிலும் கட்சி முறைமை ஒன்று உண்டு;
(2) ஒரு கட்சி முறைமை இருப்பது ஒரு சுதந்திர சமூகத்தின் அறிகுறியாகும்;
(3) கட்சி முறைமை சமூகத்தில் தேவை அற்ற பிரிவினைகளை உண்டாக்குகிறது;
(4) அபிவிருத்தியடையும் நாடுகளுக்குக் கட்சி முறைமை அவசியமாகும்;

31. ஜனநாயகத்திற்குச் சவாலாக அமையும் சக்திகளுள் ஒன்று:

(1) அரசாங்கக் கட்சி.
(2) எதிர்க் கட்சி.
(3) தேர்தலில் தோல்வியடைந்த கட்சி;
(4) பொதுமக்களால் பெரும்பான்மை ஆதரவு அளிக்கப்பட்ட கட்சி;

32. வாக்குரிமையையுடைய ஒவ்வொருவனும் ஆட்சியைச் சிறப்பாகக் கொண்டு நடத்தக்கூடிய ஆற்றல் வாய்ந்த ஒருவனைத் தேர்தலின்போது தேர்ந்தெடுப்பதற்கு:

(1) கடமையுடையவன்; (2) கட்டாயப்படுத்தப்படுகிறான்;
(3) ஆதரவாளர்களால் தூண்டப்படுகிறான்; (4) உரிமையுடையவன்.

33. குடியாட்சி முறைப்படி எமது நாடு ஆளப்படுகின்றது என்று எண்ணுவதற்கு ஏதுவான காரணி;

(1) ஜனாதிபதி ஆட்சிமுறை நிலவுவது.
(2) பாராளுமன்றம் ஆட்சியைக் கொண்டு நடத்துவது.
(3) மந்திரிகள் சபையால் வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படுதல்.
(4) சர்வசனவாக்குரிமை மூலம் தாம் விரும்பிய அரசாங்கத்தைத் தெரிவு செய்யும் வாய்ப்பினை மக்களுக்கு அளித்திருத்தல்;

34. கொடுக்கப்பட்டுள்ள இலங்கைப் படத்தில் $A - A'$ என்ற கோடும், $B - B'$ என்ற கோடும் குறிப்பன முறையே: (31-ம் பக்கத்திலுள்ள படத்தைப் பார்க்கவும்)

(1) 79° கிழக்கு நெடுங்கோடும் 5° வட அகலக்கோடும்:
(2) 81° கிழக்கு நெடுங்கோடும் 10° வட அகலக்கோடும்:
(3) 80° கிழக்கு நெடுங்கோடும் 8° வட அகலக்கோடும்:
(4) 82° கிழக்கு நெடுங்கோடும் 10° வட அகலக்கோடும்:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


35. C என்ற மலையும், D என்ற நதியும்:
(1) சிவனொளிபாதம், களனிகங்கை,
(2) பேதுருதாலகாலமலை, பெந்தோட்டகங்கை;
(3) தோட்டப்பாலை, தெதுறுஓயா;
(4) நமுனகுல, களனிகங்கை.

36. கதிர்காமக் குன்று:
(1) —2, (2) —F, (3) —E, (4) —1;

37. G - G' என்ற சம மழைவீழ்ச்சிக் கோடு:
(1) 75" சம மழைவீழ்ச்சிக் கோடு;
(2) 100" சம மழைவீழ்ச்சிக் கோடு;
(3) 50" சம மழைவீழ்ச்சிக் கோடு;
(4) 150" சம மழைவீழ்ச்சிக் கோடு;

38. கீழே தரப்பட்டுள்ள படத்தில் கரு வட்டமாக அடையாளமிடப்பட்ட இடங்களில்;
(1) தங்கம் கிடைக்கும் இடங்கள்;
(2) கனிப் பொருட்கள் கிடைக்கும் இடங்கள்.
(3) இரும்புத்தாது கிடைக்கும் இடங்கள்.
(4) பெற்றோலியம் கிடைக்கும் இடங்கள்;




39. 32-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள ஆசியாப் படத்தில் A, B என்பன முறையே:
(1) வங்காளவிரிகுடா, யெனசிநதி. (2) பாரசீகக்குடா, ஒப்நதி;
(3) அராபிக்கடல், லீனநதி; (4) வங்காளவிரிகுடா, லீனநதி;

40. அதே படத்தில் C என்று எழுதப்பட்டிருக்கும் தீவு:
(1) போர்னியோ. (2) யப்பான்; (3) சுமாத்திரா (4) யாவா;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**சமூகக்கல்வி: 2** **நேரம்: 3 மணி**

(முதலாம் வினாவுக்கும் வேறு ஐந்து வினாக்களுக்கும் விடை எழுதுக)

1. 33-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள தேசப்படத்தை அவதானித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக:

   (1) 500 அடிகளுக்கு மேற்பட்ட நான்கு பகுதிகளுக்கு நிறம் தீட்டுக.

   (2) பிரதான ஆற்றின் இரு கிளையாறுகளைக் குறிக்கவும்.

   (3) ஆற்றிடைவெளி, நெடுங்கோட்டுப் பள்ளத்தாக்கு, சமவெளி என்ற சொற்களைப் பொருத்தமான இடத்தில் எழுதுக.

   (4) A — B எனும் பட்டினங்களைப் பிரதான வீதியால் இணைக்க.

   (5) X - இலிருந்து பார்க்கும்போது Y என்ற இடம் கண்ணுக்குத் தெரியுமா? தெரியுமாயின் Y என்ற இடத்தில் '√' எனவும், தெரியாதாயின் '×' எனவும் அடையாள மிடுக.

   (6) Y என்ற இடத்திலிருந்து ஆரம்பமாகும் ஒரு சிறு வீதி தென்கிழக்கு மூலைக்குச் செல்கிறது; அதனை வரைக!

   (7) Y என்ற இடத்தில் ஆரம்பமாகும் ஒரு வண்டிப் பாதை வடக்குப் பக்கமாக நதியை ஒரு பாலத்தால் கடந்து வட எல்லையைச் சென்றடைகிறது. அதனை வரைக!

   (8) Y என்ற இடத்தில் பாடசாலை, பொலிசு நிலையம், வைத்தியசாலை, பௌத்த கோயில் என்பன அடங்கிய ஒரு குடியிருப்புள்ளது. அதனைக் காட்டுக.

2. (i) மூன்று உணவுப் பயிர்களையும், மூன்று பணப்பயிர்களையும் பெயரிடுக!

   (ii) நீர் பெயரிட்ட பயிர்களுள் உணவுப் பயிர் ஒன்றையும், பணப் பயிர் ஒன்றையும் தெரிவு செய்து அவை செய்கைபண்ணப்படும் பிரதேசங்களைக் கூறுக.

   (iii) அவ்விரு பயிர்களுள் ஒவ்வொன்றையும் செய்கை பண்ணுவதற்குத் தேவையான புவியியற் காரணிகள் யாவை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. (i) புராதன காலத்தில் இலங்கை மக்கள் கையாண்ட மீன்பிடி முறைகள் எவை?

(ii) இவற்றிலுள்ள குறைபாடுகள் எவை?

(iii) இன்று கையாளப்படும் நவீன முறைகள் எவை?

(iv) பிடிக்கப்பட்ட மீன்களை நாட்டின் பலபாகங்களுக்கும் விநியோகிப்பதற்காகக் கையாளப்படும் தொழில் நுட்பங்கள் எவை?

4. தற்போது இலங்கை எதிர்நோக்கும் நெருக்கடியான பிரச்சினை வேலையின்மைப் பிரச்சினையாகும்:


(i) இலங்கையில் வேலையின்மைப் பிரச்சினையை இன்னும் கேடாக்கும் அடிப்படைக் காரணங்கள் இரண்டினைக் கூறுக.

(ii) இலங்கையிலுள்ள வேலையின்மைப் பிரச்சினையின் அளவையும், தன்மையையும் பற்றிச் சுருக்கமாக எடுத்துக் கூறுக.

(iii) இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கென இலங்கை அரசாங்கத்தினால் தற்போது எடுத்துக் கூறப் பட்டிருக்கும் மூன்று பிரேரணைகளைப் பற்றிச் சுருக்கமாக விவரிக்க.

5. (i) இலங்கையில் அந்நியர் ஆட்சியால் நெல் உற்பத்தி வீழ்ச்சியடையக் காரணங்கள் மூன்றினைக் கூறுக.

(ii) இலங்கையில் நெல் உற்பத்தி 1946-ஆம் ஆண்டில் இருந்ததைவிட தற்போது கூடியளவின தாகக் கிடைக்க ஏதுவாயிருந்த காரணிகள் சில கூறுக.




அளவுத்திட்டம்: 1:63,360



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. இலங்கையில் 1978-ஆம் ஆண்டு புதிய அரசியல் அமைப்பினுல் புகுத்தப்பட்ட பின்வரும் புதிய அம்சங்களின் முக்கியத்துவத்தைப் பற்றிக் குறிப்புகள் எழுதுக.

(அ) அமைச்சரவைக்குப் புறம்பான அமைச்சர்கள்.

(ஆ) பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்ஸ்மன்.)

7. (i) சர்வதேச சங்கம் எத்தனையாவது உலக யுத்தத்தின் பின் நிறுவப்பட்டது?

(ii) சர்வதேச சங்கத்தின் பிரதான நோக்கங்கள் நான்கினைக் கூறுக.

(iii) இச்சங்கத்தின் உறுப்புக்கள் எவை?

8. (i) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்குப் பல்வகை உதவிகளை வழங்கும் உலக நிறுவனங்கள் மூன்றினைக் கூறுக.

(ii) அவை ஒவ்வொன்றினையும் சுருக்கமாக விபரிக்க.

9. (i) சனநாயக ஆட்சிமுறையில் பிரசையொருவனது முக்கிய கடமைகளையும், உரிமைகளையும் கூறுக.

(ii) பொதுசன அபிப்பிராயம் என்றால் என்ன?

(iii) இதனைச் சனநாயக முறையில் ஏற்படுத்தும் சாதனங்கள் எவை?

(iv) இச் சாதனங்களை அரசாங்கம் ஏன் கட்டுப்படுத்தக்கூடாது என்பதற்கான உமது விளக்கத்தைத் தருக.

10. (i) உலகத்தில் அமைதியைப் பேணுவதற்காக ஐக்கிய நாடுகள் சபையினுல் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக?

(ii) ஐ. நா. சபை மேற்கொண்ட நடவடிக்கைகள் எந்த அளவிற்கு வெற்றி அளித்துள்ளது?

11. (i) அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக நிலை என்ன?

(ii) சர்வதேச வர்த்தகத்தில் அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் யாவை?

12. உலக உணவு நெருக்கடிக்கான காரணங்களைச் சுருக்கி விபரிக்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதிரி வினாத்தாள்: 5 தரம்: 10

# சமூகக்கல்வி

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர)ப் பரீட்சை, டிசம்பர் (புதிய பாடத்திட்டம்)

## சமூகக்கல்வி 1

நேரம்: 1 மணி

(எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக)

1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4) என்று இலக்கமிடப்பட்டிருக்கும் விடைகளுள் சரியானது அல்லது மிகவும் பொருத்தமானது என நீர் கருதுவதனைத் தெரிவு செய்க; விடைத்தாளில், உமது விடையை ஒத்திருக்கும் கூட்டினுள் புள்ளடியை (X) பென்சிலால் இடுக.

1. இலங்கையின் பண்பாட்டியலில் மிகப் பெரும் விளைவை ஏற்படுத்திய வரலாற்று நிகழ்ச்சி எது?
   (1) பிரித்தானியரின் வருகை. (2) பௌத்த சமயம் நிலைபெற்றமை.
   (3) இந்தியப் படையெடுப்புகள். (4) ஒல்லாந்தரின் வருகை.

2. இலங்கையின் புராதன நீர்ப்பாசனத்திட்டங்களுக்கும், நவீன நீர்ப்பாசனத்திட்டங்களுக்கு மிடையிலான ஒற்றுமை யாது?
   (1) அவை பாரிய திட்டங்கள்.
   (2) அவை பல நோக்குத் திட்டங்கள்.
   (3) அவை வெளிநாட்டுதவிகளுடன் கட்டப்பட்டவை.
   (4) அவை நதிப்பள்ளத்தாக்குகளில் கட்டப்பட்டமை.

3. இலங்கையின் பொருளாதாரத்தில் வர்த்தகப் பயிர்கள் முக்கியம் பெற்றமைக்கான பிரதான காரணி.
   (1) இலங்கையின் ஏற்றுமதி வர்த்தக விருத்தி.
   (2) பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் இலங்கை இருந்தமை.
   (3) உலர்வலயம் கைவிடப்பட்டமை.
   (4) மலைநாட்டின் சாதகமான பௌதிக நிலைமைகள்.

4. இலங்கையில் இரும்புத்தாது காணப்படும் இடங்கள் வருமாறு:
   (1) புல்மோட்டை, திருக்கோயில், மன்னார்.
   (2) அம்பாந்தோட்டை, புத்தளம், ஆனையிறவு.
   (3) சேருவில, விலகெதர, கஹாவத்தை.
   (4) றம்பீவா, கல்பிட்டி, காங்கேசன்துறை.

5. மேல்வரும் மாவட்டங்களில் எதில் நெல் வேளாண்மையானது நீர்ப்பாசன நீரில் தங்கியுள்ளது?
   (1) கம்பகா (2) யாழ்ப்பாணம் (3) கிளிநொச்சி (4) காலி

6. உலகின் பல பகுதிகளில் நடைபெற்றுவரும் போர்களைத் தீர்க்கப் பின்வருவனவற்றில் எது மிகவும் பயனுள்ளது?
   (1) இணக்கப் பேச்சுக்கள் மூலம் பிரச்சினைகளைத் தீர்த்தல்.
   (2) போர்க்கருவிகளை உற்பத்தி செய்வதைத் தவிர்த்தல்.
   (3) சர்வதேச நீதிமன்றத்தின் அதிகாரத்தை அதிகரித்தல்.
   (4) ஐக்கியநாடு ஸ்தாபனத்தின் அமைதி காக்கும் படையை நிறுவுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. பின் வரும் *I, II* என்ற நிரல்களில் தொழில் விபரங்களுள்ள இடங்களும், அவற்றின் உற்பத்திப் பொருள்களும் தரப்பட்டுள்ளன. நிரல் *II* - ஐ நிரல் *I* இல் இருக்கும் ஒழுங்கிற்கு இணங்க அமைக்கில் எவ்வாறு இருக்கும்?

| I | II |
|---|---|
| (அ) காங்கேசன்துறை | (உ) ஒட்டுப்பலகை |
| (ஆ) ஜின்தோட்டை | (ஊ) கட்டிப்பால் |
| (இ) பொலநறுவை | (எ) சீமேந்து |
| (ஈ) வாழைச்சேனை | (ஏ) கடுதாசி |

(1) உ, ஊ, எ, ஏ (2) எ, ஏ, ஊ, உ

(3) எ, உ, ஊ, ஏ (4) ஏ, உ, ஊ

8. சர்வதேச வியாபாரம் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் மிகவும் பொருத்தமானது எது?

(1) சர்வதேச வர்த்தகத்தில் அபிவிருத்தியடைந்த நாடுகள் அனைத்தும் கைத்தொழிற் பொருட்களை மட்டும் ஏற்றுமதி செய்கின்றன.

(2) சர்வதேச வர்த்தகத்தில் ஓரளவுக்கேனும் ஈடுபடாத நாடுகளைக் காண்பது அரிது.

(3) சர்வதேச வர்த்தகத்தில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் ஈடுபடுவதில்லை.


(4) சர்வதேச வர்த்தகத்தால் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்கிறது.

9. ஒல்லாந்தரின் ஆட்சியின் விளைவால் பின்வருவனவற்றுள் எது இலங்கையில் தாபிக்கப்பட்டது?

(1) ரோமன் கத்தோலிக்க சமயம். (2) இருமைப் பொருளாதாரம்.

(3) ஒரு புதிய சட்டமுறை. (4) கிராமிய சபைகள்.

பின்வரும் நான்கு படங்களை அவதானித்துவிட்டு, 10 முதல் 15 வரையுள்ள வினாக்களுக்கான விடைகளைத் தருக.




(அ) (ஆ) (இ) (ஈ)

10. நீர்ப்பாசனக் குளம் ஒன்றினை அமைக்கக்கூடிய பிரதேசம் எது?

(1) — (அ) (2) — (ஆ) (3) — (இ) (4) — (ஈ)

11. பல்வேறு சமயங்களைச் சேர்ந்த மக்கள் வாழும் பிரதேசம் எது?

(1) — (அ) (2) — (ஆ) (3) — (இ) (4) — (ஈ)

12. மீன்பிடித் தொழிலிற்குப் பொருத்தமான பிரதேசம் எது?

(1) — (அ) (2) — (ஆ) (3) — (இ) (4) — (ஈ)

13. நேர் கோட்டுக் குடியிருப்பு காணப்படும் பிரதேசம் எது?

(1) — (அ) (2) — (ஆ) (3) — (இ) (4) — (ஈ)

14. உப்புக் கைத்தொழிலிற்கு வாய்ப்பான பிரதேசம் எது?

(1) — (அ) (2) — (ஆ) (3) — (இ) (4) — (ஈ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. நகரமரீக விரைவில் மாறக்கூடிய பிரதேசம் எது?
(1) —— (அ) (2) —— (ஆ) (3) —— (இ) (4) —— (ஈ)

16. தேசியப் பண்பாட்டிற்கு மறுவாழ்வு அளித்த பெரியார்கள் எவர்?
(1) டீ. எஸ். சேனநாயக்க, பண்டாரநாயக்க, டட்லிசேனநாயக்க
(2) அனகாரிக்கதர்மபால, ஆறுமுகநாவலர், சித்திலெப்பை
(3) பொன்னம்பலம், இராமநாதன், பெரேரா
(4) சித்திலெப்பை, டீ. எஸ். சேனநாயக்க, ஆறுமுகநாவலர்

17. இலங்கையில் குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் தனக்கு வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து மனுச் செய்யக் கூடிய நீதிமன்றம் எது?
(1) கோமறைக் கழகம் (பிரிவிக் கவுன்சில்) (2) உயர்மன்று (சுப்பிறீம் கோடு)
(3) மாவட்ட நீதி மன்றம். (4) மேன்முறையீட்டு நீதிமன்றம்.

18. ஒரு சனநாயக நாட்டில் மக்களின் கருத்தை மிகத் தெளிவாகக் காட்டுவது எது?
(1) பகிரங்கக் கூட்டங்கள். (2) குடியொப்பம் (மக்கள் தீர்ப்பு)
(3) பாராளுமன்ற விவாதங்கள் (4) சுதந்திரமான பத்திரிகைகள்.


19. இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பின்படி. ஜனாதிபதியானவர்.
(1) சட்டவாக்கத் துறையின் தலைவராவர். (2) அரசின் தலைவராவர்.
(3) நிறைவேற்றுத் துறையின் தலைவராவர். (4) ஆயுதப்படையின் தலைவராவர்.

20. அபிவிருத்தியடைந்த நாடுகளால் மேற்கொள்ளப்படும். பின்வரும் கொள்கைகளுள் எது, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்குப் பெரிதும் உதவக்கூடியது?
(1) அந்த நாடுகளின் சனத் தொகையைக் கட்டுப்படுத்த உதவுதல்.
(2) அந்த நாடுகளின் உற்பத்திப் பொருள்களுக்கு நியாயமான விலை கொடுத்தல்.
(3) அந்த நாடுகளுக்குக் கடன்வசதி செய்தல்.
(4) அந்த நாடுகளின் கைத் தொழில் விருத்திக்கு உதவுதல்.

21. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் பயிர்ச் செய்கையில் உச்ச விளைவைப் பெறக் கைக்கொள்ள வேண்டிய நடவடிக்கை எது?
(1) பயிர்ச் செய்கையில் புதிய தொழில் நுட்பமுறைகளைப் பயன்படுத்துவது.
(2) நீர்ப்பாசனத்தை விரைவாக அபிவிருத்தி செய்வது.
(3) சிறிய விளைநிலங்களை இணைத்துப் பெரிய பண்ணைகளாக்குவது.
(4) புதிய பயிர்களைப் பயிரிடுவது.

22. உலகில் அபிவிருத்தியடைந்த நாடுகளிற் பெரும்பாலானவை எக்கண்டங்களிலுள்ளன?
(1) ஆசியா, ஐரோப்பா (2) ஐரோப்பா, வட அமெரிக்கா
(3) தென் அமெரிக்கா, வட அமெரிக்கா (4) ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா

பின்வரும் வரைப்படம் இலங்கையின் ஒரு பிரதேச மழைவீழ்ச்சியையும் வெப்பநிலையையும் காட்டுகிறது. இத்தரவுகளைப் பயன்படுத்தி 23, 24 ஆம் வினாக்களுக்கு விடை தருக.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23: மழைவீழ்ச்சியின் போக்கை நோக்கும்போது:
(1) தென்மேல் பருவக்காற்றுக் காலத்தில் அதிக மழை.
(2) வருடம் முழுவதும் சீரான மழை.
(3) வடகிழ்ப் பருவக்காற்றுக் காலத்தில் அதிக மழை.
(4) மாரிகாலத்தில் அதிக மழை.

24: உச்ச வெப்பநிலை நிலவும் மாதம்:
(1) ஒக்டோபர் (2) ஜனவரி (3) நவம்பர் (4) யூன்

இலங்கையின் மாவட்டப்படம் தரப்பட்டுள்ளது. 25 முதல் 30 வரையிலான வினாக்களுக்கு இப் படத்தின் உதவியோடு விடைகள் தருக:




25. விகிதாசாரப் பிரதிநிதித்துவம் என்ற புதிய முறையின் கீழ் 22 தேர்தல் மாவட்டங்களுள்ளன. இவற்றுள் 21 இல் நிர்வாக மாவட்டங்களே தேர்தல் மாவட்டங்களாகவு முள்ளன. ஏனைய மூன்று மாவட்டங்கள் இணைந்து ஒரு தேர்தல் மாவட்டமாக்கப் பட்டது: அவை யாவை?
(1) வதுளை, மொனராகலை, அம்பாறை
(2) வவுனியா, முல்லைத்தீவு, மன்னார்
(3) வவுனியா, மட்டக்களப்பு, அனுராதபுரம்
(4) வதுளை, இரத்தினபுரி, அம்பாறை

26: பேதுருதாலகாலமலை அமைந்துள்ள மாவட்டம் எது?
(1) கண்டி (2) இரத்தினபுரி
(3) மாத்தளை (4) நுவரெலியா

27: உப்புச் செய்கை நடைபெறும் தென் மாவட்டம் எது?
(1) யாழ்ப்பாணம்
(2) மாத்தறை
(3) புத்தளம்
(4) அம்பாந்தோட்டை

28. சீமேந்து ஆலை, காகித ஆலை என்பன அமைந்திருக்கும் மாவட்டங்கள் முறையே:
(1) காலி, மட்டக்களப்பு
(2) காங்கேசன்துறை, அம்பாறை
(3) புத்தளம், திருகோணமலை
(4) மட்டக்களப்பு, பொலநறுவா

29: மலை நாட்டை உள்ளடக்கும் மாவட்டங்கள் எவை?
(1) குருணாகல், மாத்தளை, புத்தளம்
(2) இரத்தினபுரி, குருணாகல், கேகாலை
(3) கண்டி, மாத்தளை, நுவரெலியா
(4) கண்டி, மாத்தளை, அனுராதபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. கடந்த காலத்தில் இலங்கையின் பெருமையை எடுத்துக் காட்டும் அழியாடுகள் மிகப் பெருந் தொகையாகக் காணப்படும் மாவட்டங்கள் யாவை?


(1) அநுராதபுரம், பொலநறுவை, கண்டி

(2) மாத்தளை, கண்டி, யாழ்ப்பாணம்

(3) திருகோணமலை, அனுராதபுரம், பொலநறுவை

(4) கொழும்பு, கம்பகா, குருநாகல்

பின்வரும் உலகப்படத்தின் உதவியைக் கொண்டு 31 தொடக்கம் 40 வரையிலான வினாக்களுக்கு விடை தருக; இப்படத்திலுள்ள சதுரங்களுக்குப் பெயரிடுவதற்கு உச்சத்திலுள்ள எண்களும், இடது பக்கத்திலுள்ள ஆங்கில எழுத்துக்களும் பயன்படுத்தப் படவேண்டும். உலகத்திலுள்ள ஒரு எண்ணை இடது பக்கத்திலுள்ள ஒரு ஆங்கில எழுத்துடன் சேர்த்து வாசிப்பதன் மூலம் ஒரு சதுரம் சுட்டிக் காட்டப்படுகிறது. உதாரணமாக இலங்கை D 6 சதுரத்துள் உள்ளது;




31. மக்கள் சீனக் குடியரசின் பெரும்பகுதி எச் சதுரத்திலுள்ளது?
(1) D 6 (2) D 7 (3) C 7 (4) C 8

32. அபிவிருத்தியடைந்த நாடுகளை மட்டும் கொண்ட இரு சதுரங்கள்:
(1) E8, C5 (2) C2, C3 (3) C2, C5 (4) C1, C7

33. இலங்கை ஒரு காலத்தில் தமது குடியேற்ற நாடுகளாகக் கொண்டிருந்த பிரித்தானியா, போர்த்துக்கல், ஒல்லாந்து (நெதர்லாந்து) என்பன எச்சதுரத்திலுள்ளன?
(1) C4 (2) C5 (3) C2 (4) C6

34. கீழைத்தேச நாடுகளில் அபிவிருத்தியடைந்த நாடு ஒன்றுள்ளது. அது எச் சதுரத்தினுள் உள்ளது?
(1) D7 (2) D6 (3) C7 (4) C8

35. கனிய எண்ணெயை (பெற்றோலியம்) உற்பத்தி செய்கின்ற நாடுகளைக் கொண்ட சதுரம் யாது?
(1) D2 (2) D6 (3) C5 (4) C2

36. D 7 சதுரங்களுள் அமைந்துள்ள நாடுகளின் பொதுவான அம்சம்.
(1) மிக உயர்ந்த சனத்தொகை. (2) கைத் தொழில் விருத்தி.
(3) உயர்ந்த வாழ்க்கைத்தரம். (4) புராதன நாகரிகம்.

37. 'ஒபெக்' நிறுவன நாடுகளில் பல அமைந்துள்ள சதுரம் எது?
(1) C3 (2) C4 (3) D5 (4) D6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38. மத்திய கோடாக அமைவது எது?

(1) B - க்கும் C - க்கும் இடைப்பட்ட கோடு; (3) D - க்கும் E - க்கும் இடைப்பட்ட கோடு;
(2) C - க்கும் D - க்கும் இடைப்பட்ட கோடு; (4) E - க்கும் F - க்கும் இடைப்பட்ட கோடு.

39. C2, C3 ஆகிய சதுரங்களுள் அமையும் நாடுகளுக்குப் பொருத்தமான கூற்று:

(1) பயிர்ச் செய்கை நாடுகள். (2) குறைந்த விருத்தி நாடுகள்.
(3) பௌதிக வாழ்க்கைப் பண்புச் சுட்டி குறைந்த நாடுகள்; (4) கைத்தொழில் நாடுகள்.

40. தென்னரைக் கோள நாடுகளில், அபிவிருத்தியடைந்த நாடுகளுள்ள இரு சதுரங்கள்:

(1) E5, E8 (2) E3, D3 (3) D2, D5 (4) E5, E7

## சமூகக் கல்வி - 2

நேரம்: 3 மணி

(முதலாம் வினவுக்கும் ஏனைய ஐந்து வினாக்களுக்கும் விடை எழுதுக.)

1. தரப்பட்டுள்ள சமவுயரக் கோட்டுப்படத்தைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக. (படம் 41-ம் பக்கம் பார்க்க)

(அ) 2500 அடிக்கு மேற்பட்ட மூன்று பிரதேசங்களுக்கு நிறந்தீட்டுக.
(ஆ) பிரதான ஆற்றின் போக்கினை வரைக. ஒரு கிளையாற்றைக் குறிக்க.
(இ) சுவடு, தனிமையாக்கப்பட்ட குன்று, குழிவுச் சாய்வு, குறுக்குப்பள்ளத்தாக்கு என்ற சொற்களை ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான ஓர் உதாரணம் உள்ள ஓரிடத்தில் எழுதுக.
(ஈ) C-யிலிருந்து பார்த்தால் B தெரியுமா என்பதைக் குறுக்குப் பக்கப்பார்வையுடன் விபரிக்குக.

2. பின்வரும் பந்தியில் பத்து வெற்றிடம் உள்ளன. அவற்றைச் சரியான சொற்களைக் கொண்டு நிரப்புக.

(1) ............... ஆம் ஆண்டு இலங்கை ஜனநாயகச் சோசலிசக் குடியரசாகியது. (2) ............ நியமிக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி அரசின் முதல்வராக உள்ளார். ஜனநாயக சோசலிசக் குடியரசு யாப்பிற்கு முன், இலங்கையின் அரச முதல்வராக தேசாதிபதி விளங்கிய போதிலும், நிறைவேற்று அதிகாரமுடையவராக. (3) ...................யே விளங்கியுள்ளார். இன்றும் இலங்கை சர்வதேச சங்கமான (4) .................. இன் ஒரு அங்கத்துவ நாடாகவேயுள்ளது. அத்துடன் சர்வதேச நாடுகளுக்கிடையிலான உறவினைப் பொறுத்த மட்டில் (5) .................. கொள்கையைக் கைக்கொள்கிறது. இலங்கையின் தற்போதைய சனத்தொகை (6) .................. மில்லியனாகும். உணவில் தன்னிறைவையும் வேலை வாய்ப்புகளையும் ஏற்படுத்துவதற்காக இலங்கை நடைமுறைப் படுத்திவரும் பாரிய திட்டம் (7) .................. ஆகும். இத்திட்டத்தில் (8) ............... நீர்த்தேக்கங்கள் உருவாகிவருகின்றன. (9) ............... இலட்சம் மக்கள் குடியேற்றப்படுவர். (10) ......... மில்லியன் கிலோவாட் மின்சாரம் பெறப்படும்.


3. (அ) இலங்கையின் மலைநாட்டில் பிரித்தானியரால் பயிர் செய்யப்பட்ட பணப் பயிர்களைச் சுட்டிக் காட்டுவதுடன், இப் பயிர்ச் செய்கைக்கு உதவியாக அமைந்த பௌதிகநிலைமைகளை விபரிக்குக.
(ஆ) மலைநாட்டு மக்கள் எதிர்நோக்க வேண்டியிருந்த பொருளாதார, சமூகப் பிரச்சினைகளையும் விபரிக்குக.
(இ) இப் பணப் பயிர்களின் செய்கையிலிருந்து இலங்கை இன்று பெறும் பொருளாதார அனுகூலங்களையும் பிரதி கூலங்களையும் கூறுக.

4. இலங்கையின் 1972 ஆம் ஆண்டினதும், 1978 ஆம் ஆண்டினதும் அரசியல் யாப்புகளைப் பின்வரும் விடயங்களில் ஒப்புநோக்கி ஆராய்க.

(அ) ஜனாதிபதி பதவி (ஆ) பாராளுமன்றம் (இ) அமைச்சரவை

5. (அ) 'இயற்கைத் தாவரம்' என்பதனால் கருதப்படுவது யாது என்பதை விளக்கி, அவற்றின் வளர்ச்சிக்கு உதவும் காரணிகளை எடுத்துக் காட்டுக.
(ஆ) இலங்கையின் இயற்கைத் தாவர வகைகளையும் அவற்றின் பரம்பலையும் விபரிக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




6. இலங்கையின் அபிவிருத்திக்குப் பின் வருவன எவ்வாறு தடையாகின்றன என விபரிக்க:
(அ) மூலதனப் பற்றுக்குறை: (ஆ) வேலை வாய்ப்பின்மை. (இ) சனத்தொகை அதிகரிப்பு:

7. (அ) பொலநறுவை இராச்சியம் வீழ்ச்சியடைந்தபின் இலங்கையின் தலைநகராகத் தெரிவு செய்யப்பட்ட மூன்று இடங்களைப் பெயரிடுக.
(ஆ) காலத்துக்குக் காலம் தலைநகரை மாற்றியதற்கான காரணங்கள் யாவை?
(இ) இந்தக் காலத்தில் ஒரு தலைநகரைத் தெரிவு செய்வதால் முக்கியமானவையெனக் கருதப்பட்ட புவியியற் காரணிகள் யாவை?

8. பின்வரும் கடமைகளைச் செய்வதற்காக இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட அமைப்புகளையும், நிறுவகங்களையும் சுருக்கமாக விபரிக்க:
(அ) நீதிமுறைக் கருமங்கள் (ஆ) மாவட்ட நிர்வாகம் (இ) உள்ளூராட்சி

9. (அ) உலக உணவு உற்பத்தி அபிவிருத்தியில் உபயோகிக்கத்தக்க மூன்று முறைகளை விபரிக்க:
(ஆ) உலக உணவுப் பிரச்சினைகளுக்கான காரணிகளை விளக்குக:
(இ) உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கு உலக உணவு விவசாய நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் எவை?

10. ஒரு பிரதிநிதித்துவ குடியாட்சியில் பின்வருவன ஏன் முக்கியமானவை என்பதை விளக்குக:
(அ) வாக்களிக்கும் உரிமை (ஆ) தேர்தல்கள் (இ) பொதுமக்கள் அபிப்பிராயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைகள்

## மாதிரி வினத்தாள்: 1

### சமூகக்கல்வி: 1

| | | | |
|---|---|---|---|
| 1 — (3) | 2 — (2) | 3 — (1) | 4 — (1) |
| 5 — (3) | 6 — (3) | 7 — (2) | 8 — (2) |
| 9 — (4) | 10 — (3) | 11 — (1) | 12 — (4) |
| 13 — (2) | 14 — (3) | 15 — (2) | 16 — (1) |
| 17 — (2) | 18 — (2) | 19 — (4) | 20 — (4) |
| 21 — (4) | 22 — (4) | 23 — (2) | 24 — (2) |
| 25 — (3) | 26 — (3) | 27 — (3) | 28 — (4) |
| 29 — (1) | 30 — (2) | 31 — (2) | 32 — (4) |
| 33 — (4) | 34 — (3) | 35 — (2) | 36 — (2) |
| 37 — (1) | 38 — (1) | 39 — (3) | 40 — (2) |

### சமூகக்கல்வி: 2

குறிப்பு: 1, 2, 3, 4, 5 வினாக்களுக்குரிய விடைகளைப் படத்திலேயே குறிக்க வேண்டும்; குறிப்பதற்குரிய வழிகாட்டி பின்வருமாறு:

(1) $\frac{1}{63,360}$

(2) கடல்பரப்பு மேற்குப் பக்கத்தில் உள்ளது; நீலநிறத்தால் நிழற்றிக் காட்டுதல் வேண்டும்;

(3) 300 அடிகளுக்கு மேற்பட்ட பகுதிகளை நிறந்தீட்டிக் காட்டுக; மொத்தம் ஆறு பகுதிகள் உள்ளன;

(4) கூம்புக்குன்று 2 என இலக்கமிடப்பட்ட முறிகோட்டில் எழுதுக; அவ்வாறே சிறுகுன்று இல: 6; பாலம் இல: 3; மணற்றடை இல: 4; நெடுக்குப் பள்ளத்தாக்கு இல: 5; சேற்று நிலம் இல: 6; பாறைத் தொடர் இல: 1;

(5) A என்ற இடத்தில் ஒரு சந்தியுள்ளது; குடியிருப்பு அடையாளம் (=) இடுக; மருத்துவ நிலையம் D, அஞ்சல் அலுவலகம் P, பொலிக நிலையம் P; S. என அதன் அருகில் எழுதிவிடுக; கிறிஸ்தவ தேவாலயம் †;

(6) (அ) ஆரை வடிகால் (ஆ) சட்டத்தட்டு வடிகால்

இப்பிரதேசத்தின் தென்கிழக்கே காணப்படும் கூம்புக் குன்றத்திலிருந்து அருவிகள் உற்பத்தியாகி நான்கு பக்கங்களும் பாய்கின்றன; கூம்புக்குன்றம் அமைந்ததால்தான் அவை ஆரை வடிவில் பாய்கின்றன.

இப்பிரதேசத்தின் வடகிழக்குப் பாகத்தில் சட்டத்தட்டு வடிகால் அமைந்துள்ளது. பாறைத் தொடர்களில் இருந்து உற்பத்தியாகின்ற அருவிகள் செங்குத்தாகக் சிளையாறுகளை வந்து அடைகின்றன. நெடுக்குப் பள்ளத்தாக்கில் சட்டத்தட்டு வடிகால் அமைந்துள்ளது;

(7) கிழக்கேயிருந்து பாய்ந்து வரும் நதி 100' சமவுயரக்கோட்டைக் கடந்ததும் வேகம் குறைகின்றது; அதனால் அது காவி வரும் அதிக நீர் கடலுடன் வேகமாகச் சேர்க்கப்படாமையால் சேற்று நிலம் தோன்றியுள்ளது; நதியின் அதிக நீரும், நதியின் வேகக் குறைவுமேதான் சேற்று நிலம் தோன்றக் காரணம்;


(8) இரண்டு வீதிகள் இணைகின்ற சந்தி ஆதலால் குடியிருப்புத் தோன்றியுள்ளது; அருகில் நதியும் இருப்பது நீர்வசதியாகும்.

(9) B என்ற இடம் கடற்கரையோரமாகும்; மீன் பிடித்தல் நடைபெறுகிறது; அதனால் குடியிருப்புத் தோன்றியுள்ளது;

(10) தென்னை (C)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


2. (i) ★




★ விடைக்குரிய படம்

(ii) 1000 அடிகளுக்கு மேற்பட்ட பகுதி பொதுவாக மத்திய மலைநாடு ஆகும். மலைநாட்டில் 5000′ மேற்பட்ட பகுதி நங்கூர வடிவமானது. இதில் பேதுருதாலகால, தோட்டப்பாலை, சிவனொளி பாதம், கிரிகாலப்பொத்தை முதலிய மலைகள் உள்ளன. நங்கூரவடிவ உயர் நிலத்தைச் சூழ்ந்து கிழக்கே கற்றன் மேட்டுநிலம், மேற்கே வெலி மடை மேட்டு நிலம் (ஊவா வடி நிலம்), வடக்கே கண்டி மேட்டுநிலம், தெற்கே தென் மேட்டு நிலம் என்பன அமைந்துள்ளன. கண்டி மேட்டு நிலத்திற்கு வடக்கே நக்கிள்ஸ் மலைகள் அமைந்துள்ளன. மாத்தளை மலைகள், தொலஸ்பாகே மேனிலம், கிழக்கு மேடை, றக்குவானைத் திணிவு என்பனவும் மலைநாட்டில் அடங்குகின்றன. மலை நாட்டில் மகாவலிகங்கை, களனிகங்கை, வளவ கங்கை முதலிய நதிகள் உற்பத்தியாகிப் பாய்கின்றன.

(iii) ஈரலிப்பான தென்மேல் பருவக்காற்றை மலை நாடு தடுத்துக் குளிர வைப்பதால், இலங்கையின் தென்மேல் பிரதேசமும், மலைநாட்டின் மேற்குப் பகுதியும் அதிக மழையைப் பெறுகின்றன. மலைநாட்டைக் கடந்து தென்மேல் பருவக் காற்று வீசும்போது வரண்ட காற்றாக வீசுகிறது. அதனால் இலங்கையின் கிழக்குப் பகுதி தென்மேல் பருவக்காற்றால் மழையைப் பெறுவதில்லை.




3. (i) (அ) புதிய விளைநிலங்களைப் பயிர்ச் செய்கைக்குட்படுத்தல்
(ஆ) ஏக்கருக்குரிய விளைச்சலை அதிகரித்தல்
(இ) புதிய உணவு வகைகளை அறிமுகப்படுத்தல்

(ii) ஏக்கருக்குரிய விளைச்சலை அதிகரிப்பதற்குப் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.
(அ) பசளை, கிருமிநாசினி என்பவற்றை உபயோகித்தல்
(ஆ) தரமான விதைகளை உபயோகித்தல்
(இ) நவீன கருவிகளைப் பயன்படுத்தல்

4. (அ) (1) உள்நாட்டில் தலைமைப் பதவிக்காக அரசர்களிடையே ஏற்பட்ட குழப்பங்கள்.
(2) தென்னிந்தியரின் படையெடுப்பால் (குறிப்பாக கலிங்கமாகன்) நீர்ப்பாசனத் திட்டங்கள் அழிக்கப்பட்டமை.
(3) நீர்ப்பாசன வசதிகளைக் கைவிட்டு மக்கள் தென்மேற்காகப் புலம் பெயர்ந்தமை.
(4) ஆங்கிலேயரின் வருகையால் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை முறை புகுத்தப்பட்டது. விவசாயம் கைவிடப்பட்டது.
(5) வெளி நாட்டிலிருந்து உணவுப் பொருட்களை ஆங்கிலேயர் இறக்குமதி செய்தமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) (1) ஏற்றுமதி, இறக்குமதிப் பொருளாதாரமாக மாற்றமடைந்தது: தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்களை ஏற்றுமதி செய்து உணவுப் பொருட்களை இறக்குமதி செய்யும் அமைப்பு, ஆங்கிலேயரால் இலங்கையின் மூலதனப் பொருட்கள் பிரித்தானியாவிற்கு அனுப்பப்பட்டு அவர்களின் உற்பத்திப் பொருட்களை இங்கு கட்டாயமாக இறக்குமதி செய்யப்பட்டது:

(இ) (1) ஆங்கிலக் கல்விமுறை புகுத்தப்பட்டது. அரசாங்க உத்தியோக முறைமை ஏற்பட்டது: மத்தியதர வகுப்பினர் தோற்றம் பெற்றனர்:

(2) கிறிஸ்தவ சமயம் மக்களிடையே பரவியது: மேலைத்தேச நாகரீகம், உணவு முறை என்பன வற்றை மக்கள் கைக்கொண்டனர்.

(3) போக்குவரத்துப் பாதைகள் அமைக்கப்பட்டதுடன் போக்குவரத்துச் சாதனங்களும் இறக்குமதி செய்து பயன்படுத்தப்பட்டன:

(4) பாராளுமன்ற முறை, நீதிபரிபாலன முறை என்பன இலங்கையில் நடைமுறைப்படுத்தப் பட்டது:

5இ (1) நியமனம்:- 1972-ம் ஆண்டின் குடியரசு அரசியலமைப்பின்படி ஜனாதிபதி, பதவியிலிருக்கும் அரசின் சிபார்சின்மூலம் நியமிக்கப்படுவர்: இவர் வாக்காளரால் தெரிவு செய்யப்பட்டவரல்லர்: 1978-ம் ஆண்டின் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின்படி ஜனாதிபதி, மக்களால் தெரிவு செய்யப்படுவார்; பெரும்பான்மைக் கட்சியின் தலைவரே இப்பதவியை ஏற்பார்.

(2) அதிகாரங்களும் கடமைகளும்:- 1972-ன் குடியரசின் ஜனாதிபதி இலங்கைக் குடியரசின் தலைவர், படையின் தலைவர்; இவர் போர், சமாதானம் என்பவற்றைப் பிரகடனம் செய்வார்; தேசிய அரசுப் பேரவையைக் கூட்டுவார்: பிரதமரையும், அமைச்சர்களையும் நியமிப்பார். நீதிபதிகள், ஆணையாளர்கள், அரச தூதுவர்கள், அரசப் பிரதிநிதிகள் ஆகியோரை நியமிப்பார்: குற்றவாளி களுக்கு மன்னிப்பு வழங்குவார். இவரது பதவிக்காலம் 4 ஆண்டு: தேசிய அரசுப் பேரவையின் சடங்கு முறையான இருக்கையில் தலைமைதாங்குவார்: இடைத் தேர்தலை நடத்துமாறு கசெற் மூலம் கட்டளையிடுவார்: 1978-ன் ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி பூரண ஆட்சி அதிகாரமும் உரிமையுமுடைய நாட்டின் தலைவர் ஆவார்: பிரதமர், அமைச்சர்கள் ஆகியோரை நியமிப்பவர் இவரே: இலங்கையில் உள்நாட்டு வெளிநாட்டுப் பாதுகாப்பின் தலைவர் இவரே: படைத் தலைவரும் இவரே:

1972-ன் குடியரசின் ஜனாதிபதி போன்று உயர்பதவி வகிக்கும் அரச அதிகாரிகளை இவரே நியமிப்பர்: ஆனால் 1972-ன் குடியரசின் ஜனாதிபதி பிரதமரின் ஆலோசனையின்படி நியமிக்கும் அதிகாரமுடையவர்: ஆனால் இவரோ தனது சொந்த விருப்பப்படி நியமனங்களைச் செய்ய பூரண அதிகாரமும் உரிமையுமுடையவர். இவரது பதவிக்காலம் 6 ஆண்டுகள்:

(3) நிலை: 1972-ன் குடியரசின் ஜனாதிபதி பெயரளவில் பதவியிலிருப்பவர்: பிரதமரின் ஆலோசனை யின்படி கருமமாற்ற வேண்டியவர்;

1978-ன் சனநாயக சோஷலிசக் குடியரசின் ஜனாதிபதி 1972-ன் ஜனாதிபதிக்கு முற்றிலும் வேறுபட்ட நாட்டின் சகல அரச அதிகாரங்களுமுடைய தனது சொந்த அதிகாரத்தின் பேரில் இயங்கக்கூடிய உரிமையும் அதிகாரமுமுடையவர்.

6இ (i) ஐக்கியநாடுகள் ஸ்தாபனம்

(ii) 1945-ஆம் ஆண்டு

(iii) பொதுச்சபை, பாதுகாப்புச் சபை, பொருளாதாரச் சமூகநலச் சபை, நம்பிக்கைப் பொறுப்புச் சபை (தர்மகர்த்தாசபை), தலைமைச் செயலகம், சர்வதேச நீதிமன்றம்;

(iv) பாதுகாப்புச்சபை: நிரந்தர அங்கத்துவ நாடுகளான பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா, சோவியத் ஒன்றியம், பிரான்ஸ், மக்கள் சீன ஆகியவற்றின் பிரதிநிதிகளையும், நிரந்தர அங்கத்துவமில்லாத 10 பிரதிநிதிகளையும் இச்சபை கொண்டது: உலகநாடுகளின் சமாதானத் தைப் பேணும் முக்கிய பொறுப்பு இச்சபைக்குரியது. நிரந்தர அங்கத்துவ நாடுகளும் ஏனைய 9 நாடுகளும் சாதகமாக வாக்களித்தால்தான் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்படும்: நிரந்தர அங்கத்துவ நாடு ஒன்று ஒரு தீர்மானத்தை எதிர்த்தால் எந்த முடிவும் செல்லாது போய் விடும். இந்த அதிகாரத்தை 'வீட்டோ அதிகாரம்' என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. (i) சுத்தமான நீர், சுத்தமானகாற்று, சுகாதாரமான நிலம் இவை மூன்றும் மனித இனத்துக்கு அத்தியாவசியமானவை: நீர், காற்று, நிலம் என்ற இம் மூன்றும் அசுத்தமடைவதையே 'சூழல் மாசடைதல்' என்பர்.

(ii) (அ) **தொழிற்சாலைகள்:** தொழிற்சாலைகளிலிருந்து வரும் எண்ணெய், புகை, வேறு அசுத்தப் பொருட்கள் என்பவற்றினால்,

(ஆ) **வாகனங்கள், அணுப்பரிசோதனைகள்:** நகர்ப்புறங்களில் பெற்றோலியத்தைப் பயன்படுத்தி ஓடும் வாகனங்கள் புகைகக்குகின்றன. அணுப் பரிசோதனைகளை வல்லரசுகள் செய்கின்றன; இவை வளியை மாசடைய வைக்கின்றன.

(இ) **மக்கள்:** நகர்ப்புறங்களில் நெருக்கமாக வாழும் மக்கள் சுகாதார முறைகளைக் கைக் கொள்ளாமை.

(iii) தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் அசுத்தங்களை நதியிலோ, கடலிலோ கலக்கவிடாமல் தடைசெய்ய வேண்டும்; வல்லரசுகள் செய்கின்ற அணுப் பரிசோதனைகளை நிறுத்த வேண்டும்; நகர்ப்புறங்களில் குடியடர்த்தியைக் குறைக்க வேண்டும்; சுகாதார வசதிகளை அதிகரிக்க வேண்டும். தொழிற்சாலைகளை ஒதுக்குப் புறங்களில் அமைக்க வேண்டும்.

8. (i) சனநாயக ஆட்சியின் பிரதான அம்சங்கள்:

(அ) சர்வசன வாக்குரிமை: மக்கள் தம் வாக்குகளைப் பயன்படுத்துவதன் மூலம் விரும்பிய கட்சியை அரசாங்கம் அமைக்கத் தெரிவுசெய்ய முடியும்.

(ஆ) கட்சி முறை: சனநாயக ஆட்சியில் பல கட்சிகள் பங்குகொள்ள வாய்ப்புண்டு. மக்களைத் தம் கொள்கைகளால் கவருகின்ற பெரும்பான்மை ஆதரவைப் பெற்ற கட்சி ஆட்சியை அமைக்கும்.

(இ) எதிர்க்கட்சி முறை: பெரும்பான்மை ஆதரவைப் பெற்ற கட்சி ஆட்சியை அமைக்க, அடுத்த கட்சி எதிர்க்கட்சியாக அமையும். ஆட்சிபுரியும் கட்சி விடும் தவறுகளைச் சுட்டிக் காட்டக் கூடிய எதிர்க் கட்சி முறை சனநாயக ஆட்சியிலேயே உண்டு.

(ஈ) சனநாயக ஆட்சியில் மக்களுக்கு பேச்சுரிமை, எழுத்துரிமை, பத்திரிகைச் சுதந்திரம், பொதுசன அபிப்பிராயம் தெரிவிக்கும் உரிமை, விரும்பிய இடத்தில் வாழும் உரிமை, சங்கங்கள் அமைக்கும் உரிமை, விரும்பிய சமயத்தைக் கடைப்பிடிக்கும் உரிமை, சட்டத்தின்முன் சமன் எனக் கருதப் படும் உரிமை, வழக்காடும் உரிமை, பொருளாதார உரிமை என்பன உள்ளன.

(ii) ஆட்சியின் வெற்றிக்கு அவசியமான நிபந்தனைகள்:

(அ) சனநாயக ஆட்சியை அமைக்கும் கட்சி அறுதிப் பெரும்பான்மையுடையதாக இருக்க வேண்டும்.

(ஆ) அதேபோல எதிர்க்கட்சியும் பலம் வாய்ந்ததாக அமைதல் வேண்டும். அரசாங்கக் கட்சி கொண்டுவரும் மசோதாக்கள் யாவற்றையும் எதிர்ப்பது என எதிர்க்கட்சி இருக்கக்கூடாது; நாட்டின் விருத்திக்கு அவசியமானவற்றை எதிர்க்கட்சி ஆதரிக்க வேண்டும்.

(இ) பொதுசன அபிப்பிராயத்தை ஆட்சியாளர் எப்போதும் மதித்து நடக்க வேண்டும்.

(ஈ) எழுத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், சமயச் சுதந்திரம் என்பவற்றில் ஆட்சியாளர் தலையிடக்கூடாது. அதேபோல சனநாயக நாட்டில் வாழும் மக்களும் பிறரின் சுதந்திர உரிமை களில் தலையிடக்கூடாது;

(உ) நீதிபரிபாலனம் சுதந்திரமுடையதாக இருக்க வேண்டும்; சட்டத்தின் முன் எவரும் சமன் என்ற நிலை இருக்க வேண்டும்;

(ஊ) மக்களது அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றி, நாட்டை விருத்தியடைய வைக்கும் வலுவான பொருளாதாரக் கொள்கை இருக்க வேண்டும்.

9. (i) உருகுவேயும், ஆசெந்தீனாவும் தவிர்ந்த லத்தீன் அமெரிக்க நாடுகள், தென்னாபிரிக்கா தவிர்ந்த ஆபிரிக்க நாடுகள், மத்தியகிழக்கு நாடுகள் பருவக்காற்று ஆசிய நாடுகள்.

(ii) (அ) உலகின் சனத்தொகையில் 2/3 பங்கினர் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் வாழ்கின் றனர். ஆனால், உலக வருமானத்தில் 1/3 பங்கே இந் நாடுகளுக்குரியதாகும்.

(ஆ) இந்நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரம் குறைவானது. ஆள்வீத வருமானம் மிகவும் குறைவு; சீனா 90 டொலரையும், இலங்கை 180 டொலரையும் ஆள்வீத வருமானமாகப் பெறுகின்றன;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) இந்நாட்டு மக்களில் 70 சதவீதமானோர் விவசாயிகள் ஆவர்;

(ஈ) மூலதனப் பற்றுக்குறையினால் இந் நாடுகளில் கைத்தொழிலாக்கங்கள் முன்னேறவில்லை; அதனால் வேலையில்லாத் திண்டாட்டம் இந்நாடுகளிலுள்ளது.

(iii) (அ) விவசாயத்தை அபிவிருத்தியடையச் செய்ய வேண்டும்; விளைநிலங்களின் பரப்பையும் ஏக்கருக்குரிய விளைச்சலையும் அதிகரிக்கச் செய்ய வேண்டும்; நவீன பயிர்ச்செய்கை முறைகளைக் கைக்கொள்ள வேண்டும்;

(ஆ) கைத்தொழிலாக்கங்களை ஆரம்பிக்க வேண்டும் துரித முன்னேற்றத்திற்கும், தொழில் வாய்ப்புக்கள் அதிகரிப்பதற்கும் கைத்தொழிற்சாலைகளே உதவ முடியும்.

(இ) குடிப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் குடிப்பெருக்கம் துரிதமாக அதிகரித்து வருகின்றது; அதனைக் கட்டுப்படுத்துவது துரித அபிவிருத்திக்கு அவசியமாகும்;

10. (i) இரு நாடுகளுக்கு மிடையே வியாபாரத்தில் பொருள் பரிமாறப்படும் முறையே இருபக்க வியாபாரம் எனப்படும். இலங்கை சீனாவிடமிருந்து அரிசியைப் பெற்றுக்கொண்டு, அதற்குப் பதிலாக றப்பரை வழங்குகிறது; இங்கு வியாபாரத்தில் பணம் பரிமாறப்படுவதில்லை.

(ii) குறித்த ஒரு நாட்டிலிருந்து இறக்குமதி செய்த பொருள்களுக்கான கொடுப்பனவை, அந்த நாடு வேறொரு நாட்டுக்கு ஏற்றுமதி செய்த பொருள்களுக்காகக் கிடைக்கும் பணத்தைக் கொண்டு செலுத்துவதைப் பலபக்க வியாபாரம் என்பர். இலங்கை கனடாவிடமிருந்து வாங்கிய பால் பொருட்களுக்கான பணத்தை, ஐக்கிய அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்த தேயிலைக்கான டொலர் மூலம் கொடுப்பனவு செய்யலாம்;

(iii) ஏற்றுமதிப் பொருள்கள் மூலம் கிடைக்கும் வருமானத்திற்கும் இறக்குமதிப் பொருள்களுக்கான செலவுக்குமிடையே உள்ள வித்தியாசமே வியாபார நிலுவை என்பர்; இதனை சென்மதி நிலுவை எனவும் வழங்குவர். 1977-இல் இலங்கையின் ஏற்றுமதி வருமானம் 6638 மில்லியன் ரூபா. அதே ஆண்டு இறக்குமதிச் செலவு 6007 மில்லியன் ரூபா. எனவே வியாபார நிலுவை = 6638 − 6007 = 631 மில்லியன் ரூபா ஆகும்.

(iv) சர்வதேச வியாபாரத்தில், வியாபார நியதி என்பது ஒரு நாடு ஏற்றுமதி செய்கின்ற பொருள்களுக்கும், அது இறக்குமதி செய்கின்ற பொருள்களுக்குமுள்ள விகித சமத்தைக் குறிக்கும்.

$$\frac{\text{ஏற்றுமதி விலைச் சுட்டெண்}}{\text{இறக்குமதி விலைச் சுட்டெண்}} \times 100 = \text{வியாபார நியதி}$$

11. (i) வெளிநாட்டுதவிகளை வழங்கும் சர்வதேச நிறுவனங்கள் வருமாறு:

(அ) ஆசிய அபிவிருத்தி வங்கி, (ஆ) கொழும்புத் திட்டம், (இ) உலக வங்கி,
(ஈ) சர்வதேச பண நிதியம் (உ) சர்வதேச அபிவிருத்தி முகவரகம்.

(ii) (அ) ஆசிய அபிவிருத்தி வங்கி: ஆசிய தூர கிழக்கு நாடுகளுக்கு உதவியளிப்பதற்காக 1964-இல் இந்தத் தாபனம் நிறுவப்பட்டது. ஆசிய நாடுகளே இதனை நிர்வகிக்கின்றன. அங்கத்துவ நாடுகளில் திரட்டப்பட்ட மூலதனத்தை இது கடனாக வழங்குகிறது. இலங்கை 1978-இல் 439 மில்லியன் ரூபாவைக் கடனாகப் பெற்றது.

(iii) (ஆ) கொழும்புத் திட்டம்: இது தெற்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு உதவியளிப்பதற்காக 1950-இல் உருவாக்கப்பட்டது. அவுஸ்திரேலியா, கனடா, இலங்கை, இந்தியா, நியூசிலாந்து, பாகிஸ்தான், மலேசியா என்பன அங்கம் வகிக்கின்றன; சிறப்பறிஞர் வழங்கல், வட்டியில்லாக் கடன், பயிற்சி வாய்ப்புகள், கல்வி உபகரணங்கள் என்பன இத்திட்டத்தின் கீழ் உதவியாக வழங்கப்படுகின்றன;

(iv) (இ) உலகவங்கி: இது ஐக்கிய நாடுகள் தாபனத்தின் ஓர் இணைப்பு நிறுவனமாகும். அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு இது கடன் வழங்குகின்றது. 1945-இல் இது அமைக்கப்பட்டது; இலங்கை துரித மகாவலிகங்கை அபிவிருத்தித் திட்டத்திற்கு இந் நிறுவனம் பெருந்தொகைப் பணத்தைக் கடனாக வழங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதிரி விடைத்தாள்: 2

## சமூகக்கல்வி: 1

| | | | |
|---|---|---|---|
| 1 — (4) | 2 — (2) | 3 — (2) | 4 — (3) |
| 5 — (1) | 6 — (1) | 7 — (1) | 8 — (1) |
| 9 — (4) | 10 — (1) | 11 — (4) | 12 — (2) |
| 13 — (2) | 14 — (4) | 15 — (2) | 16 — (2) |
| 17 — (3) | 18 — (3) | 19 — (2) | 20 — (1) |
| 21 — (3) | 22 — (4) | 23 — (3) | 24 — (1) |
| 25 — (1) | 26 — (1) | 27 — (1) | 28 — (4) |
| 29 — (3) | 30 — (1) | 31 — (1) | 32 — (1) |
| 33 — (2) | 34 — (3) | 35 — (3) | 36 — (2) |
| 37 — (1) | 38 — (3) | 39 — (1) | 40 — (3) |

## சமூகக்கல்வி: 2

1. (குறிப்பு: 1, 2, 3, 4 ஆகிய வினாக்களுக்குரிய விடைகளைப் படத்தில் குறிக்க வேண்டும்

(1) (i) 1 அங்குலம் = 1 மைல்

(ii) $\frac{1}{63,360}$

(2) 500' க்கு மேற்பட்ட பகுதிகள் மூன்றுள்ளன: நிறந்தீட்டிக் காட்ட வேண்டும்:

(3) சிறுகுன்று - மூன்று உள்ளன; ஒன்றைக் குறித்துக் காட்டலாம்: மாகாண எல்லை — + — + — + — எனக் காட்டப்பட்டுள்ளது: பாழடைந்த குளம் - வடகிழக்கு மூலையிலுள்ளது: பாலம் X என்ற இடத்திலுள்ளது. சமவெளி என 500' உள் ஓரிடத்தில எழுதிவிடுக.

(4) வடமேற்கு மூலையிலுள்ள நீர்ப்பாசனக் குளத்திற்கு அணைக்குமுன் பச்சை நிறம் தீட்டி நெல் விளை நிலத்தைக் காட்டுக.

(5) வடதிசையில் தோன்றி, தென்திசை நோக்கிப் பாய்ந்து அதன்பின் தென்கிழக்குத் திசைக்குத் திரும்பி, அத்திசையில் பாய்கின்றது.

(6) (i) சந்திக் குடியிருப்பு

(ii) S - பாடசாலை P - அஞ்சல் அலுவலகம் R H - வாடிவீடு


(7) தென்னை (C), கொக்கோ (CAO), நெல்

(8) நீளம் - 6″ அகலம் - 4″ எனவே பரப்பு - = 6 × 4 = 24 சதுரமைல்.

2: (i) மேத்காவுகை, பருவக்காற்றுக்கள், சூறுவளிகள்மூலம் மழை இலங்கைக்குக் கிடைக்கின்றது.

(ii) மேற்காவுகை மழை: இலங்கை மத்திய கோட்டை அடுத்துள்ள ஒரு தீவு. எனவே வெப்ப நிலை உயர்வு. பகல் வேளையில் அதிக வெப்பநிலை காரணமாக ஆவியாகுதல் நிகழும். நண்பகல் அளவில் திரள் மழை முகில்கள் வானில் கூடும். பின்னேரங்களில் இடிமின்னலோடு மழை பாட்டம் பாட்டமாகப் பொழியும். இதனை மேற்காவுகை மழை என்பர்: மார்ச், ஏப்பிரல், செப்டம்பர், ஒக்டோபர் மாதங்களில் கூடுதலாக நிகழும்.

(iii) மன்னார்ப்பகுதி 25″ - 50″ வரையிலான மழையைப் பெறுகின்றது. இது குறைவாகப் பெறக் காரணங்கள்:
(அ) தென்மேல பருவக் காற்றுக் காலத்தில் மன்னார், இந்தியாவின் காற்றொதுக்கில் அமைந்துள்ளது. அதனால், தெ.மே. பருவக்காற்றால் மழை கிடைப்பதில்லை.
(ஆ) வடகீழ்ப் பருவக் காற்றுக் காலத்தில் இக்கரை ஒதுக்குப் புறமான மேற்குக் கரையில் இருப்பதால் மழையைப் பெறுவதில்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. (அ) (i) விளை நிலப்பரப்பினை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்துள்ளது; அவையாவன: (1) குடியேற்றத் திட்டங்களை அமைத்து விளைநிலப் பரப்பை அதிகரித்தல் (2) நீர்ப்பாசன வசதிகளை அமைத்துப் புதிய விளை நிலங்களை உருவாக்கல். உ + ம்: மகாவலிகங்கையை வடக்கே திருப்புவதன் மூலம் ஏறத்தாழ 5 இலட்சம் ஏக்கர் புதிய விளை நிலம் பெறப்படவுள்ளது.

(ii) ஏக்கருக்குரிய விளைச்சலை அதிகரிப்பதன் மூலம் உணவு உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அவையாவன: (i) பசளை, கிருமிநாசினி என்பனவற்றைப் பயன்படுத்தல். (ii) நல்லதர விதைகளைப் பயன்படுத்தல். (iii) நவீன கருவிகளையும் முறைகளையும் கைக்கொள்ளல். (iv) மண் வளத்தைப் பேணல், மண்ணரிப்பைத் தடுத்தல். (v) நவீன பயிர்ச் செய்கை முறைகளில் பயிற்சி அளித்தல்.

(iii) விவசாயிகளுக்குக் கடன் வசதி, சந்தை வசதி, தொழில் நுட்ப வசதி என்பனவற்றைச் செய்து கொடுப்பதன் மூலம் உணவுற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) தொழில் வாய்ப்புகளை அதிகரிப்பதன் மூலமே வேலையில்லாப் பிரச்சனையைத் தீர்த்து வைக்க முடியும்;

(i) பயிர்ச் செய்கை நடவடிக்கைகளில் இளைஞர்கள் இன்று அதிகளவில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்; இளைஞர் விவசாயத் திட்டங்கள் அதற்காகவே உருவாக்கப்பட்டுள்ளன.

(ii) கைத் தொழில்களை அரசாங்கமும் தனியார்களும் ஆரம்பித்து நடாத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கைத்தொழிலாக்கங்கள் தொழில் வாய்ப்புகளை அதிகளவில் அளிக்கக் கூடியன.

(iii) இளைஞர்களுக்கு நவீன தொழில் நுட்பப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. அதனால் நுட்பமான திறமையான தொழிலாளர்கள் கிடைப்பர். சுயமாகவே தொழில்களை ஆரம்பிக்க அவர்களால் முடியும்.

(iv) சுதந்திர வர்த்தகவலயம், தொழில் வாய்ப்புகள் இலங்கை மக்களுக்குக் கிடைப்பதற்காகவே உருவாக்கப்பட்டது.

(v) வெளிநாடுகளில் வேலைவாய்ப்புக்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றன. அண்மை ஆண்டுகளில் மத்திய கிழக்கு நாடுகளுக்கு அதிகளவில் இலங்கையர் தொழில் தேடிச் சென்றுள்ளனர்.

4. (1) மூலதனமும் முதலீடும்: கைத்தொழிலாக்கங்களில் இலங்கை ஈடுபடுவதற்குத் தடையாக இருப்பது மூலதனக் குறைவாகும்; அதனால் சுதந்திர வர்த்தக வலயத்தில் முதலீடு செய்வதற்கு அந்நிய நாட்டவர்களைக் கவரக்கூடிய சலுகைகள் பல காணப்படுகின்றன. சுதந்திர வர்த்தக வலயத்தில் உற்பத்திக்கான மூலப் பொருட்களையும் யந்திரங்களையும் சுங்க வரியின்றி இறக்குமதி செய்யலாம். முதல் ஐந்து ஆண்டுகளுக்குச் சுதந்திர வர்த்தக வலயத்தில் வருமான வரி கட்டத் தேவையில்லை. தொழிலாளர் ஊதியம் குறைவு. நிலக் குத்தகை மலிவு. இவையாவும் அந்நிய மூலதனத்திற்கும் முதலீட்டிற்கும் தூண்டுதலாகவுள்ளன.

(2) உழைப்பும் தொழிற்பேறும்: இலங்கையில் தொழிலாளர் வசதி போதியளவு உள்ளது. மலிவாகத் தொழிலாளரைப் பெற முடியும். சுதந்திர வர்த்தக வலயத்தில் செயற்பாட்டுச் சுதந்திரம் உள்ளது. தொழிலாளர் நலன் பேணும் சட்டங்கள் இங்கு செல்லுபடியாகாது. தொழிலாளரை எடுக்க, சம்பளம் நிர்ணயிக்க, வேலை நீக்க யாவற்றிற்கும் இங்குள்ள தொழிலதிபர்களுக்குச் சுதந்திரம் இருக்கும். தொழிலாளர் நலன் பேணும் தொழிற் சட்டங்கள் இங்கு செல்லுபடியாகாது.

(3) மூலப்பொருள்களும் வழங்கலும்: இலங்கையில் பயன்படுத்தப்படாதிருக்கும் மூலப் பொருட்களைப் பயன்படுத்துவதற்கு சுதந்திர வர்த்தக வலயம் வழிவகுக்கும். றப்பர், படிகமணல், வெண்களி, காரீயம், இல்மனைற் என்பன இன்னமும் கைத்தொழிலாக்கங்களுக்குப் பூரணமாகப் பயன்படுத்தப்படவில்லை. இவற்றோடு சம்பந்தப்பட்ட கைத்தொழில்களுக்கு நாம் மூலப் பொருட்களை வழங்க வாய்ப்புண்டு.

5. (i) இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும். 18 வயதிற்கு மேற்பட்ட வயதுடையவராக இருத்தல் வேண்டும்.

(ii) கடமைகள்.

(அ) நாட்டை நல்வழியில் கொண்டு செல்லக்கூடிய சிறந்த தலைவனைக் கொண்ட கட்சியை அரசாங்கக் கட்சியாகத் தெரிவு செய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) ஆற்றல் வாய்ந்த எதிர்க் கட்சியொன்றைத் தேர்ந்தெடுத்தல்.

(இ) அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் பங்கு கொள்ளல்.

உரிமைகள் :

(அ) தனது வாக்குரிமையைப் பயன்படுத்தி தான் விரும்பிய அபேட்சகருக்கு ஆதரவளித்தல்.

(ஆ) தனக்குரிய அரசியல், பொருளாதார, சமூக உரிமைகளை வாக்குரிமையைப் பயன் படுத்திப் பெற்றுப் பயனடைதல்.

(இ) அரசாங்கத்தின் நடவடிக்கைகளைக் கண்டித்துப் பேசுவதற்கும், எழுதுவதற்கும் உரிமை கொண்டிருத்தல்.

(iii) 18 வயதிற்கு மேற்பட்ட இலங்கைப் பிரஜையாக இருப்பவனும், சிறைத்தண்டனை அனுபவியாதவனும் சுயபுத்தியுடன் இருப்பவனும் பொதுத் தேர்தலில் அபேட்சகராகப் போட்டியிடலாம்.

6. (i) 1945-ம் ஆண்டு

(ii) ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் கீழ்

(iii) (அ) வறுமை, பட்டினி, ஊட்டமின்மை என்பனவற்றை உலக மக்களிடமிருந்து அகற்றுதல்.

(ஆ) உலகச் சனத் தொகை அதிகரித்து வரும் வேகத்தைக் கட்டுப்படுத்தல்.

(இ) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் விவசாய உற்பத்தியளவை உயர்த்தல்.

(ஈ) நியாயமான ஒரு வழியைப் பின்பற்றி உணவுப் பொருட்களை உலகின் எல்லாப் பிரதேசங்களுக்கும் விநியோகித்தல்.

(iv) இந்நிறுவனம் விவசாயம் பற்றிய தகவல்களை அங்கத்துவ நாடுகளுக்குப் பெற்றுக் கொடுக்கும் ஒரு தாபனம். விவசாயம், கடற்றொழில், காட்டியல், போசனை ஆகிய விடயங்கள் சம்பந்தமான தகவல்களை அங்கத்துவ நாடுகளுக்கு இந்நிறுவனம் வழங்கும். இதனால் ஒரு நாட்டின் தொழில் நுட்ப முன்னேற்றம் ஏனைய நாடுகளுக்கும் பயன்படுத்தப்படும். அங்கத்துவ நாடுகளின் நன்மைக்காக ஐக்கிய நாடுகள் தாபனத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தை (U. N. D. P.) இந்நிறுவனம் ஆரம்பித்துள்ளது. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு உதவுவதற்கு வேண்டிய நிதியைப் பெறுவதற்காகச் சர்வதேச புனரமைப்பு அபிவிருத்தி வங்கியிடமிருந்தும் ஏனைய சர்வதேச திட்டங்களிலிருந்தும் நிதிபெற்று நாடுகளுக்கு உதவுகிறது. சர்வதேச கூட்டுறவு வேலைத் திட்டமொன்றின் மூலம் அபிவிருத்தியடையப் போகும் நாடுகளுக்கு உதவ் வழங்கும் வேலைத்திட்டத்தையும் இது நடைமுறைப் படுத்துகிறது.

7. (i) எதிர்க்கட்சியிருத்தல் அவசியம். பெரும்பான்மையினரின் ஆதரவு பெற்ற கட்சி தனது விருப்பத்திற்கேற்ப குடியாட்சிக் கொள்வாத கருமங்களைச் செய்ய முற்படும்போது எதிர்க்கட்சி அவற்றை எதிர்க்கும். மக்களுக்குப் பாதகமான மசோதாக்களை அரசாங்கம் நிறைவேற்றும் போது மசோதாவிற்கெதிராக வாக்களித்து மசோதாவை நிறைவேறாது காலதாமதம் செய்யும்.

(ii) ஆட்சியிலுள்ள நடைமுறை அரசாங்கத்தின்மீது மக்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கும் போது அன்றி அக்கட்சியிலிருப்போர் எதிர்க் கட்சியுடன் சேர நேர்ந்து பலம் குன்றும்போது எதிர்க் கட்சி தானே ஆட்சியைப் பொறுப்பேற்றுக் கருமமாற்றலாம். அன்றியும் இன்று எதிர்க்கட்சி நாளை அரசாங்கக் கட்சியாக மக்களால் தெரிவு செய்யவும் படலாம்.

(iii) அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டையாக இருத்தலாகாது. அரசாங்கம் தனது அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்யும்போது அவற்றைத் தடுத்து நிறுத்தல், அரசின் கருமங்களை மக்களுக்கு அவ்வப்போது எடுத்துக் கூறல். அரசாங்கம் மக்களுக்கு நல்லதைச் செய்யும்போது ஆதரவு அளிப்பதும், தீங்கு விளைவிக்கும் செயல்களுக்குக் கண்டனம் தெரிவிப்பதும் இதன் முக்கிய கடமையாகும்.

8. (i) வயிறார உணவு. ஊட்டமான உணவு, நாகரிக ஆடைகள், நவீன வசதிகளுள்ள வீடுகள், மக்கள் தொடர்புச் சாதனங்கள், வாகனங்கள், தெருக்கள், துறைமுகங்கள், விமானத்தளங்கள், பாதுகாப்பு, கல்வி, சுகாதார மருத்துவ வசதிகள் என்பன யாவும் ஒரு நாட்டில் குறைவற அமையும் போது. அதனைப் பொருளாதார அபிவிருத்தி எனலாம்.

ச. கூ விஞ் வி; 10-13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ii) (அ) நாடுகள் ஒன்றுக்கொன்று உதவி செய்வதன் மூலம் உலகில் எல்லா நாடுகளிலும் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை உருவாக்க முடியும்.

(ஆ) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் மூலதனத்தைப் பெற்றுக் கொள்வதற்கு ஒரே ஒரு வழி வெளிநாட்டு உதவிகளே.

(இ) அபிவிருத்தியடைந்த நாடுகள் அபிவிருத்திக்குத் தேவையான கருவிகளையும் பொறிகளையும் தொழில்நுட்ப உதவிகளையும் பெற்றுக் கொள்வதற்கு வெளிநாட்டு உதவிகள் அவசியமாகும்.

9. (i) (அ) ஐரோப்பிய பொதுச் சந்தை, (ஆ) உங்டாட் (வியாபாரமும் அபிவிருத்தியும் பற்றிய ஐக்கிய நாட்டு மகாநாடு)

(ii) (அ) ஐரோப்பிய பொதுச் சந்தை.

பிரான்ஸ், மேற்கு ஜேர்மனி, பெல்ஜியம், ஒல்லாந்து, லக்சம்பேர்க், இத்தாலி ஆகிய நாடுகள் சேர்ந்து 1957-இல் ஐரோப்பிய பொதுச் சந்தையை உருவாக்கின. 1972-ல் பெரிய பிரித்தானியாவும் சேர்ந்து கொண்டது. ஸ்பெயின், போர்த்துக்கல் ஆகிய நாடுகளும் சேர்ந்து இன்று 9 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. அங்கத்துவ நாடுகளிடையே பொதுவான ஒரு சந்தையை உருவாக்குவதே நோக்கம், அங்கத்துவ நாடுகளிடையே ஏற்றுமதி இறக்குமதித் தீர்வைகள் அறவிடுவதில்லை. இவை தனித்தனி ஆட்சியைக் கொண்டிருப்பினும், வியாபாரத்தில் ஒரே நாடுபோல இயங்குகின்றன.

(ஆ) உங்டாட்

உங்டாட் தாபனம் 1964-இல் உருவாக்கப்பட்டது; அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு சர்வதேச வியாபாரத்தில் நன்மை கிடைக்க வழி வகைகளைச் செய்வது இதன் நோக்கமாகும். மூலப் பொருட்களை ஏற்றுமதி செய்கின்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் சர்வதேச வியாபாரத்தில் பாதிப்புறுகின்றன. எனவே அவற்றின் ஏற்றுமதிப் பொருள்களுக்கு நிலையான விலையைப் பெற்றுக் கொடுப்பதற்கும், அவற்றின் வியாபாரத்தைப் பெருக்குவதற்கும் உங்டாட் தாபனம் முயல்கிறது.

10. (i) (அ) நன்கொடைகள் மூலம்; நன்கொடைகளைப் பெற்ற நாடு அதனைத் திருப்பி வழங்கத் தேவையில்லை.

(ஆ) கடன் பணம் மூலம்; வட்டியின்றித் திருப்பிக் கொடுக்க வேண்டிய கடனும், குறைந்த வட்டிக்குக் கடனும் சாதாரண வட்டிக் கடனும் இதனுள் அடங்குகின்றன.

(இ) வேலைத்திட்டக் கடன் மூலம்; விசேஷ அபிவிருத்தித் திட்டத்திற்காக வெளிநாட்டுப் பணம், பொறிகள், தொழில் நுட்ப உதவிகள் என்பன இதனுள் அடங்கும், விக்டோரியா நீர்த் தேக்கத்தை நிறுவ பிரித்தானியா வழங்கும் கடனுதவி இவ்வகையினதாகும்.

(ஈ) பண்ட உதவிக் கடன் மூலம்; அவசியமான நுகர்வுப் பொருள் இறக்குமதி செய்ய, அல்லது உற்பத்தி செய்ய வழங்கபபடும் உதவிகள் இதனுள் அடங்குகின்றன.

(ii) பொருளாதார அபிவிருத்தியைத் துரிதப்படுத்த இலங்கைக்கு வெளிநாட்டு உதவிகள் அவசியமாகவுள்ளன. அதற்கு இலங்கை பெறுகின்ற வெளிநாட்டு உதவி, நீண்டகாலக் கடன்களாகும். 1978 - இறுதிவரை இலங்கை திருப்பிக் கொடுக்க வேண்டிய கடன் தொகை 14,582 மில்லியன் ரூபாவாகும்; 1978 - இல் மூலதனச் செலவில் 60% இலங்கை வெளிநாட்டுக் கடனைப் பெற்றுள்ளது. இலங்கைக்கு வேலைத்திட்டக் கடனாக நெதர்லாந்து, இந்தியா, ஜேர்மனிக் கூட்டாட்சிக் குடியரசு, குவைற், சீன, கனடா, ஐக்கிய அமெரிக்கா, ஆசிய அபிவிருத்தி வங்கி, உலகவங்கி, ஒபெக் தாபனம் என்பன வழங்கியுள்ளன. அவ்வகையில் இலங்கை கடனாக 1583 மில்லியன் ரூபாவைப் பெற்றிருக்கின்றது. பெற்ற கடனுக்கு வட்டி செலுத்த வேண்டும். அதனால் இலங்கையின் பொருளாதாரம் பாதிக்கப்படுகிறது. 1978 இல் இலங்கை 501 மில். ரூபாவை வட்டியாகச் செலுத்தியுள்ளது.

11. உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்குரிய வழிவகைகளாவன:

(அ) உலகில் விவசாயம் செய்யும் நிலப்பரப்பைக் கூட்டுதல் வேண்டும்; உலகில் 20% நிலம் பயிர்ச் செய்கைக்கு ஏற்றது. ஆனால், இன்று 10% பயன்படுத்தப்படுகிறது.

(ஆ) பயிர் செய்யப்படுகின்ற நிலத்திலிருந்து உச்சப் பயனைப் பெறவேண்டும். அபிவிருத்தியடைந்த நாடுகள் விலை வீழ்ச்சியைத் தடுப்பதற்காகப் பயிர் செய்யக்கூடிய நிலத்தில் ஒரு பகுதியைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிர் செய்யாது விடுகின்றன. ஏக்கருக்குரிய விளைச்சலை அதிகரிப்பதற்கு நவீன விவசாய முறைகளைக் கைக் கொள்ளல் வேண்டும். பசளை, கிருமிநாசினி, நல்லின விதை, என்பன வற்றைப் பயன்படுத்த வேண்டும். அதனால் யப்பான் ஒரு ஹெக்டேருக்கு 52 ஆயிரம் கிலோக் கிறும் விளைச்சல் பெற, இலங்கை ஒரு ஹெக்டேருக்கு 26 ஆயிரம் கிலோக்கிறும் நெல் விளைச்சல் பெறுகிறது.

(இ) நீர்ப்பாசன வசதிகளை அதிகரிப்பது அத்தியாவசியமானது. நதிப்பள்ளத்தாக்குகளை அபிவிருத்தி செய்தல் (அஸ்வான், தெனசி போன்றன) நதிகளைத் திசை திருப்பல் (மகாவலி) நீர்ப்பாசனக் குளங்களை அமைத்தல், தரைக்கீழ் நீரைப் பயன்படுத்தல் (குழாய்க் கிணறுகள் மூலம் - இஸ்ரேல், இந்தியா) கடல் நீரை நன்னீராக்கல் (அல்ஜீரியா, மத்திய கிழக்கு நாடுகள்) செயற்கை மழையைப் பொழிவித்தல் (ஐக்கிய அமெரிக்கா) என்பன மூலம் நீர்ப்பாசன வசதிகளை அதிகரிக்கலாம்.

(ஈ) பயிர்களை அழிக்கின்ற பூச்சிகள், பங்கஸ், வைரஸ் போன்ற நோய்கள் என்பனவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும். அதற்குப் பூச்சி கொல்லிகளைப் பயன்படுத்த வேண்டும்; தாவர நோய்களும் உணவுற்பத்தியைப் பாதிக்கின்றன. நோய்களை எதிர்க்க வல்ல விதையினங்களை உருவாக்க வேண்டும்.

(உ) புதிய உணவு வகைகளை உற்பத்தி செய்ய வேண்டும். கடல்வளம் பயன்படுத்தப்படல் வேண்டும். விலங்குகளை அதிகரிக்க வைத்து பயன் கொள்ள வேண்டும். செயற்கை உணவு களைப் பயன்படுத்த வேண்டும்.

# மாதிரி வினத்தாள்: 3

## சமூகக்கல்வி: 1

| | | | |
|---|---|---|---|
| 1 — (1) | 2 — (1) | 3 — (4) | 4 — (2) |
| 5 — (2) | 6 — (1) | 7 — (2) | 8 — (4) |
| 9 — (2) | 10 — (1) | 11 — (1) | 12 — (3) |
| 13 — (1) | 14 — (1) | 15 — (2) | 16 — (3) |
| 17 — (2) | 18 — (1) | 19 — (3) | 20 — (2) |
| 21 — (1) | 22 — (4) | 23 — (2) | 24 — (3) |
| 25 — (3) | 26 — (1) | 27 — (4) | 28 — (3) |
| 29 — (1) | 30 — (4) | 31 — (3) | 32 — (2) |
| 33 — (1) | 34 — (2) | 35 — (2) | 36 — (1) |
| 37 — (1) | 38 — (2) | 39 — (3) | 40 — (4) |

## சமூகக்கல்வி: 2

1. (குறிப்பு: 1, 2, 3, 4, 5, 6 என்ற வினக்களுக்குப் படத்தில் விடைகளைக் குறிக்க வேண்டும்.)

(1) 2500' - க்கு மேற்பட்ட பகுதிகள் இரண்டுள்ளன.

(2) பிரதான வீதியைச் சிவப்பு நிறத்தால் வரைக. பாலம் கீறுக.

(3) மாகாண எல்லையை —— + —— + —— + —— என நடு ஆற்றில் கீறுக.

(4) கிளையாற்றை நீல நிறத்தால் கீறுக.

(5) குளத்தின் அணையை நீலநிறத்தால் அல்லது கறுப்பு நிறத்தால் கீறுக.

(6) D - என்ற இடத்தில் பிரதான வீதிக்கு இருமருங்கிலும் குடியிருப்பு அடையாளம் (▪▪▪) இடுக. S. P. D. என்ற எழுத்துக்களையும் குறிக்க.

(7) இப்பிரதேசத்தின் மேற்குப் பாகம் உயரமான மலைப் பிரதேசமாகும். 500 அடியிலிருந்து 3000 அடிகள் வரை உயர்ந்து செல்கின்றது. இப் பிரதேசத்தின் பெரும் பாகம் சமவெளி யாகும். எனினும் கிழக்குப் பாகத்தில் சில குன்றுகள் உள்ளன. இப் பிரதேசத்தின் மத்தி யில் தெற்கு — வடக்காகப் பிரதான நதி ஓடிப் பாய்கின்றது.

(8) இப்பிரதேச மக்களது தொழில் முக்கியமாக விவசாயமாகும். குளத்திலிருந்து நீரைப் பெற்று நெல் செய்வர். நதிக்கரையோரங்களில தோ[illegible] செய்யக்கூடிய வாய்ப்புகளுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. (i) கொழும்பு — ஈரவலய தாழ்நிலம்.
மட்டக்களப்பு — உலர்வலயத் தாழ்நிலம்.
நுவரெலியா — ஈரவலய உயர்நிலம்.
மன்னார் — வறள்வலயத் தாழ்நிலம்.

(ii) கொழும்பு கடல்மட்டச் சமவெளியிலுள்ளது அதனால் அங்கு வெப்பநிலை 80·5°ப: ஆக வுள்ளது. நுவரெலியா 6000 அடி உயரமான மலைப்பிரதேசத்திலுள்ளது: அதனால் ஒவ்வொரு 300 அடிக்கும் 1°F வீதம் வெப்பநிலை குறைவடையும்: அதனால் அங்கு வெப்பநிலை 60° ப ஆகவுள்ளது.

(iii) கொழும்பு அதிக மழையைப் பெறக் காரணம் தென்மேல் பருவக்காற்றும் மலைநாடும் ஆகும்: ஈரலிப்பான தென்மேல் பருவக்காற்றை மத்திய மலைநாடு தடுத்து ஒடுங்கச் செய்வதால் கொழும்பு அதிக மழையைப் பெறுகின்றது. மட்டக்களப்பு தென்மேல் பருவக்காற்றின் காற்றொதுக்கிலுள்ளது. தென்மேல் பருவக்காற்று இங்கு வரண்ட கச்சான் காற்றாக வீசுவதால் மழை குறைவு:

4. (i) நெல், குரக்கன், மிளகாய்.
தேயிலை, றப்பர், தென்னை.

(ii) இலங்கையின் பொருளாதாரம் ஏற்றுமதி - இறக்குமதிப் பொருளாதாரமாகும்: தேயிலை, றப்பர், தென்னைப் பொருட்களை ஏற்றுமதி செய்து, எமக்குத் தேவையான உணவுப் பொருட்களை இறக்குமதி செய்து கொள்கின்றோம். நமது நாட்டிற்குரிய அந்நியச் செலாவணியில் பெரும் பங்கு இந்த வர்த்தகப் பயிர்களின் மூலமே கிடைக்கின்றது.

(iii) (அ) நெல்:- நெற் செய்கை இலங்கையில் மகா போகத்திலும், சிறு போகத்திலும் நடைபெறுகின்றது. வரண்ட பிரதேசத்தில் நெல் மழையை நம்பியும், நீர்ப்பாசனத்தின் மூலமும் செய்கைபண்ணப்படுகின்றது. புராதன கருவிகள் நெற் செய்கைக்குப் பயன்படுகின்றன: மரக் கலப்பை, மாடுகள், மண்வெட்டி என்பன இம்முறைக்கு உபயோகிக்கப்படுகின்றன: ரக்ரர்களும் இன்று பயன்படுத்தப்படுகின்றன. தூவி விதைத்தலும், நாற்று நடுதலும் நடைபெறுகின்றது. கைகளினால் அறுவடை நடைபெறும்;

(ஆ) தேயிலை: மலைச் சாய்வுகளில் தேயிலை செய்கைபண்ணப்படுகிறது. தேயிலையை மரமாக வளர விடாமல், செடியாக 3 அல்லது 4 அடி உயரத்தில் வெட்டிவிடுவர். தேயிலைக் கொழுந்து பெண்களால் கொய்யப்படும். காலத்திற்குக் காலம் தேயிலைச் செடி 'கவ்வாத்து' பண்ணப்படும். பசளை இடப்படும். கொய்யப்பட்ட தேயிலைக் கொழுந்து தட்டுகளில் காயவிடப்பட்டு, அரைக்கப்படுகின்றது. அரைக்கப்பட்ட தூள் யந்திரங்கள் மூலம் வறுக்கப்பட்டு தேயிலைத் தூள் பெறப்படும்.

5. (i) பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையை விருத்தி செய்வதற்குப் போக்குவரத்தை விரைவு படுத்த வேண்டியிருந்தது. பொருட்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்வதற்கும் நேரடி நிர்வாகத்திற்கும் வீதிகள் அவசியமானவை.

(ii) இராஜகாரியமுறை. (கட்டாயமாக ஒவ்வொரு குடிமகனும் இலவசமாகக் குறிப்பிட்ட சில நாட்களுக்கு வேலை செய்தல்)

(iii) பயிர்ச் செய்கைக்கு வேண்டிய உபகரணங்கள், பொருட்கள் என்பனவற்றை விரைவாகவும் குறைந்த செலவிலும் கொழும்புபோன்ற நகரங்களிலிருந்து மலை நாட்டிற்கு லொறிகள், புகையிரதம் மூலம் அனுப்பக்கூடியதாகவிருந்தது: விளைபொருட்களை துறைமுகங்களுக்குப் புகையிரத மூலம் மலிவாகவும் விரைவாகவும் கொண்டு செல்ல முடிந்தது.

6. (அ) (i) ஆதியில் ஆரிய குடியேற்றங்கள் மல்வத்தோயாவிற் கண்மையிலும் அனுராதபுரம், புத்தளக் கரையோரம்வரை பரந்து காணப்பட்டது. அப்பிரதேசத்து மக்களை அடக்கி சிங்கள மன்னர்கள் அரசை ஸ்தாபித்தமையால் அனுராதபுரத்தைத் தலைநகரமாக்கினர்

(ii) மாந்தை துறைமுக வாயிலாகத் தென்னிந்தியாவிலிருந்து மல்வத்தோயாக் கரைமூலமும் ஏனைய துறைமுகங்கள் (கோகர்ணம்) மூலமும் வரும் படையெடுப்புகளைத் தடுத்து நிறுத்தச் சிறந்த பாதுகாப்பான பிரதேசமாக அனுராதபுரம் விளங்குகிறது:

(iii) குளங்கள், நீர்ப்பாசனத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு ஏற்ற பௌதிகத் தன்மையுடைய பிரதேசமாகையால் அனுராதபுர மன்னர்கள் சிறந்த இராச்சியத்தை அமைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) அனுராதபுரக்கால மன்னருள் தலைசிறந்த மன்னன் மகாசேனனாவான். காரணம் இவன் ஆற்றிய பொருளியற் பணிகள் நெடுங்காலம் நிலைத்துள்ளது. இவனால் நிறுவப்பட்ட குளங்கள் மின்னேரியா, கவுடுலுவாவி, ஹுருலுவாவி போன்ற 16 குளங்களையும் பல கால்வாய்களையும் கட்டினான்; சமயத்துறையிலும் இவனது புகழ் நிலைபெற்றுள்ளது; ஜேதவனராம விகாரையை நிறுவி மகாயான பௌத்தத்தை ஆதரித்துத் தழுவியமையாலும் வரலாற்றில் புகழ் பெற்றுள்ளான்.

(இ) (1) லோகமகாபாய - இக்கட்டிடம் துட்டகாமினியினால் நிறுவப்பட்டது. ஒன்பது மாடிகளையுடைய உபோசத மண்டபமாகும். இது மகாவிகாரைப் பிக்குகளுக்காக நிறுவப்பட்டது. இக்கட்டிடம் அனுராதபுரத்தில் அமைந்துள்ளது.

(2) அபயகிரிவிகாரை :- இவ்விகாரையை வட்டகாமினி நிறுவினான்: கிரியின் சமணப் பள்ளியைத் தரைமட்டமாக்கி அவ்விடத்தில், அபயகிரி விகாரை கட்டப்பட்டது. இது புதுமைக் கருத்துக்களையும், மாறுதல்களையும் வரவேற்றது. வட்டகாமினிக்கு அரசைப்பெற உதவிய மகாதிசதேரருக்காகக் கட்டப்பட்டதாகும்.

(3) சிகிரியா :- சிகிரியாவைத் தலைநகராக்கியவன் காசியப்பனாகும். இவன் தம்பி மொகலனுக்குப் பயந்து சிகிரியா உச்சியில் அரசமாளிகையை நிறுவினான். இதன் சுவர்களில் அஜந்தா ஓவியங்களை ஒத்த சித்திரங்கள் தீட்டப்பெற்றுள்ளன. இவை இன்றும் இவனுக்கு அழியாப் புகழை அளித்துள்ளது.

(4) திசாவாவி :- இது தேவநம்பிய திசனால் கட்டப்பட்டது. இது அனுராதபுரத்தில் முதற் கட்ட காலத்தில் நிறுவப்பட்டது. பிற்காலத்தில் தாதுசேனனால் காலவாவியிலிருந்து திசாவாவிவரை 54 மைல் நீளமான கால்வாய் (ஜயகங்கை) அமைக்கப்பட்டது; இது இன்று பெரியதொரு நீர்த்தேக்கமாகவுள்ளது.

6. (i) போர்க்களத்தில் காயப்பட்டோர், நோயுற்றோர் ஆகியோருக்கு சிகிச்சையளிக்க வேண்டுமென்பதற்காக.

(ii) ஹென்றிடுனன்ட் என்பவரினால்,

(iii) 1864 ஆம் ஆண்டு.

(iv) போர்க்காலத்தில் காயப்பட்டோருக்கு மருத்துவ உதவியளித்தல், அமைதிக் காலத்தில் அந்தந்த நாட்டு மக்களின் சுகாதாரம் பேணுதல், நோயைத் தடுத்தல், எதிர்பாராத விபத்துக்களால் துன்புறுவோரின் துயர் நீக்குதல்.

7. (i) வாக்குரிமை.

(ii) 1931 ஆம் ஆண்டு டொனமூர் ஆணைக் குழுவினால்;

(iii) சர்வாதிகார ஆட்சியில் கட்சிமுறை, தேர்தல் என்பன இடம் பெறுவதில்லை; தனிபொருவன் ஆட்சியை எதிர்க்கும் கட்சி தோன்றுவதேயில்லை.

(iv) நாட்டை நன்முறையில் ஆட்சி செய்யக்கூடிய பலம் வாய்ந்த அரசாங்கத்தைத் தெரிவு செய்வதற்காக.

(v) பல கட்சி இருப்பது ஜனநாயகம் நன்கு செயல்படத் தடையாக அமையும், காரணம் பல கட்சிகள் அரசியலில் ஈடுபடுவதால் மக்கள் பலம்வாய்ந்த எந்தவொரு கட்சியையும் தேர்ந்தெடுக்க முடியாது. இக்கட்சிகள் பொதுசன அபிப்பிராயத்தை தமக்குச் சாதகமாக்கி அரசாங்கத்தைப் பலமற்றதாக்கிவிடும்.

8. (i) (அ) உலக நாடுகள் எதுவும் இன்று சர்வதேச வியாபாரத் தொடர்பின்றித் தனித்து இயங்க முடியாத நிலையிலுள்ளன: உலகில் எந்த ஒரு நாடும் தனது மக்களுக்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் உற்பத்தி செய்து கொள்ள முடியாது;

(ஆ) இன்று ஒரு நாட்டின் வயலிலே விளைகின்ற உணவை, இன்னொரு நாட்டு மக்கள் உண்கின்றனர்; இலங்கை மக்கள் கோதுமையை உண்கின்றனர்; பிரித்தானியர் தேயிலையை அருந்துகின்றனர்;

(இ) இயற்கை வளங்கள் ஒரே பிரதேசத்திலில்லை; உதாரணமாகப் பெற்றோலியம் அராபிய நாடுகளில் உள்ளது. அது பல நாடுகள் யாவற்றிற்கும் தேவையாகவுள்ளது;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) தொழில் நுட்ப விருத்தியால் ஒவ்வொரு பொருளும் மிகக் கூடுதலாக உற்பத்தியாகின்றன. யந்திரங்கள் பெருந் தொகையில் முடிவுப் பொருட்களை உற்பத்தி செய்கின்றன; அவற்றைத் தேவையான நாடுகளுக்கு விற்பது அவசியம்;

எனவே மேற்குறித்த காரணங்களுக்காக சர்வதேச வியாபாரம் இன்றைய உலகில் முக்கியம் பெற்றுள்ளது;

(ii) நன்மைகள் :

(அ) தொழிற்பகுப்பு விருத்தியடைகின்றது. குறைந்த செலவில் கூடுதலான பொருள்களை உற்பத்தி செய்து கொள்ள முடிகிறது.

(ஆ) இலாபந் தரும் பொருள்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் சர்வதேச வியாபாரம் வாய்ப்பு அளிக்கிறது

(இ) வெளிநாட்டு வியாபாரத்தினால் சர்வதேசத் தொடர்புகள் விரிவடைகின்றன; புதிய பொருட்களையும், புதிய கருத்துக்களையும் பரிமாறிக் கொள்ளச் சர்வதேச வியாபாரம் உதவுகிறது;

தீமைகள் :

(அ) சர்வதேச வியாபாரத்தால் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் பெரிதும் பாதிப்படைந்து வருகின்றன; அபிவிருத்தியடைந்த நாடுகளே அதிக இலாபமடைகின்றன;

(ஆ) சர்வதேச வியாபாரத்தில் அறிமுகமாகும் பொருட்களால் சில நாடுகளின் தேவைகள் அதிகரித்து, உள்நாட்டுப் பொருளாதாரத்தைப் பாதிப்படைய வைக்கலாம்;

(இ) அந்நிய நாடுகள் மூலதன முதலீட்டுக்கு முன்வரலாம்; அதனால், ஒரு நாட்டில் விரும்பத்தகாத விளைவுகள் தோன்றலாம்.

9; (i) உலகிலே ஒரு நாடு இன்னொரு நாட்டிற்கு உதவி வழங்குவதை வெளிநாட்டு உதவி (அன்னிய உதவி) என்பர். சர்வதேச நிறுவனங்கள் வழங்குகின்ற உதவிகளும் வெளிநாட்டு உதவிகளுள் அடங்கும். வெளிநாட்டு உதவி பணமாக அல்லது பொருளாக அல்லது சேவையாக அமையும்;

(ii) (அ) நாடுகள் ஒன்றுக்கொன்று உதவி செய்வதன் மூலம் உலகில் எல்லா நாடுகளிலும் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை உருவாக்க முடியும்; ஒவ்வொரு நாடும் தனது நவீன அறிவாற்றல்களை ஏனைய நாடுகளுடன் பரிமாறிக் கொள்வதனால், எல்லா நாடுகளும் பயன்பெறமுடியும்.

(ஆ) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் மூலதனத்தைப் பெற்றுக்கொள்வதற்கு ஒரே வழி, வெளிநாட்டு உதவிகளே;

(இ) அபிவிருத்தியடைந்த நாடுகள் அபிவிருத்திக்குத் தேவையான கருவிகளையும் பொறிகளையும் தொழில் நுட்ப உதவிகளையும் பெற்றுக் கொள்வதற்கு வெளிநாட்டு உதவி அவசியமாகும்.

10; (i) சனத் தொகைப் பிரச்சினைகளாவன: (அ) உணவுப் பிரச்சினை (ஆ) தொழிற் பிரச்சினை (இ) வதிவிடப் பிரச்சினை (ஈ) சமூகநலன் சேவைகளில் ஏற்பட்ட பிரச்சினைகள்;

(ii) சனத் தொகைப் பெருக்கம் சூழல்மீது பாதகமான முறையில் தாக்கம் விளைவிக்கின்றது. பயிர்ச் செய்கைக்காகக் காடுகள் அழிக்கப்படுகின்றன. வீடு கட்டுவதற்காகவும், தளபாடங்கள் செய்வதற்காகவும் விறகுத் தேவைக்காகவும் காட்டு மரங்கள் வெட்டப்படுகின்றன அதனால், மண்ணரிப்பு ஏற்படுகின்றது. இயற்கை வளம் குன்றுகிறது. மண்ணரிப்பினால் நிலப்பகுதிகள் வளமற்றுப் போகின்றன. வடமேற்கு இந்தியா, பாகிஸ்தானில் சில பகுதிகள், வட ஆபிரிக்காவில் சில பகுதிகள், இவ்வாறு மண்ணரிப்புக்குள்ளாகி வளமிழந்து போயுள்ளன மண்ணரிப்புக் காரணமாக நீர்ப்பாசனக் குளங்கள் நிரம்ப வாய்ப்புண்டு. அதனால் வெள்ளப் பெருக்கு அபாயம் ஏற்படலாம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. (i) (அ) வளிமாசடைதல் (ஆ) நிலம் மாசடைதல் (இ) நீர்மாசடைதல்

(ii) வளிமாசடைதல் : உலகின் அபிவிருத்தியடைந்த நாடுகளில் இயங்கிவருகின்ற ஆயிரக் கணக்கான தொழிற்சாலைகள் ஓயாது கக்குகின்ற புகை, வளியை மாசடைய வைக்கின்றது. நகரங்களில் பெற்றல், டீசல் முதலான எரிபொருட்களை எரித்தபடி விரைகின்ற கோடிக் கணக்கான மோட்டார் வாகனங்களும் வளியை அழுக்கடைய வைக்கின்றன. உதாரணமாக, யப்பான் வீதிகளில் சுவாசிப்பதற்குப் போதிய சுத்தமான வளியில்லை. வட இங்கிலாந்து, வட ஐரோப்பிய நாடுகள், யப்பான் என்பனவற்றில் தொழிற்சாலைகளினால் வளிமண்டலம் மாசடைந்திருப்பது அதிகமாகும். ஓரிடத்தில் வளி மாசடைந்தால் அது உலகமெங்கும் மிக்க வேகமாகப் பரவிவிடுகின்றது. உயிரினங்களின் ஆரோக்கியம் பாதிக்கப்படுகிறது.

# மாதிரி வினாத்தாள்: 4

## சமூகக்கல்வி 1

| | | | |
|---|---|---|---|
| 1 — (4) | 2 — (3) | 3 — (3) | 4 — (1) |
| 5 — (3) | 6 — (1) | 7 — (1) | 8 — (1) |
| 9 — (2) | 10 — (1) | 11 — (2) | 12 — (1) |
| 13 — (2) | 14 — (3) | 15 — (2) | 16 — (3) |
| 17 — (1) | 18 — (3) | 19 — (4) | 20 — (3) |
| 21 — (4) | 22 — (2) | 23 — (1) | 24 — (3) |
| 25 — (2) | 26 — (1) | 27 — (2) | 28 — (4) |
| 29 — (2) | 30 — (2) | 31 — (2) | 32 — (1) |
| 33 — (4) | 34 — (3) | 35 — (1) | 36 — (3) |
| 37 — (1) | 38 — (4) | 39 — (3) | 40 — (1) |

## சமூகக்கல்வி 2

1. (குறிப்பு : இவை படத்தில் குறிக்கவேண்டியவை)
(1) —— (2) இரு கோடுகளை யாழுகளை - நீலநிறத்தால் இடுக.
(3) —— (4) பிரதான வீதியைச் சிவப்பு நிறத்தால் வரைக; (5) தெரியாது ×. (6) சிறு வீதியைக் கபில நிறத்தால் வரைக; (7) ——, (8) குடியிருப்புக் காட்டி S, P, S, D என்பனவற்றைக் குறிக்க.

2. (i) நெல், சோளம், குரக்கன்.
(ii) தேயிலை, றப்பர், தென்னை.
(i) நெல் செய்கை பண்ணப்படும் பிரதேசங்கள் - தென்மேல் பிரதேசம், வரண்ட பிரதேசம்.
தேயிலை செய்கை பண்ணப்படும் பிரதேசங்கள் - கண்டி, நாவலப்பிட்டி, கற்றன், நுவரெலியா, பண்டாரவளை.

(ii) நெல் - ஒரு பருவ மழையும் ஒரு பருவ வாட்டமும் தேவை, சராசரி 80" மழையையும் 75° ப. வெப்ப நிலையும் தேவை. மழை குறைந்த பகுதிகளில் நீர்ப்பாசன வசதி தேவை. வண்டல் மண் தேவை. சமவெளிகளில் நெற் செய்கை சிறப்பாக நடைபெறும்.

தேயிலை - தேயிலை ஒரு அயனப் பயிர். பகல் நேர வெப்பநிலை 75° ப ஆக இருக்க வேண்டும். 80" — 120" மழைவீழ்ச்சி இன்றியமையாதது. சிறிதளவு உறை பனியைப் பயிர் தாங்கும். பயிரின் வேர்களைச் சுற்றி நீர் நிற்கக் கூடாது. இதனால் தேயிலை மலைச்சரிவுகளில் பயிராகும். தேயிலைச் செய்கைக்கு அதிக தொழிலாளர் தேவை.

3. (i) தூண்டில் வீசுதல், வலை வீசுதல், நச்சுக் காய்களையும் தளிர் வகைகளையும் இடுதல், கரப்பு, நீர் இறைத்தல், சிறுவலை.
(ii) சுயதேவையைப் பூர்த்தி செய்வதற்கு மட்டுமே இம் முறை ஏற்றது. இதனைத் தொழிலாகக் கொண்டுள்ளவர்களுக்கு புராதன முறைகளால் லாபமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iii) ட்றோலர், இயந்திரப் படகுகள்;

(iv) மீனைப் பழுதடையாமல் குளிரூட்டப்பட்டுத் தூர இடங்களுக்கு அனுப்புதல், பதப்படுத்தப்பட்டு ரின்களில் அடைத்துப் பிற தேசங்களுக்கு அனுப்புதல், குளிரூட்டப்பட்ட லொறிகள், புகையிரதப் பெட்டிகளில் பிற தேசங்களுக்கு அனுப்புதல்.

(v) இலங்கை மக்களது சுயதேவையைப் பூர்த்தி செய்வதுடன் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளோர் லாபமடையலாம்; நாட்டு மக்களில் பலருக்கு வேலை வழங்க முடியும்; பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம்;

(vi) வெளிநாட்டுச் செலாவணியைப் பெறலாம், வேலையில்லாப் பிரச்சனைக்குத் தீர்வுகாண முடியும்;

4. (i) (அ) விரைவான குடிப்பெருக்கம்;

(ஆ) உடலுழைப்பை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள் யாவும் தாழ்ந்தவை என்ற மனப்பான்மை.

(ii) இலங்கையில் இன்று ஏறத்தாழ 6 இலட்சம் பேர் வேலையில்லாதுள்ளனர். இவர்களில் 4½ இலட்சத்தினர் 15 — 24 வயதுக்குட்பட்டோராவர். 70 ஆயிரம் பேர் 25 — 34 வயதுக்குட்பட்டோராவர்; கல்வித் துறையில் தொழில்களுக்குத் தக்க பயிற்சி மாணவர்களுக்கு அளிக்கப்படாமை, மனித உழைப்புக்குப் பதிலாக யந்திரங்களைப் பயன்படுத்துகின்றமை முதலியன வேலையின்மைப் பிரச்சினையைப் பெரிதாக்கியுள்ளன.

(iii) (அ) விவசாயத் துறையை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு கைத்தொழில்களை ஆரம்பித்தமை.

(ஆ) சுதந்திர வர்த்தக வலயத்தை ஆரம்பித்தமை;

(இ) விவசாயத்தையும் வேறு தொழில்களையும் ஆரம்பிப்பதற்கு அவசியமான மூலதனத்தை மக்கள் எளிதில் பெற வங்கிகளுடன் வசதிகளை ஏற்படுத்தியமை.

5. (i) (அ) இலங்கையில் அந்நியர் தமது லாபம் கருதி பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையில் அதிக கவனம் செலுத்தி, நெற்செய்கையில் கவனம் செலுத்தாது விட்டமை.

(ஆ) ஏற்றுமதிப் பயிருக்கென அதிக பணத்தை செலவழித்ததுடன் விவசாயத்திற்குரிய நீர்ப்பாசனத் திட்டங்களை அழிவடையும் நிலைக்கு ஆளாக்கினர்;

(இ) மக்கள், தோட்டங்களில் இராஜகாரிய முறையால் கட்டாயமாக வேலை செய்தமையும், போர்க்காலங்களில் விவசாயத்தைக் கைவிட்டமையும் பிரதான காரணங்களாகும்.

(ii) திருத்தம் பெற்ற பயிர் வளர்ப்பு முறைகளை மேற்கொண்டமை, நீர்ப்பாசன வசதிகளை விஸ்தரித்தமை, உற்பத்தியைப் பெருக்குவதற்கான அரசாங்க முயற்சி, விலை உத்தரவாதத் திட்டத்தைப் புகுத்தியமை, களை கொல்லிகள் கிருமிநாசினிகள் உரங்கள் என்பனவற்றை உபயோகிக்கும் முறைகளை மேற்கொண்டமை.

6. (அ) அமைச்சரவைக்குப் புறம்பான அமைச்சர்கள்:

மாவட்டங்களின் நிர்வாகத்தைச் சிறப்பாக நடாத்துவதற்காக மாவட்ட அமைச்சர்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இந்த மாவட்ட அமைச்சர்கள், அமைச்சரவைக்குப் புறம்பான அமைச்சர்களாவர்; அவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள பல்துறை அரசாங்க அதிகாரிகளதும் உதவியுடன், மாவட்டங்களின் அபிவிருத்தி வேலைகளைத் துரிதமாகச் செயற்படுத்துவார்கள். நிர்வாகப் பரவலின் ஒரு முறை இதுவாகும்;

(ஆ) ஓம்புட்ஸ்மன்:

சனநாயக சோஷலிசக் குடியரசின் புதியதொரு நியமனம், ஓம்புட்ஸ்மன் என்ற பாராளுமன்ற ஆணையாளராவார். இவரை ஜனாதிபதி நியமனம் செய்வார்; அரசாங்க உத்தியோகத்தர்கள், கூட்டுத்தாபன உத்தியோகத்தர்கள், வேறு நிறுவன உத்தியோகத்தர்கள் தமது கடமைகளைச் சரிவரச் செய்யாது, பொதுமக்களைப் பாதிக்கும்போது, பொதுமக்கள் நியாயமான நிவாரணம் பெற பாராளுமன்ற ஆணையாளரிடம் முறைப்பாடு செய்யலாம். நிர்வாக அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடை செய்பவராக இவர் திகழ்கிறார்; அநீதி இழைக்கப்பட்ட பொதுமக்கள், இவரிடம் முறையிடுவதால் அதிக செலவின்றி நீதிபெற வாய்ப்புண்டாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. (i) சர்வதேச சங்கம் 1-ம் உலக யுத்தத்தின் பின் நிறுவப்பட்டது.

(ii) (அ) உலக நாடுகளிடையே சமாதானத்தை நிலை நாட்டுதல்.

(ஆ) வெவ்வேறு நாடுகளிடையே ஏற்படும் சச்சரவுகளை மகாநாடுகளில் கூடித் தீர்த்து வைத்தல்;

(இ) அங்கத்துவ நாடுகள் தம்முள் போர் தொடுப்பதில்லையென முடிவு உறுதி செய்வதுடன், போர் ஏற்பட்டால் அவற்றைத் தடுத்தல்.

(ஈ) சர்வதேசங்களுக்கிடையே தோன்றும் பிரச்சனைகளைக் கூட்டு முயற்சியால் தீர்த்துக் கொள்ளுதல்.

(iii) ஆலோசனைச் சபை, மகாநாடு, நிரந்தரக் காரியாலயம்.

8. (i) (அ) உலக உணவு விவசாய நிறுவனம் (F. A. O.)

(ஆ) கொழும்புத் திட்டம்;

(இ) உலக வங்கி,

(ii) (அ) உலக உணவு விவசாய நிறுவனம் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் கீழ் இயங்கி வரும் ஒரு பகுதியாகும். இது குறைவிருத்தி நாடுகளுக்கு தொழிற்நுட்ப உதவியை அளிக்கின்றது. பயிர்ச் செய்கையோடு சம்பந்தப்பட்ட சகல துறைகளிலும் இது முன் வந்து உதவிவருகின்றது. பயிர்ச் செய்கை, விலங்கு வளர்ப்பு, மீன் வளர்ப்பு, நீர்ப்பாசன வசதிகள் முதலான பல துறைகளிலும் உதவுகின்றது.

(ஆ) கொழும்புத் திட்டம் 1951 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட நிறுவனம். பொதுநலவமைப்பு நாடுகளினதும் தென்கிழக்காசிய குறை விருத்தி நாடுகளினதும் பொருளாதார முன்னேற்றத்திற்காக அமைக்கப்பட்டது. நிதியுதவி, உபகரண உதவி, தொழில்நுட்ப உதவி என்பனவற்றினை இந்நிறுவனம் வழங்குகிறது.

(இ) 1944 இல் அமைக்கப்பட்ட உலக வங்கி, பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகளுக்கு அந்நாடுகளின் அபிவிருத்திக்காகக் கடன் வசதிகளை வழங்கிவருகின்றது. பொருளாதாரத் திட்டங்களுக்கு, உலக வங்கி கடன் வழங்கும்போது முதலிடம் தருகின்றது.

9. (i) கடமை :

(அ) தான் விரும்பிய கட்சிக்கு வாக்களித்தல்;

(ஆ) சட்டத்திற்கும் ஒழுங்கிற்கும் கட்டுப்பட்டு நடத்தல்;

(இ) அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் ஈடுபட்டுத் தனது அபிப்பிராயங்களைக் கூறல்;

(ஈ) அரசாங்கத்திற்கு ஒழுங்காகச் செலுத்தவேண்டிய வரிகளைச் செலுத்தல்.

(உ) சமூகத்தவர்க்கு இடைஞ்சல்களை ஏற்படுத்தாது வாழ்தல்;

(ஊ) நாட்டின் அமைதிக்குப் பங்கம் ஏற்படும் நடவடிக்கைகளில் ஈடுபடாதிருத்தல்;

(எ) தகுதியுடைய ஒவ்வொருவரும் அபேட்சகராகப் போட்டியிட்டு அரசியலில் ஈடுபடுதல்.

உரிமைகள் :

(அ) வாக்குரிமை;

(ஆ) பேச்சுரிமை, எழுத்துரிமை, பத்திரிகைச் சுதந்திரம்;

(இ) விரும்பிய இடத்தில் வாழும் உரிமை;

(ஈ) சங்கங்கள் அமைக்கும் உரிமை.

(உ) விரும்பிய சமயத்தைக் கடைப்பிடிக்கும் உரிமை;

(ஊ) சட்டத்தின் முன் சமன் எனக் கருதப்படும் உரிமை;

(எ) வழக்காடும் உரிமை;

(ஏ) பொருளாதார உரிமை;

(ii) அரசாங்கத்தின் நடவடிக்கைகள் பற்றி பொதுமக்கள் கொள்ளும் அபிப்பிராயம்; ஆட்சியாளர் பொதுசன அபிப்பிராயத்தை மதித்து நடக்க வேண்டியவர்களாக இருப்பதனால் தான் ஜனநாயகம் நன்கு நடைபெறுகிறது.

ச. க. வி; வி: 10-15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iii) பத்திரிகை, வானொலி, துண்டுப் பிரசுரங்கள், கட்சித் தலைவர்களின் மேடைப் பேச்சுக்கள்;

(iv) இச் சாதனங்களை அரசாங்கம் கட்டுப்படுத்தினால் அரசின் நடவடிக்கைகளை மக்கள் உடனுக்குடன் அறிய முடியாது. இதனால் மக்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது; இச் சாதனங்கள் மூலம் மக்கள் தமது அபிப்பிராயங்களை வெளியிடவும் வாய்ப்பேற்படுகிறது. இச் சாதனங்கள் கட்டுப்படுத்தப்பட்டால் அரசாங்கம் சர்வாதிகார முறையில் ஆட்சியைக் கொண்டு நடத்தும்.

10; (i) (1) உலகில் சமாதானத்தை இத் தாபனம் நிறுவப்பட்ட காலந் தொட்டு இற்றைவரை பேணிவந்துள்ளது. உ+ம்; 1946—1958வரை அணுசக்தியின் உற்பத்திக் குறைப்பு, படைக் குறைப்பு என்பனவற்றிற்காக நடவடிக்கைகள் எடுத்துள்ளது. ஆயினும் அமெரிக்கா, ரூஷியா ஆகியவற்றின் வேற்றுமையால் முற்றாக இவற்றைத் தடுக்க முடியவில்லை;

(2) மத்திய கிழக்கில் சமாதானத்தைப் பாதுகாப்பதற்கு ஐ. நா. படையை ஈடுபடுத்தி தடுத்துள்ளது. அரபு, யூத யுத்தங்களும் இவ்வாறு தடுக்கப்பட்டது.

(3) இந்தியாவும் பாகிஸ்தானும் காஸ்மீரில் யுத்தம் செய்ததைத் தடுத்துள்ளது. கொரியாவில நடைபெற்ற யுத்தத்தை நிறுத்தியதுடன் லெபனன், சிரியா ஆகிய நாடுகளுக்கு சுதந்திரம் கொடுத்துள்ளது. லெபனன் பகுதியிலிருந்து இஸ்ரவேலின் படைகளை வெளியேற்ற ஐ: நா. படைகளை அனுப்பி உதவியது.

(4) ஈரான் — அமெரிக்கப் பூசலை சமாதானப் படுத்த முயன்று கொண்டிருக்கிறது. ஈராக் — ஈரான் யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்த முயலகிறது.

(ii) இவ்வாறு 3 ஆம் உலகப் போரை மூளவிடாது அவ்வப்போது தடுத்து நிறுத்தும் ஸ்தாபனமாக இயங்குகிறது. உலகத்தில் சமாதானத்தையும் மனித உரிமையையும் நிலைநாட்டுகிறது. பல்வேறு பொருளாதார ஸ்தாபனங்கள் மூலம் உலகத்தின் கல்வி, விவசாயம், சுகாதாரம், மருத்துவம் ஆகிய துறைகளை வளர்ச்சியடையச் செய்கிறது. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்குப் பல்வேறு உதவிகளை வழங்குதல்மூலம் அபிவிருத்தியடையச் செய்கிறது.

11; (i) அபிவிருத்தியடைந்துவருகின்ற நாடுகள் மூலப் பொருட்களை அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றன. றப்பர், சணல், பஞ்சு, தேயிலை, கோப்பி, கொக்கோ, இரும்புத்தாது, செம்பு, போக்சயிற் என்பன அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. அபிவிருத்தியடைந்த நாடுகள் இந்த முதனிலைப் பொருட்களை வாங்கி, உற்பத்திப் பொருட்களாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு விற்கின்றன. இந்த வர்த்தக முறையில் அதிக இலாபமடைவன அபிவிருத்தியடைந்த நாடுகளே.

(ii) (அ) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் ஏற்றுமதி செய்கின்ற முதனிலைப் பொருள்களின் விலை, அவற்றை வாங்கும் நாடுகளால் நிர்ணயிக்கப்படுகின்றன. ஒரு றக்ரரை வாங்க 1960 இல், இலங்கைக்கு 2·2 மெற்றிக் தொன் தேயிலை தேவைப்பட்டது. ஆனால் இன்று அந்த றக்ரரை வாங்க 5·3 மெற்றிக் தொன் தேயிலை தேவைப்படுகின்றது.

(ஆ) சர்வதேச சந்தையில் முதனிலைப் பொருட்களின் விலை ஒரே மட்டத்தில் இல்லை; உற்பத்திப் பொருட்களின் விலை அதிகரிப்பதுபோல, முதனிலைப் பொருட்களின் விலை கூடவில்லை; உதாரணமாக 1974 இல் ஒரு இறாத்தல் கொக்கோவின் விலை 1·17 டொலராக இருந்தது. அது 1975 இல் 0 16 டொலராகக் குறைந்தது.

(இ) முதனிலைப் பொருள்களுக்குள்ள போட்டியும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளைப் பாதிக்கின்றன. சணலுக்குப் பதிலாக நைலோனும், றப்பருக்குப் பதிலாக செயற்கை றப்பரும் பயன்படுத்தப்படுகின்றன. மூலப் பொருட்களை ஏற்றுமதி செய்யும். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் இதனால் பாதிப்படைகின்றன.

(ஈ) மூலப் பொருட்களையும் உற்பத்திப் பொருட்களையும் ஏற்றி இறக்குவன அபிவிருத்தியடைந்த நாடுகளின் கப்பல்களேயாகும் (90%). அதனால் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் அதிக கப்பற் செலவை எதிர் நோக்குகின்றன.

12; (அ) உலக உணவு நெருக்கடிக்கான முதலாவது காரணம் அதிகரித்துவிட்ட குடிப் பெருக்கமாகும்; உலகச் சனத் தொகை வருடா வருடம் 75 மில்லியன் ($7\frac{1}{2}$ கோடி) அதிகரிக்கின்றது;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) அபிவிருத்தியடைந்து வரும் நாட்டுக் கமக்காரர்கள் கல்வியறிவு குறைந்தவர்கள்; அதனால், அதிக விளைச்சலைத் தரும் விதைகளை நடல், பசளையிடல், பூச்சி கொல்லிகளைப் பயன்படுத்தல், பொருத்தமான தொழில் நுட்ப அறிவு பெறல் போன்றவைவற்றில் ஈடுபடுவதில்லை; அதனால் உணவுற்பத்தி பாதிப்படைகிறது.

(இ) உலகில் உற்பத்தியான உணவுப் பொருள்கள் சரியான முறையில் உலக மக்களிடையே விநியோகிக்கப்படவில்லை; அபிவிருத்தியடைந்த நாடுகள் உலக வர்த்தகத்தில் தானிய விலை வீழ்ச்சியடையாமல் இருப்பதற்காக உணவு உற்பத்தியைப் பல வழிகளில் குறைத்து விடுகின்றனர்.

(ஈ) உணவுப் பயிர்ச் செய்கைக்கு வறட்சி, பூச்சி பீடைகள் என்பனவற்றினால் ஏற்படுகின்ற அழிவும் அதிகமாகும்; ஆபிரிக்காவில் வெட்டுக்கிளிகள் தானியப் பயிர்களை அதிகளவில் அழிக்கின்றன; உணவுப் பொருட்களில் ஏறத்தாழ 20 சதவீதம். இவ்வாறு அழிக்கின்றது என மதிப்பிட்டுள்ளனர்.

# மாதிரி வினாத்தாள்: 5

## சமூகக்கல்வி: 1

| | | | |
|---|---|---|---|
| 1 — (2) | 2 — (4) | 3 — (2) | 4 — (3) |
| 5 — (3) | 6 — (1) | 7 — (3) | 8 — (2) |
| 9 — (3) | 10 — (2) | 11 — (3) | 12 — (4) |
| 13 — (4) | 14 — (1) | 15 — (3) | 16 — (2) |
| 17 — (2) | 18 — (2) | 19 — (3) | 20 — (2) |
| 21 — (1) | 22 — (2) | 23 — (2) | 24 — (4) |
| 25 — (2) | 26 — (4) | 27 — (4) | 28 — (1) |
| 29 — (3) | 30 — (1) | [illegible] — (2) | 32 — (3) |
| 33 — (2) | 34 — (4) | 35 — (2) | 36 — (1) |
| 37 — (4) | 38 — (3) | 39 — (4) | 40 — (1) |

## சமூகக்கல்வி: 2


1. (விடைக்குரிய படங்களை 60-ம் பக்கத்தில் பார்க்கவும்)

2. (1) 1978. (2) பக்களால்.
(3) பிரதம மந்திரியே. (4) பொதுநலவாயத்.
(5) அணிசேராக் (6) 15
(7) துரித மகாவலிகங்கை. (8) ஒன்பது.
(9) பத்து. (10) 200.

3. (அ) இலங்கையின் மலைநாட்டில் பிரித்தானியர் முதன் முதல் கோப்பி, சிங்கோனாப் பயிர்களைப் பயிரிட்டனர். அவை நோயால் வருந்த குறிப்பேசகவே, தேயிலை, றப்பர், கொக்கோ என்பனவற்றைப் பணப்பயிர்களாகப் பயிரிட்டனர்.

மலை நாட்டின் பௌதிக நிலைமைகளான: தரைத்தோற்றம், மழை வீழ்ச்சி, வெப்பநிலை என்பன பணப் பயிர்களின் செய்கைக்கு உகந்தியாக அமைந்தன: நீர்வழிந்தோடக் கூடிய மலைச் சாய்வுகள், இப் பணப் பயிர்களின் செய்கைக்கு அவசியமானவை அத்துடன் 75" க்கு மேற்பட்ட மழை வீழ்ச்சியும், 60° ப — 70° ப வரையிலான வெப்பநிலையும் தேவை. இவை யாவும் மத்திய மலை நாட்டில் உள்ளன.

(ஆ) பணப் பயிர்களின் வருகையால் இலங்கையின் பொருளாதார அமைப்பு மாற்றமடைந்தது; தன்னிறைவுப் பொருளாதாரம் மாற்றமடைந்தது முக்கியமாக மத்திய மலை நாட்டில் சுதேசிகளுக்குச் சொந்தமாகவிருந்த காணிகள் பிரித்தானியரால் பறித்தெடுக்கப்பட்டன; பிரித்தானியத் தோட்டத் துரைமாருக்கு உதவும் வகையில், பிரித்தானியர் தரிசு நிலச் சட்டத்தைக் கொண்டு வந்து, காட்டு நிலங்களைச் சுவீகரித்து குறைந்த விலையில தோட்டத்







(குறிப்பு: விடைக்குரிய படம் வினுவில் தந்த படத்திலும் சற்று விரிந்த பரப்பை அடக்கியது; ஆனல், அளவுத்திட்டம் ஒன்றே.)

துரைமாருக்கு வழங்கினர்; இந்தக் காட்டு நிலங்கள் பறிபோனதால் மக்களது வருமானம் குன்றியதோடு, அவர்களது தொழில்களும் பறிபோயின; அதனால், வாழ்க்கைத்தரம் குறைந்தது; பிரித்தானியரால் ஆரம்பிக்கப்பட்ட பெருந் தோட்டங்களில், சுதேசிகள் வேலை செய்ய முன் வராமையால், பிரித்தானியர் இந்தியாவிலிருந்து ஏராளமான, மலிவான தொழிலாளரை இங்கு தருவித்தனர். மலைநாட்டில் இந்திய வம்சாவழியினர் நிலைபெற இந்த நிகழ்ச்சி யுதவியது. மேலும், பிரித்தானியர் கண்டி, நுவரெலியா முதலான பகுதிகளில் குடியேறினர். ஆங்கிலப் பழக்கவழக்கங்கள் அதனால் நிலைபெற்றன. பழைய கிராமிய அமைப்பு சீர்குலைந்தது.

(இ) மலைநாட்டில் ஆரம்பிக்கப்பட்ட பணப் பயிர்களின் செய்கையால் இலங்கை இன்று பல அனுகூலங்களைப் பெறுகின்றது. அவை:

(i) இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பயிர்களாக இவை விளங்குகின்றன. இலங்கைக்குக் கிடைக்கின்ற அந்நியச் செலாவணியில் பெரும்பகுதி, இப் பணப் பயிர்களின் ஏற்றுமதி மூலமே கிடைக்கின்றது.

(ii) மலை நாட்டில் போக்குவரத்துப் பாதைகள் நன்கு அமைந்தமைக்குப் பணப் பயிர்களின் செய்கை உதவியது. பெருந் தோட்டங்களையும் துறைமுகங்களையும் இணைத்துப் புகையிரதப் பாதைகளும் வீதிகளும் அமைக்கப்பட்டன.

(iii) கல்வி வசதி, மருத்துவ வசதி, சுகாதார வசதி முதலான சமூகநலச் சேவைகள் மலை நாட்டில் உருவாக்கப்பட்டன.

பணப் பயிர்களின் செய்கையால் ஏற்பட்ட பிரதி கூலங்கள் வருமாறு:

(i) இலங்கையின் தன்னிறைவுப் பொருளாதாரம் சீர்குலைந்து, இறக்குமதி — ஏற்றுமதி இருமைப் பொருளாதாரம் ஏற்பட்டது.

(ii) நுகர்ச்சிப் பொருட்களுக்கு அந்நியச் செலாவணியில் பெரும் பகுதி செலவாகியது.

(iii) விதேசியப் பழக்கவழக்கங்கள் நாகரிகங்கள் இலங்கையில் நிலைகொள்ளக் காரணமாயிற்று.

(iv) மலை நாட்டில் காடுகள் அழிக்கப்பட்டன. மண்ணரிப்பு ஏற்பட்டது. இயற்கைவளம் குன்றியது. நிலத்தட்டுப்பாடு உருவாகியது.

4. இலங்கையின் 1972 ஆம் ஆண்டினதும், 1978 ஆம் ஆண்டினதும் அரசியல் யாப்புகள் வேறுபாடானவை. அவற்றை நோக்குவோம்.

(அ) ஜனாதிபதி பதவி: 1972 ஆம் ஆண்டின் யாப்பின்படி, ஜனாதிபதியைப் பிரதம மந்திரியே நியமித்தார். மந்திரி சபைக்கே அதிக அதிகாரம் இருந்தது; ஜனாதிபதிக்கு பெயரளவிலேயே அதிகாரம் இருந்தது. இவருக்கும் கட்சிக்கும் எதுவித தொடர்புமில்லை. எத்தனை தடவைகள் வேண்டுமாயினும் ஜனாதிபதியாக இவரைப் பிரதம மந்திரி நியமிக்க முடியும். பிரதம மந்திரி விரும்பினால் இவரைப் பதவியிலிருந்து நீக்கிவிடவும் முடியும்.

1978 ஆம் ஆண்டின் யாப்பின்படி, ஜனாதிபதி மக்களால் தெரிவு செய்யப்படுவார். இவருக்குப் பூரண நிறைவேற்று அதிகாரம் உள்ளது. அரசாங்கக் கட்சியின் தலைவர் இவரே. இவரே பிரதம மந்திரி, மந்திரிகள் ஆகியோரை நியமிப்பார். இருதடவைகள் ஒருவர் ஜனாதிபதியாக இருக்க முடியும்.

(ஆ) பாராளுமன்றம்: 1972 ஆம் ஆண்டின் யாப்பின்படி பாராளுமன்றம், தேசிய அரசுப் பேரவை என வழங்கப்பட்டது. தேசிய அரசுப் பேரவையில் மக்களால், தனியங்கத்தவர் தொகுதி மூலம் தெரிவாகிய அங்கத்தவர்கள் அங்கம் வகித்தனர். நியமன அங்கத்தவர்கள் எவரும் இல்லை. பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் ஒரு தொகுதியின் அங்கத்தவர் பதவி நீங்கினால், அல்லது இறந்தால் காலியான இடத்திற்கு இடைத் தேர்தல் நடைபெறும்.

1978 ஆம் ஆண்டு யாப்பின்படி பாராளுமன்றத்திற்குரிய அங்கத்தவர்கள், விகிதாசாரப் பிரதி நிதித்துவம் மூலம் தெரிவாகுவர். பழைய தொகுதி அமைப்பு நீக்கப்பட்டு, தேர்தல் மாவட்ட அமைப்பு உருவாக்கப்பட்டது: அதன்படி ஒவ்வொரு தேர்தல் மாவட்டமும் பல அங்கத்தவர்களைக் கூட்டாகத் தெரிவு செய்யும் தொகுதிகளாக அமைக்கப்பட்டன. கட்சிப்பட்டியல் முறையின்படி விகிதாசாரத் தேர்தல் முறை நிகழும். காலியான இடங்களுக்கு, தேர்தல் பட்டியலிலிருந்து மற்றொருவர் தெரிந்தெடுக்கப்படுவார்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) அமைச்சரவை: 1972 ஆம் ஆண்டு யாப்பின்படி பிரதம மந்திரியும், அமைச்சரவையும் அதிகாரமுடையனவாக விளங்கின. தேர்தல் மூலம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களில் பெரும்பான்மையைக் கொண்ட கட்சியின் தலைவர் அமைச்சரவையின் தலைவராகவும் (பிரதம மந்திரி) அவரால் அங்கத்தவர்களிலிருந்து தெரிவு செய்யப்படுபவர்கள் அமைச்சர்களாகவும் இருப்பர். இவர்களைக் கொண்டதே அமைச்சரவையாகும். பிரதம மந்திரியே பெரும் அதிகாரமுடையவராக விளங்கினர்.

1978 ஆம் ஆண்டு யாப்பின்படி அமைச்சரவையின் தலைவர் ஜனாதிபதியாவார்; அமைச்சரவையின் அமைச்சர்கள் ஜனாதிபதியினாலேயே நியமிக்கப்படுவார்கள்; ஜனாதிபதியின் விருப்பின் பேரில் பதவி நீக்கம் செய்யப்படலாம். ஜனாதிபதியே பிரதம மந்திரியையும் நியமிப்பார். அமைச்சரவைக் கூட்டங்களுக்கு ஜனாதிபதியே தலைமை தாங்குவார். பாராளுமன்றத்திற்கு வெளியே பிரதமரின் அதிகாரம் குறைவு. இந்த யாப்பில் அமைச்சரவை சாராத, மாவட்ட அமைச்சர்களுக்கும் இடமுள்ளது. ★

5. (அ) ஒரு பிரதேசத்தில் நிலவுகின்ற காலநிலை நிலைமைகளுக்கு இணங்கத் தாமாகவே வளர்கின்ற தாவரங்களை இயற்கைத் தாவரம் என்பர். பொதுவாக இயற்கைத் தாவரம் அப்பிரதேசத்தின் மழை வீழ்ச்சி வெப்பநிலை, மண், தரைத்தோற்றம் என்பனவற்றிற்கு இணங்கவே வளரும். முக்கியமாக மழை வீழ்ச்சி, வெப்பநிலை என்பன இயற்கைத் தாவரத்தை நிர்ணயிக்கின்றன.

(ஆ) இலங்கையின் இயற்கைத் தாவரங்கள் வருமாறு:

(i) ஈரப் பருவக் காற்றுக் காடுகள்.
(ii) மலைக் காடுகள்.
(iii) உலர் பருவக் காற்றுக் காடுகள்.
(iv) முட்காடுகள் (வறள்நிலவெளி)
(v) பத்தனைப் புல்வெளிகள்.
(vi) தலாவாப் புல்வெளிகள்.

இலங்கையின் தென்மேல் தாழ் நிலத்திலும், மலைநாட்டின் மேற்குப் பாகத்திலும் ஈரப் பருவக் காற்றுக் காடுகள் காணப்படுகின்றன. இக்காடுகள் என்றும் பசுமையானவை; அடர்த்தியானவை, மென் மரங்களாகும். தளப்பத்து, கித்துள், பலா, மலைவேம்பு என்பன சில மரங்களாகும். இப்பகுதிகளில் ஆண்டுக்குரிய மழை வீழ்ச்சி 75″ மேலாகும். அதனால் இக்காடுகள் வளர்ந்துள்ளன.

இலங்கையின் மலைநாட்டில் 3000 அடிகளுக்கு மேல் மலைக் காடுகளுள்ளன. கினு, தம்ரோ, மாகிறியா, சப்பு என்பன குறிப்பிடத்தக்க மரங்கள் ஆகும். உயரம் காரணமாக வெப்பநிலை குறைவாகவும் மழை கூடுதலாகவும் இருப்பதால் இக் காடுகள் இடைவெப்ப வலயக் காடுகளை ஒத்துள்ளன.

இலங்கையின் வரண்ட பிரதேசத்தில் உலர் பருவக் காற்றுக் காடுகள் உள்ளன. 50″ — 75″ மழை இப் பிரதேசங்களில் பெய்வதால், இக்காடுகள் வளர்ந்துள்ளன. இவை வைர மரங்கள்; முதிரை, கருங்காலி, பாலை, யாவறணை என்பன இக் காட்டு மரங்களாகும். சராசரி 40 அடி உயரமானவை.

மழை வீழ்ச்சி மிகக் குறைந்த (50″ — குறைவு) அதி வரண்ட பிரதேசங்களில் வறள்நிலவெளிகள் காணப்படுகின்றன. இவை முட்காடுகளாகும். இவை வறட்சியைத் தாங்கக்கூடியன. ஆனைமுள்ளி, வீரை காம்பை, நாகதாளி என்பன இவ்வகை மரங்களாகும்.

மலைநாட்டின் கிழக்குப் பாகத்தில் தலாவா, பத்தனைப் புல்வெளிகள் காணப்படுகின்றன. இவை மலைநாட்டின் மலை ஒதுக்கில் இருப்பதால், மழை குறைவு. அதனால், புற்கள் வளர்ந்துள்ளன. ★

6. இலங்கை அபிவிருத்தியடைந்து வரும் ஒரு நாடாகும். அதன் அபிவிருத்திக்குப் பல தடைகள் உள்ளன. அவை:

(அ) மூலதனப் பற்றாக்குறை: இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மூலதனப் பற்றாக்குறை பெருந் தடையாகும். அந்நியச் செலாவணியில் பெரும்பகுதி, நுகர்ச்சிப் பொருட்களை இறக்குமதி செய்வதற்குச் செலவாகின்றது. அதனால், இலங்கை அரசிடம் சேமிப்பு இல்லை. அதே போல, இலங்கை மக்கள் வறியவர்களாகவிருப்பதால், அவர்களிடமும் சேமிப்புக் குறைவு. எனவே, மூலதனப் பற்றாக்குறை காணப்படுகிறது. மூலதனப் பற்றாக்குறை நீர்ப்பாசன வசதிகளை அமைப்பதற்கும், கைத்தொழிற்சாலைகளை நிறுவுவதற்கும் பெருந் தடையாக இருக்கின்றது.

(ஆ) வேலைவாய்ப்பின்மை: இலங்கையில் இன்று ஏறத்தாழ 4½ இலட்சம் மக்கள் வேலைவாய்ப்பின்றியுள்ளனர். 18 வயதுக்கும் 59 வயதுக்குமிடைப்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பு அவசியமாகும்; அதிகரித்துவரும் குடித்தொகை வேலைவாய்ப்பின்மையை உருவாக்கி வருகின்றது. பயிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கை நடவடிக்கைகள், அதிக மக்களுக்கு வேலை வழங்கா; கைத்தொழில் நடவடிக்கைகள் விருத்தியடையாமை, வேலைவாய்ப்புக்களை உருவாக்கவில்லை; எனவே, இலங்கை மக்கள் பலர், வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்புகளைத் தேடிச் செல்கின்றனர்;

(இ) சனத் தொகை அதிகரிப்பு: இலங்கையின் இன்றைய குடித் தொகை 15 மில்லியன் ஆகும்; இக் குடித் தொகை 1971 இல் 12 மில்லியனாக இருந்தது; எனவே, இலங்கையின் குடித் தொகை அதிகரித்து வருகின்றது. 1971/81 இடையில் வளர்ச்சி வீதம் 17·1 ஆகும்; சுகாதார விருத்தி, ஊட்ட உணவு, மலேரியா ஒழிப்பு என்பன சிசு மரண வீதத்தையும் இறப்பு வீதத்தையும் குறைத்துள்ளன; அதனால், குடிசன அதிகரிப்பு வீதம் கூடியுள்ளது; இன்று இச் சனத் தொகை வளர்ச்சி வீதம் 1·7% ஆகும்;

7; (அ) தம்பதெனியா, யாப்பகூவ, கம்பளை;

(ஆ) காலத்திற்குக் காலம் தலைநகர்களை மாற்றியமைக்கான முதற் காரணம் அந்நியரின் படையெடுப்புக்களாகும்; கலிங்கத்துமாகன் போன்றவர்களின் படையெடுப்புக்களால், வரண்ட பிரதேச நீர்ப்பாசனக் குளங்கள் அழிக்கப்பட்டன; அதனால் மக்களது விவசாய முயற்சிகள் பாதிப்படைந்தன. அத்துடன், மலேரியா போன்ற கொள்ளை நோய்கள் பரவின; இவையாவும் மக்களை இடம் பெயர வைத்ததால், தலைநகர்களும் மாறி மாறியமைந்தன;

(இ) மலைகளால் அல்லது ஆறுகளால் அல்லது காடுகளால் சூழப்பட்ட இயற்கை அரண் பொருந்திய பகுதிகள் தலைநகர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. அத்துடன் மக்களின் விவசாயத்திற்கு வாய்ப்பாக நீர் கிடைக்கும் பகுதிகளாகவும், மண்வளம் கொண்ட பகுதிகளாகவும் தலைநகர்களைத் தேர்ந்தெடுத்தனர்;

8; (அ) **நீதிமன்றக் கருமங்கள்:** நீதித் துறை சுதந்திரமான நிறுவகமாகும்; உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், மேல் நீதிமன்றம் ஆகிய முக்கிய மூன்று நீதிமன்றங்களும் ஏனைய நீதி நிறுவனங்களும் இலங்கையில் உள்ளன. நீதிபதியை ஜனாதிபதியே நியமிப்பார்; காரணம் நீதித்துறை சுதந்திரமாக இயங்க வேண்டுமென்பதற்காக நீதிச் சேவை ஆணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது; பிரதம நீதியரசர் இதன் தவிசாளர், ஏனைய இரு நீதிபதிகளும் இதில் அங்கம் வகிப்பர். இவர்களை நியமிப்பவர் ஜனாதிபதியாவர். இதன் பதவிக் காலம் 5 ஆண்டுகளாகும்; இவற்றைத் தவிர நீதிமன்றக் கருமங்களைச் செய்வதற்கு மாவட்ட நீதிமன்றம், ஆரம்ப நீதிமன்றம், தொழில் நீதிமன்றம் என்பனவுமுள்ளன;

(ஆ) **மாவட்ட நிர்வாகம்:** நமது நாட்டின் நிர்வாகத்தைப் பன்முகப்படுத்தும் நோக்கத்திற்காக மாவட்டசபைகள் உருவாக்கப்பட்டன; இலங்கை 25 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு மாவட்ட நிர்வாகத்தையும் ஒவ்வொரு மாவட்டசபை நடாத்தி வருகின்றது. இம்மாவட்ட சபை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு மாவட்ட அமைச்சர் பொறுப்பாக இருக்கிறார். மாவட்ட அரசாங்க அதிபர் செயலாளராக இருக்கிறார்; உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுகளில் பிரதேச அபிவிருத்தி சபைகள் நிறுவப்பட்டிருக்கின்றன; இவையும் மாவட்ட நிர்வாகத்திற்குதவி வருகின்றன.

(இ) **உள்ளூராட்சி:** உள்ளூராட்சி நிர்வாகம் 1978 ஆம் ஆண்டுக்கு முன், மாநகரசபை, நகரசபை, பட்டினசபை, கிராமசபை என வகுக்கப்பட்டு நடைபெற்றது. இன்று மாநகரசபை, நகர சபை, பிரதேச அபிவிருத்தி சபை, கிராமோதய சபை என நான்காக வகுக்கப்பட்டு நடை பெற்று வருகின்றது; ஏற்கனவே இருந்த கிராமசபை, பட்டினசபை என்பன நீக்கப்பட்டு விட்டன. இந்த உள்ளூராட்சி அமைப்புக்கள் உள்ளூராட்சி அமைச்சு, உள்ளூராட்சித் திணைக்களம் என்பனவற்றின் பொறுப்பில் இயங்குகின்றன. இச் சபைகள் அபிவிருத்திக்காகவும் நாட்டு நலனுக்காகவும் பணிபுரியும். சுகாதாரம், சந்தை, உணவுப் பொருள் விற்பனை செய்யுமிடங்களைப் பரிசோதித்தல், மருத்துவம், சனசமூக நிலையம், மின்சாரம், நீர் வழங்கல் என்பனவற்றை விருத்தி செய்தலும் வழங்கலும் இதன் வேலை. இதற்கு வேண்டிய நிதி வரிகள் மூலம், மத்திய அரசாங்கத்திடமிருந்தும் பெறப்படும்.

9; (அ) உலக உணவு அபிவிருத்தியில் உபயோகிக்கத்தக்க மூன்று முறைகள் வருமாறு:

(I) விளை நிலப்பரப்பை அதிகரித்தல். இன்று உலகில் 20% நிலப்பரப்பு பயிர்ச் செய்கைக்குட்படக் கூடியதாகும். ஆனால், இன்று 12% நிலப்பரப்பே பயிர்ச் செய்கைக்குட்பட்டிருக்கின்றது. நீர்ப்பாசன வசதிகளை அமைப்பதன் மூலம் மிகுதி நிலப்பரப்பையும் விளை நிலமாக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ii) நவீன விஞ்ஞான தொழில் நுட்ப முறைகளைக் கையாளல் மூலமும் உணவு அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும். இரசாயன உரப்பசளை உபயோகம், கிருமிநாசினி உபயோகம், நவீன பொறியணிகளின் உபயோகம் என்பன மூலம் உணவுற்பத்தியை அதிகரிக்கலாம்.

(iii) பல பயிர்ச் செய்கை, பல போகச் செய்கை, உச்ச விளைவைத் தரும். நாற்று நடல், களை பிடுங்கல் முறைகளைக் கைக்கொள்ளல், அதிக விளைச்சலைக் குறுகிய காலத்தில் தரும் விதைகளைப் பயன்படுத்தல் என்பன மூலமும் உணவு அபிவிருத்தியை ஏற்படுத்தலாம்.

(ஆ) உலக உணவுப் பிரச்சனைக்கான காரணிகள் வருமாறு:

(i) விரைவான குடிப் பெருக்கம்.

(ii) உணவுப் பொருட்கள் சரிவரப் பகிர்வு செய்யப்படாமை;

(iii) சில நாடுகளில் உணவு அழிவுக்குட்படுத்தப்படுதலும், மிருக உணவாகப் பயன்படுதலும்,

(iv) பற்றுக்குறை நிலவும் நாடுகளில் உற்பத்தியை அதிகரிப்பதற்குத் தேவையான தொழில் நுட்பம், மூலதனம் முதலியன கிடையாமை;

(v) உணவுற்பத்திக்கு உதவக் கூடிய விளை நிலங்கள் முற்றாகப் பயன்படுத்தப்படாமை,

(vi) இயற்கைக் கோளாறுகள்;

(vii) உணவு ஒதுக்கம் — சில நாட்டுமக்கள் உண்ணும் உணவினை வேறுநாட்டு மக்கள் உண்ணாது ஒதுக்கியுள்ளனர். உதாரணமாக இந்தியாவில் மாட்டிறைச்சி இந்துக்களால் உண்ணப் படுவதில்லை.

(இ) உணவுற்பத்தியை அதிகரிப்பதற்காக, உலக உணவு விவசாய நிறுவனம் பல நடவடிக் கைகளை எடுத்துள்ளது: விவசாய விருத்திக்கும் கடற்றொழில் விருத்திக்கும் ஆலோசனை களையும் தொழில் நுட்ப உதவிகளையும் வழங்கிவருகின்றது. வறிய நாடுகளுக்கு நிவாரண உதவிகளை வழங்கி வருகிறது. குடிப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தல், விவசாய உற்பத்தி யளவை உயர்த்தல், உணவுப் பொருள்களை உலகின் எல்லாப் பிரதேசங்களுக்கும் விநியோகித்தல் என்பனவற்றையும் இந் நிறுவனம் ஆற்றி வருகின்றது.

10. (அ) வாக்களிக்கும் உரிமை: ஜனநாயக முறை ஆட்சியில் வாக்களிக்கும் உரிமை முக்கிய மானதாகும். 18 வயதுக்குட்பட்ட யாவருக்கும் வாக்களிக்கும் உரிமை யுண்டு; மந்த புத்தியுள்ளோருக்கும் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டவர்களுக்கும், நாட்டுப் பிரசைகள் அல்லாதோருக்கும் வாக்குரிமையில்லை. அறிவுடனும் பொறுப்புணர்ச்சியுடனும் மக்கள் தமது வாக்குகளை அளிப்பதன் மூலம், நிர்வாகத்தில் பங்குகொள்கின்றனர். பொறுப்பு டன் வாக்களிக்காவிட்டால், பொருத்தமற்றவர்கள் நிர்வாகத்தில் அமர்வர். வாக்களித் தல் மூலம், மக்கள் அரசாங்கத்தைத் தெரிவு செய்கின்றனர்.

(ஆ) தேர்தல்கள்: அரசாங்கத்தைத் தெரிவு செய்வதற்காகவே தேர்தல்கள் நடாத்தப்படு கின்றன. மக்கள் வாக்குரிமையைப் பயன்படுத்தி, பிரதிநிதிகளைத் தெரிவு செய்வர். கூடுதலான பிரதிநிதிகளைப் பெறும் அரசியல் கட்சி அரசாங்கத்தை அமைக்கும். இலங் கையில் பாராளுமன்றத் தேர்தல், விகிதாசாரப் பிரதிநிதித்துவ அடிப்படையில் நடை பெற்று வருகின்றது. அரசியல் கட்சிகள் தமது கொள்கைகளையும் வேலைத்திட்டத்தை யும் மக்கள் முன் வைக்கின்றன. தேர்தலில் வாக்களிப்பதன் மூலம், மக்கள் தாம் விரும்பும் அரசியற் கட்சியைத் தெரிவு செய்வர். இலங்கையின் ஜனாதிபதி தெரிவுக்கும், பாராளுமன்றத் தெரிவுக்கும், மாவட்டசபைத் தெரிவுக்கும், மாநகரசபை, நகரசபைத் தெரிவுகளுக்கும் தேர்தல்கள் நடைபெற்று வருகின்றன.

(இ) பொது மக்கள் அபிப்பிராயம்: மக்களுக்காகவே ஆட்சி ஆகும். அதனால், பொது மக்கள் அபிப்பிராயம் முக்கியம் பெறுகின்றது. ஜனநாயக நாட்டில் பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம் என்பன இருப்பதால், பொதுமக்கள் அபிப்பிராயம் ஆட்சியின் முக்கிய அம்சமாகக் கருதப்படுகின்றது. பொதுஜன அபிப்பிராயத்தை வேக மாக ஏற்படுத்துதல் ஜனநாயகத்தின் வெற்றிக்கு அத்தியாவசியமாகும். புதினப் பத்திரி கைகள் பொது மக்களின் அபிப்பிராயத்தைப் பிரதிபலிக்கின்றன. பொது மக்களின் அபிப்பிராயத்துக்கு இணங்க அரசாங்கம் நடந்து கொள்ள முடியும். அதனால் சர்வாதி காரம் தலைதூக்காது பாதுகாக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகக்கல்வி பயிற்சி
# நூல்கள்
# 6, 7, 8, 9, 10

## 1. துணை நூல்கள்

1. சமூகக்கல்வி — 10
   (க குணராசா, கமலா குணராசா
   ஆ. இராஜகோபால், இ. லோகநாதன்)
2. சமூகக்கல்வி — 8 பகுதி 2

## 2. படவேலை நூல்கள்

1. ஆறாந்தரச் சமூகக்கல்விப் படவேலை
2. ஏழாந்தரச் சமூகக்கல்விப் படவேலை
3. எட்டாந்தரச் சமூகக்கல்விப் படவேலை
4. சமூகக்கல்விப் படவேலை 9 & 10

## 3. வினு - விடை நூல்கள்

1. புதிய சமூகக்கல்வி வினு - விடை — 6
2. புதிய சமூகக்கல்வி வினு - விடை — 7
3. புதிய சமூகக்கல்வி வினு - விடை — 8
4. புதிய சமூகக்கல்வி வினு - விடை — 9
5. புதிய சமூகக்கல்வி வினு - விடை — 10


**ஸ்ரீ லங்கா புத்தகசாலை,**
**காங்கேசன்துறை வீதி — யாழ்ப்பாணம்.**


ஸ்ரீ லங்கா அச்சகம், யாழ்ப்பாணம், போன்: 24175 - 24211